1114

AN HISTORY

1114

[IN TAMIL]

FOR FORM III

OFFICE OF … OF BOOKS
-7 DEC 1939
MADRAS

3593

3728

3593

By

K. R. CHANDRASEKARA IYER, M.A., L.T.

T. V. CHELLAPPA SASTRY & SONS.

இந்து தேச சரித்திரம்

மூன்றும் புத்தகம்

[மூன்றுவது பாரத்துக்குரியது]

954

இது
K. R. சந்திரசேகர அய்யர், M.A., L.T.,
உதவி ஆசிரியர் சேதுபதி ஹைஸ்கூல் மதுரை
எழுதியது.

சென்னை:
டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்

காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்தது] [விலை அணா 10

First Edition November 1939.

T. V. C. PRESS,
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-7 DEC 1959
MADRAS

முகவுரை

இப் புத்தகம் மூன்றுவது பாரத்திற்குரியது. அரசாங்கத்தாரால் தயாரிக்கப்பட்டுள்ள பாட திட்டத்தை யனுசரித்தது. சிறுவர்களும், சிறுமிகளும் சுலபமாகப் படிக்குமாறு எளிய நடையிலெழுதப்பட்டுள்ளது. சமரஸ நோக்கங்களையும், தேச பக்தியையும் அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. சரித்திரப் பாடத்தில் ஆர்வமுண்டாகும் வண்ணம் விஷயங்கள் மிகக் கவனத்துடன் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. போதனு சாதனங்கள் ஏற்றவாறும், போதுமானபடியும், பாடங்களினிடையே இணைக்கப்பெற்றிருக்கின்றன. இப் புத்தகம், பாலர்களுக்கும், பாலிகைகளுக்கும் பெரிதும் பயன் படுமெனவும், ஆசிரியர்களின் பேராதரவைப் பெறுமெனவும் எண்ணுகிறேன். குற்றங் குறைகளிருப்பின் எடுத்துக் காட்டுமாறு வேண்டுகிறேன்.

K. R. சந்திர சேகரன்

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	ஐரோப்பிய நாடுகளுடன் வியாபாரமும், வியாபார மார்க்கங்களும் - - -	1
2.	போர்த்துகீசியரும், டச்சுக்காரர்களும் -	6
3.	ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி - -	10
4.	பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி - -	15
5.	தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும், ப்ரெஞ்சுக் காரர்களுக்கு மிடையே நடந்த போர்கள் -	17
6.	ஆங்கிலேயர் வங்காளத்தை அடைதல் - -	31
7.	கி. பி. 1760—1764 வரை வங்காள நிலை -	38
8.	கிளைவ் பிரபுவின் ஆட்சியும், அவர் சென்ற பின் வங்காள நிலையும் - - -	42
9.	வாரன் ஹேஸ்டிங்ஸின் பூர்வ சரித்திரமும், கவர்னர் பதவியும் - - - -	48
10.	வாரன் ஹேஸ்டிங்ஸ் [முதல் கவர்னர் ஜனரல்]-	51
11.	மைசூர் யுத்தங்கள் - - -	57
12.	மஹாராஷ்டிர யுத்தங்கள் - - -	67
13.	ஆங்கில அதிகார வளர்ச்சியும், சில முக்கிய சீர் திருத்தங்களும் - - - -	78
14.	ஆங்கில இராஜ்யம் இந்தியாவில் நிலையாக ஏற்படுதல்	89
15.	லார்ட் வில்லியம் பெண்டிங்க் - -	97
16.	ராஜாராம் மோஹன்ராய் - -	102
17.	இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பு - -	104
18.	சீக்கர்கள்—ரஞ்சித்ஸிங் - -	113

எண்	விஷயம்	பக்கம்
19.	பஞ்சாப் ஆங்கிலேயர் வச மாகுதல்	116
20.	பஞ்சாபிலும், எல்லைப்புறத்திலும் ஆங்கில ஆட்சி	120
21.	லார்ட் டல்ஹௌஸி	122
22.	சிப்பாய்க் கலகம்	128
23.	விக்டோரியா மஹாராணியின் சாஸனம்	132
24.	இந்திய வைஸிராய்களும், அவர்களுடைய செய்கைகளும் (கானிங் பிரபு முதல் லின்லித்கோ பிரபு வரை	135
25.	ஆங்கிலச் சர்க்காரும், சிற்றரசர்களும்	156
26.	தற்கால இந்திய அரசாங்க முறை	159
27.	தற்காலத்துப் பிரிட்டிஷ் இந்தியாவும், அதை முன்னேறச் செய்ய நமது கடமைகளும்	164

இந்து தேச சரித்திரம்

1. ஐரோப்பிய நாடுகளுடன் வியாபாரமும், வியாபார மார்க்கங்களும்.

1. பழமை இந்தியாவுடன் கடல் வியாபாரம்:

பண்டைக் காலத்தில் இந்தியாவிற்கும் மேல் நாடுகளுக்கும் செழிப்பான வியாபாரம் நடந்து வந்தது. இந்தியாவில் கிடைக்கக்கூடிய சந்தனக்கட்டை, பருத்தி ஆடைகள், சரிகை, பட்டாடைகள், முத்து, பவழம், ரத்னம், அவுரி, வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை மேல்நாடுகளுக்கு அராபியர்கள் தங்கள் கப்பல்களில் ஏற்றிச்சென்று ரோமானியர்களுக்கு விற்பார்கள். பின்பு, அவர்களிடமிருந்து இரும்பு, தாமிரம், வெள்ளி, பொன், கம்பளம், கண்ணாடிச் சாமான்கள் முதலியவைகளை வாங்கித் தங்கள் கப்பல்களில் ஏற்றிவந்து இந்தியர்களுக்கு விற்பார்கள். இவ்வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அதிக லாபம் கிடைத்தது.

2. பண்டைய வியாபார மார்க்கங்கள்:

பண்டைக் காலத்தில் அவ்வியாபாரம் மூன்று முக்கிய மார்க்கங்களைக் கொண்டிருந்தது.



வியாபார மார்க்கங்களும், கடல் வியாபாரமும்.

(i) நில மார்க்கம்:

வியாபாரிகள் பஞ்சாபினின்றும் புறப்பட்டு வடமேற்குக் கணவாய்களின் வழியாக ஆப்கானிஸ்தானத்தை யடைந்தார்கள். அங்கிருந்து பாரசீகம், துருக்கிஸ்தானம் முதலிய நாடுகளைக் கடந்து, காஸ்பியன் கடல், கருங்கடல் முதலியவைகளின் கரையோரமாய் கான்ஸ்டாண்டிநோபிளை யடைந்தனர். பின்பு ஜினேவா, வெனிஸ் முதலிய நாடுகளுக்குத் தங்கள் சாமான்களைக் கடத்திச் சென்றனர். இவ்வழி பெரும்பாலும் மலை நாடுகளில் அமையப்பெற்றிருப்பதால் இம்மார்க்கத்தை வியாபாரிகள் வெகுவாக உபயோகிக்கவில்லை.

(ii) நிலமும் கடலும் கொண்ட வழி:

கடல் வியாபாரிகள் பின்னும் இந்தியாவின் மேற்குக் கடற்கரையினின்றும் புறப்பட்டு அரபிக்கடலைக் கடந்து பாரசீக வளைகுடாவினுட் சென்றார்கள். பின்பு ஒட்டகங்களின்மீது தங்கள் சரக்குகளை யேற்றி டைக்ரீஸ், யூபிரடீஸ் முதலிய நதிகளின் ஓரமாய்ச் சென்று, பாலஸ்தீனம், சிரியா முதலிய நாடுகளை யடைந்தனர். அங்கிருந்து மத்தியதரைக் கடல் வழியாய் ஐரோப்பிய நாடுகளுக்கு அவர்கள் மீண்டும் கப்பல்களில் சாமான்களை யேற்றிச் சென்றனர்.

(iii) கடல் மார்க்கம்:

அதைக் காட்டிலும் சுலபமான வழி மற்றொன்றிருந்தது. அராபிய வியாபாரிகள் தங்கள் கப்பல்களில் சரக்குகளை எடுத்துச் சென்று, அரபிக்கடல் வழியாய்ச் செங்கடலிலுள்ள ஸூயஸ் துறைமுகத்தை யடைந்தனர். பின்பு அவ்வியாபாரப் பொருள்களை ஒட்டகங்களின் மீதேற்றி அருகிலிருக்கும் அலக்ஸாந்திரியா என்னும் மத்தியதரைக் கடலின் துறைமுகப்பட்டணத்தை யடைந்தார்கள். அங்கிருந்து தங்கள்

சாமான்களை மீண்டும் கப்பல்களில் நிறைத்து, அவர்கள் ஐரோப்பிய வியாபார ஸ்தலங்களை அடைந்தனர். அம்மார்க்கமே மற்ற இரண்டு மார்க்கங்களைக் காட்டிலும் கடல் வியாபாரிகளால் மிகவும் உபயோகிக்கப்பட்டு வந்தது.

3. புது மார்க்கமொன்றைக் கண்டுபிடிக்க அவசியம்:

இம்மார்க்கங்கள் யாவும் அடைபட்டு போகும்படி ஓர் சம்பவம் நிகழ்ந்தது. நம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே துருக்கியர்கள் முன்னேற்றத்தை யடைந்து சுற்றிலுமுள்ள நாடுகளை ஜயிக்கத் தலைப்பட்டனர். அந்நாடுகளுடன், கான்ஸ்டாண்டிநோபிள், சிரியா, எகிப்து முதலிய இடங்களும் கைப்பற்றப்பட்டன. எல்லா மார்க்கங்களும் மேற்கூறப்பட்டுள்ள ஸ்தலங்களின் வழியேதான் சென்றன. ஆகவே, துருக்கியர்களின் ஆதிக்கம் இந்திய நாட்டுடன் நடந்துவந்த கடல் வியாபாரத்தை அறவே போக்கிவிட்டது. இந்தியச் சாமான்களை உபயோகித்துப் பழக்கப்பட்ட ஐரோப்பியர்களும், இந்திய வியாபாரத்தால் அதிக லாபத்தை யடைந்த வியாபாரிகளும், துருக்கியர்களின் கட்டுப்பாட்டிற் குட்படாத புதியதோர் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க முயன்றனர்.

4. போர்த்துகீசியர் புதிய மார்க்கத்தைக் கண்டுபிடித்தல்:

அக்காலத்தில் போர்த்துகிசியரே கடல் வலிமையைக் கொண்டிருந்தனர். ஆகவே, அவர்களின் அரசரான ஹென்றி எனப்பட்டவர் இந்தியாவிற்குப் புதிய மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதற்காகப் பல மாலுமிகளைத் தயாரித்தனுப்பினர். அவர்களில் ஒருவரேனும் ஜெயம் பெறவில்லை. ஆனாலும் அவருக்குப் பின்னால் கி. பி. 1498-ம் வருஷம் வாஸ்கோடகாமா என்னும் ஓர் போர்த்துகிசிய மாலுமி, பர்த்தாலாமியூடயஸ் என்றவன் கண்டுபிடித்திருந்த ஆப்பிரிக்காவின் தென் கோடி

யாகிய **நன்னம்பிக்கை முனை** வழியாய், இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் காணப்பெறும் துறைமுகப்பட்டணமாகிய **கள்ளிக்கோட்டையை** யடைந்தான். பல வருடங்களாகப் போர்த்துகீசியர் செய்துவந்த பிரயத்தனங்கள் அப்பொழுதுதான் பலனை யடைந்தன.

5. புதிய மார்க்கத்தின் உபயோகம்:

அப்புதிய மார்க்கமானது வெகுநாட்கள் வரை மிகுந்த உபயோகத்திலிருந்து வந்தது. அது ஐரோப்பியருக்குச் சொந்தமான வழியென்று கருதப்பட்டதாலும், ஓர்விதத் தடையையும் கொண்டிராததாலும், முழுதும் கடல்களிலேயே அமையப்பெற்றிருந்ததாலும், கடல் வியாபாரிகளால் பெரிதும் போற்றப்பட்டது. 19-ம் நூற்றாண்டில் **ஸூயஸ்** கால்வாய் வெட்டப்பட்ட பின்னரே, அம்மார்க்கம் உபயோகத்தினின்றும் விலக்கப்பட்டது.

வினாக்கள்.

1. பண்டைக் காலத்தில் ஐரோப்பிய நாடுகளுடன் நடந்துவந்த இந்தியக் கடல் வியாபாரத்தை விவரிக்க.
2. பழைய மூன்று வியாபார மார்க்கங்களில் ஏதாவது ஒன்றை விளக்குக.
3. புதிய மார்க்கம் ஒன்று கண்டுபிடிக்க நேரிட்டதேன்?
4. புதிய மார்க்கம் ஏன் ஐரோப்பியர்களால் வெகுநாட்கள்வரை உபயோகிக்கப்பட்டு வந்தது?

2. போர்த்துகீசியரும், டச்சுக்காரர்களும்.

I. போர்த்துகீசியர்.

1. போர்த்துகீசியரின் வருகை:

சென்ற பாடத்தில் வாஸ்கோ ட காமா நன்னம்பிக்கை முனைவழியாகக் கள்ளிக்கோட்டையை யடைந்தாரெனவும், அதுமுதற்கொண்டு அவர் சென்ற வழியே புதிய கடல் மார்க்கமாக உபயோகிக்கப்பட்டு வந்ததென்றும் படித்தோம். இனிப் போர்த்துகீசியர் இந்தியாவில் எவ்விதம் தங்களுடைய அதிகாரத்தை வளர்த்தார்கள் என்பதைப்பற்றிப் படிப்போம்.

2. கடற்சண்டைகளும், வியாபாரப் பெருக்கமும்:

(i) கேப்ரால் அனுப்பப்படுதல் :

வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை அரசனுடன் வியாபார உரிமைகளைப் பெற்று க்ஷேமமாகத் திரும்பி வந்ததைக் கண்ட போர்த்துகீசியர் இந்தியர் வியாபாரத்தைப் பலப்படுத்தக் கருதினார்கள். ஆகவே, கேப்ரால் என்பவரின்கீழ் கி. பி. 1500-ல் இந்திய நாட்டிற்கு ஓர் கப்பற் படையையனுப்பினர். ஆனால், அது கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தை யடைய முடியாதபடி, அராபியர்களின் தூண்டுதலின் பேரில் கள்ளிக்கோட்டை அரசனாகிய ஜாமொரினால் எதிர்க்கப்பட்டது. ஆயினும் கேப்ரால் கள்ளிக்கோட்டையைப் பீரங்கிகளைக்கொண்டு தகர்த்துப் பின்பு கொச்சி, கண்ணனூருக்குச் சென்று அங்கு போர்த்துகீசிய வியாபாரத்தைப் பலப்படுத்தினர்.

(ii) வாஸ்கோ ட காமா மீண்டும் வருதல் :

கி. பி. 1502-ல் வாஸ்கோடகாமா மீண்டும் ஓர் பெரும் கப்பற் படையுடன் இந்தியாவிற்கு வந்தார். கொச்சியிலும் கண்ணனூரிலும் அவரால் கோட்டைகள் கட்டப்பட்டன.

கொச்சி ராஜாவுடன் ஓர் சிநேக உடன்பாடு செய்யப்பட்டது. பின்பு, தம்முடன் வந்த கப்பற் படையை மகம்மதியர்களைத் தாக்குவதற்காக நிறுத்திவிட்டு அவர் போர்த்துகலுக்குத் திரும்பினர்.

(iii) ஆல்மெய்டாவின் ஆட்சி:

கி. பி. 1505-க்குள்ளாக இந்தியாவின் மேற்குக்கரையில் பல கோட்டைகள் கட்டப்பட்டுவிட்டன. ஆகவே, அவைகளைக் காக்க ஆல்மெய்டா என்னும் பிரதிநிதி கி. பி. 1505-ல் போர்த்துகலினின்றும் அனுப்பப்பட்டார். அவர் கி. பி. 1509-வரை இந்தியாவில் தங்கினர். அவருடைய காலத்தில் டையூ என்னும் துறைமுகத்திற்கருகில் ஓர் பெரிய கப்பற் சண்டை நடந்தது. ஈஜிப்டையாண்ட துருக்கி மன்னனும், கள்ளிக்கோட்டையை யாண்ட ஜாமொரினும், கூர்ஜரத்தின், சுல்தானும் தங்கள் கப்பற் படைகளை ஒன்று சேர்த்துப் போர்த்துகீசியரைத் தாக்கினர்கள். அச்சண்டையில் மேல் நாட்டாருக்கு ஜயம் உண்டாயிற்று. அவ்வெற்றியானது, போர்த்துகீசியருக்குக் கடல் ஆதிக்கத்தை புண்டுபண்ணிக் கடலில் எதிர்ப்பை அறவே போக்கிவிட்டது. அதற்குப்பின் போர்த்துகீசிய வியாபாரம் சீக்கிரத்தில் பெருகத் தலைப்பட்டது.

3. ஆல்புகர்க்கும், ராஜ்ய ஸ்தாபனமும்:

ஆல்மெய்டாவிற்குப்பின் ஆல்புகர்க் வைசிராயாக நியமிக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தார். அவருடைய காலத்தில் தான் போர்த்துகீசியருக்கு இந்தியாவில் ஓர் ராஜ்யம் ஏற்பட்டது. பாரசீக வளைகுடா, செங்கடல் முதலியவைகளின் முகத்துவாரங்களைக் கைப்பற்றி மகம்மதிய எதிர்ப்பை முற்றிலும் போக்கினர். பாரசீகவளைகுடாவிலுள்ள **ஆர்மஸ்** என்ற தீவையும் பிடித்தார். மலேயா தீபகற்பத்திற்குச்

செல்ல வசதியை யுண்டாக்கும் மலாகா என்னும் துறைமுகப் பட்டணத்தைக் கைப்பற்றி அதைப் போர்த்துகீசியரின் ராஜ தானியாக்கினர். விஜயநகரத்தையும், பீஜபூரையும் ஆண்ட மன்னர்களுடன் சிநேக உடன்பாடுகளைச் செய்தார். போர்த்து கீசியரை இந்தியருடன் கலந்து அவர்களுடைய அன்பைப் பெறவும் தூண்டினர். அவர் கி. பி. 1509-லிருந்து 1515 வரை இந்தியாவில் தங்கினர். அவருடைய ஆட்சியே போர்த் துகீசியரின் உன்னத தசையைக் குறித்தது.

4. போர்த்துகீசிய ராஜ்யத்தின் அழிவு :

ஆல்புகர்க்குக்குப்பின் வந்த உத்தியோகஸ்தர்கள், ஊக்கமும், மதியுமற்றவர்கள். சுயநலத்தைக் கொண்டாடுபவர்கள். மேலும், அவர்களுடைய காலத்தில் போர்த்துகல் ஸ்பெயினுடன் இணைக்கப்பட்டுவிட்டது. அதற்குப்பின் போர்த்து கீசியர்களுக்கு இந்தியா வியாபாரத்தையாவது, இந்திய அரசியலையாவது கவனிக்க முடியாமற் போயிற்று. இவை நிற்க, அவர்கள் இந்தியர்களைக் கொடூரமாக நடத்தத் தலைப் பட்டனர். அவர்களை மகம்மதியர்களாக்கவும் முயன்றனர். அச்செயல்களெல்லாம் ஒன்று சேர்ந்து இந்தியாவில் போர்த் துகீசிய அதிகாரத்தைப் போக்கிவிட்டன. தற்பொழுது இந்தி யாவில் போர்த்துகீசியருக்குச் சொந்தமாயிருக்குமிடங்கள் கோவா, டையு, டாமான் என்னும் துறைமுகங்களையாகும்.

II. டச்சுக்காரர்கள்.

1. டச்சுக்காரர்களின் வருகை :

போர்த்துகீசியருக்குப் பின், ஐரோப்பாவில் கடல் வலிமை கொண்டிருந்தவர்கள் டச்சுக்காரர்களேயாவர். போர்த்

துகீசியரின் இந்திய வியாபாரத்தின் பெருக்கைக் கண்டு, அவர்களும் இந்தியாவுடன் வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர்.

2. டச்சுக்காரர்களுக்கு உண்டான தடைகள்:

ஆனால், டச்சுக்காரர்களுக்கு அராபியர்களிடத்திலிருந்தும் எதிர்ப்புகளேற்பட்டன. அவைகளை அவர்கள் போக்கிக் கொள்ளவேண்டியதாயிற்று.

3. வியாபாரமும் வியாபார ஸ்தலங்களும்:

பின்பு டச்சுக்காரர்கள், இந்தியாவில் தங்கள் வாணிபத்தை ஊன்றச் செய்தனர். சூரத், பழவேற்காடு, மசூலிப்பட்டணம், ஹூக்ளி, காஸிம் பஜார், டாக்கா, பாட்னா முதலிய விடங்கள் அவர்களுக்கு வியாபார ஸ்தலங்களாக ஏற்பட்டன. மலாகா, போர்த்துகீசியரிடமிருந்து கொள்ளப்பட்டது. ஆனால் இந்திய வியாபாரத்தைக் காட்டிலும் கிழக்கிந்தியத் தீவுகளுடன் நடத்திய வர்த்தகமே டச்சுக்காரர்களுக்கு மிக்க லாபத்தையும், செல்வாக்கையுமளித்தது. ஆகவே, அங்கு வியாபாரத்திற்காக வந்த ஆங்கிலேயர்களைத் துரத்தியடித்து, டச்சுக்காரர்கள் தங்கள் வாணிபத்தைப் பலப்படுத்திக் கொண்டனர்.

4. இந்தியாவில் டச்சு ஆதிக்கத்தினழிவு:

1. டச்சுக்காரர்கள் இந்தியாவை யடைந்தபின்பு, அவர்களுக்குப் போட்டியாக ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரர்களும் தோன்றினர். அவர்களுடைய எதிர்ப்பை டச்சுக்காரர்களால் போக்க முடியவில்லை.

2. மேலும், டச்சுக்காரர்கள், இந்தியர்களைக் கேவலமாக மதித்து, அவர்களை யிகழ்ந்தார்கள். அவ்வாறு செய்தது, டச்சுக்காரர்களுக்கு இந்தியரின் ஆதரவைப் போக்கியது.

3. கிழக்கிந்தியத் தீவுகளுடன் மாத்திரம் நடத்திய வியாபாரம் அவர்களுக்குப் போதிய பயனையளிக்கவில்லை.

4. இவை நீங்க, அவர்களுடைய சொந்த நாட்டிலேயே அவர்களுக்குப் பல எதிர்ப்புகள் தோன்றவே, டச்சுக்காரர்களுக்கு இந்தியாவில் வியாபாரத்தைக் காத்துக்கொள்வதற்கான முயற்சிகளைத் தொடுக்கச் சாத்தியமில்லாமற் போயிற்று.

வினுக்கள்.

1. யாருடைய காலத்தில் போர்த்துகீசியர் இந்தியாவில் உன்னத நிலையை யடைந்தனர்?
2. டச்சுக்காரர்களுடைய இந்திய வியாபாரம் அழிவுறக் காரணமென்ன?
3. போர்த்துகீசியர் தங்களுடைய வியாபாரப் பெருக்கிற்காகச் செய்த முயற்சிகளைப்பற்றியாவது, அவர்கள் எவ்வண்ணம் தங்களுடைய இந்திய ஸ்தாபனங்களை இழந்தனர் என்பதைப் பற்றியாவது சுருக்கி யெழுதுக.

3. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி

1. கிழக்கிந்தியக் கம்பெனி :

போர்த்துகீசியரும், டச்சுக்காரரும் இந்தியாவுடன் வியாபாரம் செய்து அடைந்த லாபத்தைக் கண்ட ஆங்கிலேயரும் இந்நாட்டுடன் வியாபாரம் செய்ய முற்பட்டனர். அதற்காக கி. பி. 1600-ல் தங்களுடைய மஹாராணியார் எலிஸபெத்தினிடமிருந்து இந்தியாவுடன் வியாபாரம் செய்ய ஓர் சாஸனம் பெற்று ஓர் வர்த்தகச் சங்கத்தை ஸ்தாபித்தனர். அதற்குக் கிழக்கு இந்தியக் கம்பெனியெனப் பெயரிடப்பட்டது. ஆரம்பத்தில் அது பின் விவரிக்கப்படும் ஏற்பாட்டைக்

கொண்டதாயிருந்தது:—இந்தியாவுடன் வியாபாரம் செய்வதற்காக ஓர் கப்பற்பிரயாணம் தயாரிக்கப்பட்டது. அது முடிந்ததுமே அதனுடைய வரவு செலவு கணக்குகள் தீர்க்கப்பட்டு அச்சங்கம் கலைக்கப்பட்டது. பின்னும் மற்றொரு பிரயாணத்தின் பொழுதுதான் அச்சங்கம் உயிர்பெற்றது. ஆனால் பிற்காலத்தில் இவ்வழக்கம் ஒழிந்து, கிழக்கு இந்தியக் கம்பெனியானது ஓர் நிலைத்த சங்கமாகவே ஏற்பட்டுவிட்டது.

2. சங்கத்தின் வியாபாரப் பெருக்கு :

அதற்குப் பின் 1608-ல் ஹாகின்ஸ் என்ற ஓர் ஆங்கிலக் கப்பற் றலைவன் ஜஹாங்கீரின் சமஸ்தானத்தை அடைந்து, ஆங்கில வியாபாரிகளுக்கு வர்த்தக உரிமையைப் பெற முயன்றார். ஆனால் போர்த்துகீசியருடைய கோட் சொற்களால் அவர் ஒன்றும் பெறமுடியாமற் போயிற்று. இருந்தபோதிலும் ஜஹாங்கீருடைய சமஸ்தானத்திற்கு அனுப்பப்பட்ட ரோ என்னும் ஆங்கில ராயபாரி மொகலாய மன்னரிடமிருந்து ஆங்கில வர்த்தகர்கள் இந்தியாவுடன் வியாபாரம் செய்ய 1615-ல் அனுமதி பெற்று சூரத் முதலான இடங்களை வியாபார ஸ்தலங்களாக ஏற்படுத்திக்கொள்ள உரிமையும் பெற்றார்.

அதற்குப் பிறகு ஆங்கிலேயர்களுடைய வியாபாரம் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பெருகத் தலைப்பட்டது. சூரத், மசூலிப்பட்டணம், சென்னப்பட்டணம், பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் அவர்கள் பண்டகசாலைகளைக் கட்டினார்கள். பின்பு அவைகளைக் காக்கக் கோட்டைகளையும் நிருமித்தனர். அவைகளில் சில முக்கியமான இடங்களை அவர்கள் எவ்வாறு அடைந்தனர் என்பதைப்பற்றி இனி ஆராய்வோம்.

3. மதராஸை அடைந்த விதம் :

ஆங்கிலேய வியாபாரத்திற்கு மசூலிப்பட்டணத்தில் டச்சுக்காரரின் போட்டி ஏற்பட்டது. ஆகவே ஆங்கிலேயர்க

ளின் உத்தியோகஸ்தர்களில் ஒருவரான ஸர் பிரான்ஸிஸ் டே என்பவர் தற்பொழுது சென்னைப்பட்டணம் என்று சொல்லப் படும் கடற்கரையைக் கண்டு அது வியாபாரத்திற்குப் பொருத்தமான இடமெனஎண்ணி, அதைப் பெற முயன்றார். அச்சமயம் அவ்விடமானது மணற்பாங்காய் இருந்தது. மேலும் அது ஸ்ரீரங்கராயர் என்ற சந்திரகிரி மன்னருக்குச்



ஐரோப்பியர்களின் வியாபார ஸ்தலங்கள்.

சொந்தமாயிருந்தது. அதை அறிந்த ஆங்கிலேய உத்தியோ கஸ்தர் அம்மன்னரின் காரியஸ்தர் மூலம் முதலில் வாடகைக்கு வாங்கிப்பின்பு அதைக் கிழக்கிந்திய கம்பெனிக்காக விலைக் கும் வாங்கிகொண்டார். அந்த இடத்தில் ஆதியில் ஆங்கிலே யர்கள் ஓர் பண்டகசாலையே கட்டினார்கள். ஆனால் அதனுள்

இருக்கும் சாமான்களைப்பத்திரப்படுத்தப் பின்பு ஓர் கோட்டையையும் கட்டினார்கள். அதுவே தற்பொழுது நாம் சென்னையின் கடற்கரையில் காணும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையாகும். அவ்விடத்தில் பிறகு ஓர் பெரிய பட்டணம் தோன்றி, அதற்குச் சந்திரகிரி மன்னரின் தகப்பனாராகிய சென்னப்பர் என்பவரின் பெயரைக்கொண்டு சென்னப்பட்டணம் எனப் பெயர் இடப்பட்டது. மேலும் அவ்விடத்திற்கருகில் வேலை பார்த்து வந்த மதரேசன் என்ற பெயரை ஒட்டி அதற்கு மதராஸ் என்ற பெயரும் வழங்கலாயிற்று. அது நாளடைவில் ஓர் பெரிய துறைமுகப் பட்டணமாக மாறி சென்னை ராஜதானிக்குத் தலைநகராகவும் ஏற்பட்டது.

4. பம்பாய் :

மேற்குக் கடற்கரையில் ஆதியில் ஆங்கிலேயர்களுக்கு மிக்க வசதியான வர்த்தக ஸ்தலம் ஒன்றும் ஏற்படவில்லை. சூரத்தில் அவர்களுக்குப்பண்டகசாலை இருந்ததாயினும் அதே இடத்தில் மற்ற ஐரோப்பியர்களின் வியாபாரமும் நடந்துவந்தது. ஆனதுபற்றி அத் துறைமுகம் அவர்களுக்குப் போதிய சௌகரியத்தை அளிக்கவில்லை. ஆகவே அவர்கள் வேறு வியாபார ஸ்தலங்களைத் தேடலுற்றனர். அச்சமயம் ஆங்கிலேயரின் மன்னரான இரண்டாவது சார்ல்ஸ் தமது போர்த்துகீசிய மனைவிக்குச் சீதனமாகக் கிடைத்த பம்பாய் என்னும் துறைமுகப் பட்டணத்தை இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வருஷமொன்றிற்குப் பத்துப் பவுன் வீதம் வாடகைக்கு விட்டார். பின்னர் அது ஆங்கிலேயர்களுக்கே சொந்தமாகிவிட்டது. இக்காளில் இந்தியாவிலேயே முதன்மை பெற்ற துறைமுகம் அதுவேயாகும்.

5. கல்கத்தா :

1650-ம் வருஷம் வங்காளத்திற்குப்பிரதிநிதியாயிருந்த நவாபின் குமாரி ஓர் கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டாள் அச்சமயம் **கேபிரியல் பௌட்டன்** என்ற ஓர் ஆங்கில வைத்தியன் அவ்வியாதியைக் குணப்படுத்தி நவாப்பினிடமிருந்து ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் வியாபாரம் செய்வதற்காக உரிமை பெற்முன். அதன் பயனுக **ஹூக்ளியில்** ஓர் பண்டக சாலை கட்டப்பட்டது. அங்குப் போர்த்துக்கீசிய அதிகாரம் அழிந்த பிறகு, ஓர் பலமான கோட்டையும் எழுப்பப்பட்டது.

இது நிற்க 40 வருஷத்திற்குப் பின், ஆங்கில வியாபாரத்திற்காக, ஹூக்ளி நதியின் கீழ்க்கரையில் இருந்த மூன்று கிராமங்களை ஜாப் **கார்நாக்** என்ற வியாபாரி வங்காள நவாபினிடமிருந்து விலைக்கு வாங்கினுன். இங்கிலாந்தில் அச்சமயம் ஆண்டுவந்த **வில்லியம்** என்ற அரசரின் பெயரைக் கொண்டு அவ்விடத்தில் ஓர் கோட்டையும் கட்டப்பட்டது. அதற்குப் பின் அக்கிராமங்களின் ஒன்றின் பெயரான **காளிகட்டம்** என்பதைக்கொண்டு அவ்விடமானது **கல்கத்தா** என்ற பெயரைக் கொள்ளலாயிற்று. அது தற்காலத்தில் வங்காள ராஜதானிக்குத் தலை நகராயிருக்கிறது. அது ஓர் பெரிய வியாபார ஸ்தலமுமாகும்.

6. ஐக்கியக் கிழக்கிந்தியக் கம்பெனி 1708 :

இவ்விடங்கள் கிடைப்பதற்குள்ளாக ஆங்கிலேய வியாபாரம் பெருகலாயிற்று. லாபமும் அதிகம் கிடைத்தது. அதைக்கண்ட மற்ற ஆங்கிலேயர்கள் புதுச் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு போட்டியாக வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர். அதனுல் ஆதி ஆங்கிலக் கம்பெனிக்கு லாபம் குறைந்து நஷ்டமும் ஏற்படும்போல் இருந்தது. ஆகவே அச்சங்கங்கள்

தங்களிடையே ஒரு சமாதானத்தை ஏற்படுத்திக்கொண்டு 1708-ல், ஐக்கியக் கிழக்கிந்தியக் கம்பெனி என்று ஓர் கூட்டுக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குப் பின் ஆங்கிலேயரின் வியாபாரம் வெகு சீக்கிரமாகப் பரவத் தொடங்கியது. ஆனால் அச்சமயம் அதற்குப் பிரெஞ்சுக்காரரின் போட்டி உண்டாயிற்று.

வினாக்கள்

(1) ஆங்கிலேயர்களுக்கு மதராஸ், பம்பாய், கல்கத்தா-இவைகள் கிடைத்த விதத்தைக் குறிப்பிடுக.

(2) ஐக்கியக் கிழக்கிந்தியக் கம்பெனி என்பது என்ன ? அது எப்பொழுது ஸ்தாபிதமாயிற்று ?

(3) குறிப்புகள் தருக :—ரோ, சென்னை என்ற பெயர்.

4. பிரெஞ்சுக்கிழக்கிந்தியக் கம்பெனி

1. பிரெஞ்சுக் கம்பெனியின் ஸ்தாபிதம்.

இந்தியாவில் டச்சுக்காரர்களுடையவும், ஆங்கிலேயர்களுடையவும் வியாபாரம் பெருகவே, அவர்களைப்போல் தாங்களும் லாபத்தைப் பெற விரும்பி 1604-ல் கால்பேர்ட் என்ற பிரதம மந்திரியின் முயற்சியின் பேரில் பிரான்சில் ஓர்வர்த்தகச் சங்கம் ஸ்தாபிதமாயிற்று. அது மற்ற கம்பெனிகளைக் காட்டிலும் வலிவான ஏற்பாட்டைப் பெற்று ஆரம்ப முதற்கொண்டே பலமான வாணிபத்தையும் கொண்டிருந்தது.

2. பிரெஞ்சு வியாபாரப் பெருக்கு.

இவ்வித வியாபாரத்தினால் பிரெஞ்சுக் காரர்களுக்கு அநேக வியாபாரஸ்தலங்கள் கிடைத்தன. அவைகளில் முக்கியமானவை சந்திரநாகூர், காரைக்கால், புதுச்சேரி, மாஹி

முதலானவைகளாகும். அவைகளில் புதுச்சேரி ஸ்தாபிதமான விதத்தை மட்டிலும் இங்கு விவரிப்போம்.

3. புதுச்சேரியை யடைந்த விதம்.

மேற்குக் கரையில் சூரத் என்ற துறைமுகப் பட்டனத்தில் பல ஐரோப்பியச் சங்கங்களின் வியாபாரம் நடை பெற்றது போல் கிழக்குக் கடற்கரையிலும் மசூலிப்பட்டினம் என்னுமிடத்தில் பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலாயினோர் ஒருங்கே தங்களது வர்த்தகத்தை நடத்திவந்தனர். ஆனால் மற்றவர்களின் போட்டியால் பிரெஞ்சுக்காரர்களுக்கு அங்கு வியாபாரம் மிகக்குறைவு பட்டது. ஆகவே அவர்களுடைய உத்தியோகஸ்தரான மார்ட்டின் என்பவர் பீஜபூருக்குக் கட்டுப்பட்ட கர்நாடக நவாபினிடமிருந்து தற்போது புதுச்சேரி என்று அழைக்கப்படும் கடற்கரையை விலைக்கு வாங்கி அதை ஓர் துறைமுகப்பட்டனமாகச் செய்து பிரெஞ்சு இந்திய ராஜ்யத்திற்குத் தலை நகராகவும் ஆக்கினர். அது முதற்கொண்டு இதுவரையிலும் இந்நகரே இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கு ஓர் முக்கிய இடமாக இருந்து வருகிறது.

நாளடைவில் போர்த்துகீசியருடையவும், டச்சுக்காரர்களுடையவும் அதிகாரம் அழிவுறவே, ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர்களுமே நம் நாட்டில் தங்கினர். ஆனால் அவ்விரு ஐரோப்பிய நாட்டார்களிடையேயும் வியாபாரப்போட்டி ஏற்பட்டது. அதனால் சில சண்டைகளும் நிகழ்ந்தன.

வினாக்கள்

1. புதுச்சேரி ஸ்தாபிதமான விதத்தைப்பற்றி விவரிக்க.
2. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் முக்கிய வியாபார ஸ்தலங்களைக் குறிப்பிடுக.

5. தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு மிடையே நடந்த போர்கள்

A. இந்தியாவின் நிலை

ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் போர் நிகழக்காரண மென்ன? எவ்வண்ணம் இந்தியாவின் நிலை அந்த யுத்தத்திற்குச் சாதகமாயிருந்தது?

வட இந்தியாவில் மகம்மதுஷா என்ற டில்லிச் சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். ஆனால் அவருடைய அதிகாரம் சுற்று நாடுகளிலேயே ஓங்கவில்லை. எல்லைப்புற மாகாணங்கள் ஒவ்வொன்றும் ஓர் தனித்தலைவனின் கீழ் சுயேச்சை பெற்றிருந்தன. தக்ஷிணத்தில் ஹைதராபாத் என்ற ராஜ்யம் நைஜாம் உல் முல்க் என்ற தளகர்த்தரால் ஆளப்பட்டு வந்தது. மஹாராஷ்டிரர்களும் தங்களுடைய நாடுகளில் அரசியல் செலுத்தி வந்தனர். கர்நாடகத்திலோ அன்வார் உத்தீன் என்ற நவாப் நைஜாமுக்கு அடங்கி ராஜ்ய பாரம் நடத்தி வந்தார். இத்தனிப்பட்ட ராஜ்யங்களில் மகுடத்திற்காகவும், மற்ற காரணங்களுக்காகவும் யுத்தங்கள் நேரிட்டன. அச்சமயம் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் சுதேச மன்னர்களிடையே வசித்து வந்ததால், உபகாரம் செய்ய வேண்டப்பட்டனர். ஐரோப்பியர்களுக்குமே இயற்கையில் தங்களுடைய அதிகாரத்தைப் பெருக்க வேண்டுமென்றும், தங்களுடைய ஐரோப்பிய எதிரிகளை இந்தியாவினின்றும் துரத்தியடிக்க வேண்டு மென்றும் நோக்கங்கள் இருந்து வந்தன. ஆகவே அவர்கள் வெகு இஷ்டத்துடன் உள் நாட்டுச் சண்டைகளில் கலந்து கொண்டனர். சொந்தத்திலும் சண்டைகள் தொடங்கினார்கள்.

B. கர்நாடக யுத்தங்கள்

1. முதல் கர்நாடக யுத்தம் (கி. பி. 1744-1748)

a. காரணங்கள்.

தென்னிந்தியாவில் முதலில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஓர் போர் நிகழ்ந்தது. அதற்குச் சில காரணங்களைக் குறிப்பிடலாம்.

(1) இரு ஐரோப்பிய நாட்டினரும் இந்தியாவில் வியாபாரத்தை நடத்துவதற்காக வந்தவர்கள். ஆகவே அவர்களுக்குள் பலமான வியாபாரப் போட்டி யுண்டாகி மனஸ்தாபமும் ஏற்பட்டது. (2) அச்சமயம், பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான புதுச்சேரியில், டியூப்ளே என்ற கவர்னர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஊக்கம் கொண்டவர். இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை யொழித்துப் பிரெஞ்சுக்காரரின் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென பெரிதும் முயன்றார். (3) அதற்குத் தகுந்தாற்போல் 1744-ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் ஓர் யுத்தம் நிகழ்ந்தது. அது இந்தியாவிலும் அவர்களுடைய பிரதிநிதிகளால் தொடங்கப்பட்டது.

b. சண்டைகள் :

i. பிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயரைத் தாக்குதல் :

முதலில் பிரெஞ்சுக்காரர்களே சண்டையை ஆரம்பித்தார்கள். கி. பி. 1746-ல் லாபோர்டினே என்னும் பிரெஞ்சுக் கப்பற்றலைவன் இருந்தாற்போலிருந்து சென்னையைத் தாக்கினான். சென்னை பிடிபட்டது. அடுத்தாற்போற் கூடலூரில் கட்டப்பட்டிருந்த செயிண்ட் டேவிட் கோட்டையையும்

பிரெஞ்சுக்காரர் முற்றுகை யிடத் தலைப்பட்டனர். அச்சமயம் டியூப்ளேக்கும், லாபோர்டினேக்கும் மனஸ்தாபமுண்டா யிற்று. டியூப்ளே மதராஸைத் தம் வசமே வைத்துக்கொள் ளவேண்டுமென விரும்பினர். ஆனால் லாபோர்டினே ஆங்கி லேயரிடமிருந்து ஏராளமாகப் பணத்தைப் பெற்றுச் சென்னை

டியூப்ளே

யைத் திருப்பித் தந்து விடவேண்டு மென எண்ணங்கொண் டார். இச் சண்டை முற்றும் போலிருந்தது. ஆனால் அச் சமயம் ஓர் புயல் காற்று கரையோரமாய் அடிக்கவே, லாபோர் டினேயின் கப்பற்படை சிதறுண்டது. உடனே அவன் சென்னை அதிகாரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு பிரான்சுக்குத் திரும்பி விட்டான்.

ii. கர்நாடக நவாபின் எதிர்ப்பும், தோல்வியும் :

அத்தருணம் கர்நாடக நவாபின் அநுமதி பெருமல் கர்நாடகத்தில் மேற்குறிக்கப்பட்டுள்ள சண்டையைத் தொடங்கியதற்காகப் பிரெஞ்சுக்காரர்க்கெதிரே போர்தொடுக்க, ஆங்கிலேயர் (கர்நாடக நவாப் ஆகிய) அன்வார் உத்தீனைத் தூண்டினர். அவர்களுடைய போதனைக்குட் பட்ட அன்வார்உத்தீனும் தமது உத்திரவைப் பெருமல் சண்டை எவ்வண்ணம் தொடங்கப்படலாமென டியூப்ளேயைக் கேட்டார். அதற்குச் சமாதானமாக டியூப்ளே ஆங்கிலேயருக்கு மதராஸைத் திரும்பித்தந்து விடுவதாக வாக்களித்தார். ஆனல் அவ்வண்ணம் செய்யாமல் டியூப்ளே காலங்கடத்தவே, அன்வார் உத்தீன் பிரெஞ்சுக்காரரையெதிர்த்துச் சென்ருர். ஸான்தோம் என்னுமிடத்தில் பிரெஞ்சுக்காரர்களைச் சந்தித்தார். அங்கு நேர்ந்த சண்டையில் அன்வார் உத்தீன் தோற்றுப் போனர். வெகு சிறு சேனையைக் கொண்டே பெரும் படையை முறியடித்த பிரெஞ்சுக்காரர்களுக்குத் தைரியம் அதிகரித்தது. ஆனது பற்றி அவர்கள் மீண்டும் ஆங்கிலேயரை யெதிர்க்கத் தலைப்பட்டனர். ஆனல் அப்பொழுது ஆங்கிலேயர்களின் சகாயத்திற்காக இங்கிலாந்திலிருந்து ஓர் கப்பற்படை வந்தது. உடனே அதனுடைய உதவியைக் கொண்டு ஆங்கிலேயர்கள் புதுச்சேரியை முற்றுகை யிட்டனர்.

சமாதானம் :

ஆனல் கி. பி. 1748-ல் ஐரோப்பாவில் நடந்து வந்த யுத்தம் முடிவடைந்தது. ஆகவே இந்தியாவிலும் யுத்தம் நிறுத்தப்பட்டு ஓர் உடன்பாடு செய்யப்பட்டது. (1) அதன்படி ஆங்கிலேயர் புதுச்சேரி முற்றுகையை நிறுத்தினர்கள். (2) மதராஸ் ஆங்கிலேயர்களுக்கே திரும்பக் கொடுக்கப்பட்டது.

இச்சண்டைக்குப் பின் கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரரின் அதிகாரம் வளரலாயிற்று.

2. இரண்டாவது கர்நாடக யுத்தம் (கி. பி. 1749-1754)

காரணங்கள்.

(1) "உருசிகண்ட பூனை உரியை உரியைத்தாவும்" எனக்கூறுவது போல் டியூப்ளே, தாம் பெரிய சுதேசச்சேனை ஒன்றை தோற்கடித்ததின் நிமித்தம், எளிதில் மற்ற வெற்றிகளையும் அடையலாமென எண்ணினர். அதற்காக அவர் ஏராளமான செலவின் பேரில் ஒரு பெரிய சேனையைத் தயாரித்தார். அதை யுத்தத்தில் உபயோகப்படுத்தினாலன்றி அது வீண் நஷ்டத்தை விளைவிக்குமன்றோ? ஆகவே அவர் சண்டையைக் கோரினர். (2) மேலும் கர்நாடகத்திலும், ஹைதராபாத்திலும் சிங்காதனத்திற்காகப் போர்கள் தொடங்கி முறையே சந்தாஸாஹிபும், முஸபர்ஜங்கும், பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாட்டினர். (3) இவை நிற்க, 1748-ல் முதல் கர்நாடக யுத்த முடிவில் ஏற்பட்ட சமாதானம் அச்சமயத்திற்கு மாத்திரம் சண்டையைப் போக்கியதே அல்லாமல் ஓர் நிரந்தர ஏற்பாட்டை உண்டு பண்ணவில்லை. (4) கடைசியாக பிரெஞ்சுக்காரர்கள் சுதேச மன்னர்களின் வியவகாரங்களில் தலையிட்டுக்கொண்டதால், ஆங்கிலேயர்களும் அவ்வாறே செய்ய வேண்டியதாயிற்று. இல்லையாயின் அவர்கள் இந்தியாவை விட்டே அகல நேரிடும்.

சண்டைகள் :

i கர்நாடகத்தில் நடந்த நிகழ்ச்சிகள் :

நைஜாம் ராஜ்யத்தின் மன்னரான அஸப் ஜாவிற்கு முன் கர்நாடகம் ஒரு மகம்மதியச் சந்ததியாரால் ஆளப்பட்டு வந்தது. ஆனல் அஸப்ஜா அன்வார் உத்தீனைக் கர்நாடக நவா

பாக நியமித்தார். அதனால் பழைய அரசனின் மருமகனான சந்தாஸாஹிப் தான் கர்நாடகத்தைப் பெறவேண்டுமெனக் கோரி பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாடினான். ஆனால் அவர்களுடைய உதவியைப் பெறுமுன் தஞ்சாவூரில் ஆண்டு வந்த மஹாராஷ்டிரர்களின் கைகளிற் சிக்கவே, அவன் சிறையாயினன். அப்பொழுது டியூப்ளே அவனைப் பணங் கொடுத்து விடுவித்து அன்வார் உத்தீனுக் கெதிரே சண்டை செய்ய உதவினர். 1749-ல் ஆம்பூரில் இருதிறத்தாருக்கும் யுத்தம் நிகழ்ந்தது. மிகத்திறமை வாய்ந்த பிரெஞ்சுத் தளகர்த்தர் புஸ்ஸி (Bussy) சந்தாஸாஹிபின் பக்க மிருந்து போர் புரிந்தார். அன்வார் உத்தீன் தோற்றுப்போய் உயிரையும் இழந்தான். அப்பொழுது அன்வார் உத்தீனின் குமாரனான மகம்மது அலி திருச்சினாப்பள்ளிக்கு ஓடிப்போய் ஒளிந்து கொண்டான். சந்தா ஸாஹிப் கர்நாடக நவாப் என முடி சூட்டப் பெற்றான். கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரரின் அதிகாரம் ஓங்கிற்று,

ii. தக்ஷிணத்தில் உண்டான சம்பவங்கள் :

1748-ல் ஹைதராபாத் மன்னர் இறந்தார். உடனே அந்நாட்டு மகுடத்திற்காக அவருடைய 2-வது குமாரனான நாஸர்ஜங்குக்கும் பேரனான முஸபர் ஜங்குக்கும் சண்டையுண்டாயிற்று. அப்பொழுது கர்நாடகத்தில் வலிமை பெற்றிருந்த பிரெஞ்சுக்காரர்களை முஸபர் ஜங் தனக்கு உதவ வேண்டினான். ஆனால் அடுத்தபடியாக நடந்த போரில் முஸபர் ஜங், நாஸர் ஜங்கிடம் தோல்வியுற்றுச் சிறையுமானான். அதற்குப் பின் சில நாட்களுக்கே நாஸர் ஜங் தன் அதிகாரத்தை நிலைநாட்ட முடிந்தது. அவன், தன்னுடைய ஆட்கள் தயாரித்த சதி ஒன்றில் அகப்பட்டுக் கொலையுண்டான். ஆகவே, பிரெஞ்சுக்காரர்கள் முஸபர் ஜங்கிற்கு முடிசூட்டி

ஞர்கள. அவனும் இரண்டு மாதத்திற்கே உயிர்தரித்திருந் தான். பின்னர் ஓர் விரோதியினுல் கொலே செய்யப்பட்டான். அந் நிகழ்ச்சிக்குப் பின் முந்திய நிஜாமின் கடைசி மைந்தனை ஸலபட் ஜங்கைச் சிங்காதனம் ஏற்றினுர்கள். அதற்காக நன்றிகொண்ட ஸலபட்ஜங் பிரெஞ்சுக்காரர்களுக்கு வட சர்க்கார் அல்லது கஞ்சம், கோதாவரி, விசாகப்பட்டணம், கிருஷ்ணு என்ற 4 ஜில்லாக்களே நன்கொடையாக வழங்கினுன். புஸ்ஸியை அவருடைய சேனையுடன் தன் நாட்டில் வைத்துக் கொள்ளுவதாகவும் ஏற்றுக்கொண்டான். அதனுல் தக்ஷிணத்தில் பிரெஞ்சுக்காரரின் அதிகாரம் ஓங்கியது.

iii. மகம்மது அலியின் கஷ்டம் :

அடுத்தபடியாகச் சந்தா ஸாஹிபும், பிரெஞ்சுக்காரர்களுமாகச் சேர்ந்து திருச்சிஞப்பள்ளியில் ஒளிந்திருந்த மகம்மது அலியைப் பிடிக்க யெத்தனித்தனர். திருச்சிஞப்பள்ளி முற்றுகை யிடப்பட்டது. அப்பொழுது மகம்மது அலி ஆங்கிலேயரைத் தனக்கு உதவுமாறு வேண்டினுன். ஆனுல் அவர்களுடைய உதவி கிட்டுவதற்குள்ளாக திருச்சிஞப்பள்ளியில் உணவுப் பொருள்கள் அற்றுபோய் மகம்மது அலி யாது செய்வதெனத் திகைத்து நின்றுன்.

iv. ஆற்காடு முற்றுகையும், மகம்மது அலிக்குத்துணையும், ஆற்காட்டை ஜயித்தல் :

ஆனுல் ஆங்கிலேயர்கள் அச்சமயம் சும்மாஇருக்கவில்லே. மகம்மது அலிக்கு உதவுவதற்காகவும், கர்நாடகத்தில் தங்களுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதற்காகவும் அவர்கள் சில ஏற்பாடுகளேச் செய்யலாயினர். சிறுவராயிருந்தும், மிக்க புத்தி நுட்பம் வாய்ந்த கிளேவ் (Clive) என்னும் ஆங்கிலத் தளகர்த்தரின் ஆலோசனேயின் பேரில், மகம்மது அலியின் கஷ்டத்தைக் குறைக்கச் சந்தா ஸாஹிபினது தலே நகராகிய

ஆற்காட்டை யெதிர்ப்பதே தகுதியெனத் தீர்மானித்து, ஆங்கிலேயர் கிளைவை ஓர் சிறு சேனையுடன் ஆற்காட்டிற்கு அனுப்பினார்கள். கிளைவ் ஆற்காட்டை வெகு எளிதில் ஜெயித்தார். உடனே அவர் அதன் கோட்டையையும் பலப்படுத்தினார்.

க்ளைவ்

ஆற்காட்டை எதிரிகளினின்றும் காப்பாற்றுதல் :

கிளைவ் எதிர்பார்த்தவண்ணமே, சந்தாஸாஹிப் தனது மைந்தனான ராஜா ஸாஹிபின் கீழ் தனது பாதிச் சேனையை ஆற்காட்டைப் பிடிக்க அனுப்பினான். 50 நாட்கள் வரை முற்றுகை நடந்தது. கோட்டைக்குள் இருந்த வீரர்கள் குடிக்கக் கஞ்சியுமின்றி வருந்திய போதிலும் ராஜா ஸாஹிபால் அவர்களை ஜயிக்க முடியவில்லை. நல்ல வேளையாக, அச்சமயம் செயிண்ட் டேவிட் கோட்டையிலிருந்து சேனை ஒன்றும், மஹாராஷ்டிர வீரனாகிய முராரி ராவுக்குச் சொந்தமான சேனை ஒன்றும் கிளைவிற்கு உதவிசெய்ய ஆற்காட்டை அடைந்தன. ஆகவே கிளைவ் தைரியமாகத் தமது வீரர்களுடன் வெளி வந்து உதவிச் சேனைகளுடன் கலந்து எதிரிகளைத் தாக்கினார். கிளைவிற்கே வெற்றி கிடைத்தது. முறியடிக்கப்பட்ட ராஜா ஸாஹிப் ஆரணியில் பின்னும் தோல்வியுற்றுச் செஞ்சிக்கோட்டைக்குள் ஓடி, ஒளிந்து கொண்டான்.

மகம்மது அலிக்கு உதவுதல் :

உடனே கிளைவும் அவருடைய தலைவரான மேஜர் லாரென்ஸும் (Major Lawrence) காவேரிப் பாக்கத்தில் நிகழ்ந்த மற்றொரு எதிர்ப்பையும் போக்கி, மகம்மது அலியை விடுவிக்கத் திருச்சினாப்பள்ளிக்குச் சென்றார்கள். அங்கு நடந்த போரில் சந்தா ஸாஹிப் தோற்றுப் போய்த் தஞ்சாவூருக்கு ஓடிவிட்டான். ஆனால் அங்கு சில நாட்களுக்குப் பிறகு ஓர் எதிரியால் கொல்லப் பட்டான். அதற்குமேல் ஸ்ரீரங்கத்தில் ஓடி ஒளிந்த பிரெஞ்சுச் சேனையும் முறியடிக்கப்பட்டது. உடனே மகம்மது அலி நவாப் ஆக்கப்பட்டான்.

சமாதானம் (கி. பி. 1754)

(1) கர்நாடகத்தில் ஆங்கிலேயரின் அதிகாரம் நிலைபெறலாயிற்று. பிரெஞ்சு அதிகாரம் அழியத் தொடங்கியது. (2) இருதரப்பினர்களும் உள் நாட்டுச் சச்சரவுகளில் தலையிடுவதில்லை யென ஒப்புக் கொண்டனர்.

தக்ஷிணத்தில் மாத்திரமே பிரெஞ்சு அதிகாரம் கொஞ்சமிருந்து வந்தது.

3. 3-வது கர்நாடக யுத்தம் (கி. பி. 1756-1763)

a. காரணம்

(1) 2-வது கர்நாடக யுத்தம் முடிந்து இரண்டு வருஷத்திற்கெல்லாம் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் மீண்டும் யுத்தம் ஆரம்பமாயிற்று. முன்பு நிகழ்ந்தது போலவே இந்தியாவிலும் அவ்விரு ஐரோப்பிய நாட்டினர்களுக்கும் போர் தொடங்கியது. (2) ஆங்கிலேயத் தளகர்த்தரான கிளைவ் சண்டை நேரிடு



கர்நாடக யுத்தங்களில் சம்பந்தப்பட்ட இடங்கள்

மென்பதை யெதிர்பார்த்துச் சந்திர நாகூரைப் பிடித்துக் கொண்டார். (3) மேலும் 2-வது கர்நாடக யுத்தத்தின் உடன் படிக்கைக்கு மாறுதலாக உள் நாட்டு வியவகாரங்களில் இருகட்சியினரும் கலந்து கொண்டார்கள்.

ஆகவே ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் யுத்தம் ஏற்பட்டது.

b. சண்டைகள் :

i. லாலியின் எதிர்ப்புகள் :

புதுச்சேரியில் டியூப்ளேக்குப்பின் லாலி (Lally) எனப் பட்டவர் கவர்னராக நியமிக்கப்பட்டார். வங்காளத்தில் சந்திரநாகூர் ஆங்கிலேயர்களால் பிடிபட்டு விட்டதெனக் கேள்வியுற்றதும், கர்நாடகத்தில் ஆங்கில ஸ்தாபனங்களைத் தாக்குவதற்காக லாலி பிரயத்தனப்பட்டார். முதலில் செயிண்ட் டேவிட் கோட்டை பிடிக்கப்பட்டுத் தகர்க்கவும் பட்டது. பின்னர் அவர் ஆற்காட்டையும் ஜயித்தார். அடுத்தபடியாக லாலி சென்னையைப் பிடிக்க முயற்சி செய்தார். அதற்காக அவர் ஹைதராபாத்திலிருந்த புஸ்ஸியைத் தம் சேனையுடன் மதராஸிற்கு வரும்படி உத்திரவிட்டார். அதையறிந்த கிளேவ் அதுதான் தக்ஷிணத்தைத் தாக்கத்தக்க சமயமெனக் கருதி கர்னல் போர்ட் (Colonel Ford) என்பவரின் கீழ் ஓர் சேனையை ஹைதராபாத்திற்கு அனுப்பினர். அவ் வீரர் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்து வட சர்க்காரையும் கைப்பற்றினர்.

ii. ஆங்கிலேயரின் வெற்றிகள் :

தக்ஷிணத்தில் பிரெஞ்சுத் தோல்வி ஏற்படு முன்னரே லாலியும், புஸ்ஸியுமாகச் சென்னையை முற்றுகையிட ஆரம்பித்து விட்டனர். 6 மாத காலமாக முற்றுகை நடந்துவந்

தது. ஆனால் சென்னையைப் பிரெஞ்சுக்காரர்களால் பிடிக்க முடியவில்லை. அச்சமயம் இங்கிலாந்திலிருந்து ஆங்கிலேயர்களின் உதவிக்காக ஸர் அயர் கூட் (Sir Eyre Coote) என்ற தளகர்த்தரின்கீழ் ஓர் சேனை அனுப்பப்பட்டது. அத்தளகர்த்தர் சென்னையை முற்றுகையிட்டிருந்த லாலியைத் தாக்கியதுமே லாலி ஓட்டம் பிடித்தார். ஆனால் கூட் எனப்பட்டவர் அவரைப் பின் தொடர்ந்தார். 1760-ல் வந்தவாசியில் ஆங்கில வீரர் லாலியையும், புஸ்ஸியையும் தோற்கடித்தார். சண்டையில் புஸ்ஸி அகப்பட்டு ஆங்கிலேயரிடம் சிறையானார். லாலி மட்டிலும் புதுச்சேரிக்குத் தப்பியோடி அங்கு ஒளிந்து கொண்டார்.

பிரெஞ்சுக்காரர்கள் இவ்வாறு ஓட்டம் பிடிக்கவே, இந்தியாவிலிருந்த அவர்களுடைய வர்த்தகஸ்தாபனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்டன. புதுச்சேரியும் ஆங்கிலேயரின் வசமாகி, அதன் கோட்டையும் இடிக்கப்பட்டது.

c. சமாதானம் (கி. பி. 1763)

1763-ல், ஐரோப்பாவில், இரு திறத்தினருக்கும் சமாதானம் ஏற்பட்டது. அது இந்தியாவிலும் ஓர் உடன்படிக்கையை உண்டு பண்ணியது. (1) அவ்வுடன் பாட்டின்படி, பிரெஞ்சுக்காரர்களுக்குப் புதுச்சேரி, சந்திரநாகூர், காரைக்கால் என்ற மூன்று இடங்களே திரும்பத் தரப்பட்டன. மற்ற ஸ்தலங்கள் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாயின. (2) பிரெஞ்சுக்காரர்கள் வங்காளத்தில் ராஜ்ய ஸ்தாபன முயற்சியைக் கைக்கொள்ளக் கூடாதென ஏற்பாடாயிற்று. (3) ஸலபட் ஜங்கால் பிரெஞ்சுக்காரருக்கு அளிக்கப்பட்ட வடசர்க்கார் ஆங்கிலேயர்களுக்கு அளிக்கப்பட்டது. (4) ஸலபட் ஜங்கி

னுடையவும், மகம்மது அலியினுடையவும் அரசுப்பட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (5) லாலி பிரான்சுக்கு அனுப்பப் பட்டு, அங்கு அரசாங்கத்தாரால், இந்தியாவில் பிரெஞ்சு ஸ்தாபனங்களை இழந்ததற்காகத் தூக்கிலிடப்பட்டார். பிரெஞ்சுக்காரரின் அதிகாரம் ஒடுங்கியது. ஆங்கிலேயர்களுக்கு எதிர்ப்பு இல்லாததால் அவர்களுடைய அதிகாரம் விரைவில் வளரத் தலைப்பட்டது.

பிரெஞ்சுக்காரரின் தோல்விக்குக் காரணம்

மேற் குறிக்கப்பட்டுள்ள மூன்று கர்நாடக யுத்தங்களிலும் பிரெஞ்சுக்காரர் தோல்வியுறப் பொது காரணங்கள் சிலவற்றை ஆராய்வோம்.

1. ஆங்கிலக் கடல் வலிமையும் கப்பற்படைத் திறமையும் :

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஜயமடைந்ததற்கு முக்கிய காரணம் ஐரோப்பாவிலும், இந்தியக் கடல்களிலும் அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட கடல் வலிமையேயாகும். ஆங்கிலக் கப்பற்படை பலம் பொருந்தியதாயும், தேர்ச்சிபெற்ற மாலுமிகளைக் கொண்டதாயு மிருந்தது. பின்னும் கப்பற் சண்டைகளிலும், கடற்கரைகளை விரோதிகளிடமிருந்து காப்பதிலும் ஆங்கிலேயருக்கு நிகர் அக் காலத்தில் எவருமில்லை. இவை நீங்க, இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு உதவி செய்யத் தக்க சமயங்களில் ஆங்கிலேயர்கள் தங்கள் கப்பற் படைகளை அனுப்பினார்கள். பிரெஞ்சுக்காரர்களால் அவ்வாறு செய்யச் சாத்தியப்படவில்லை. ஏனெனில் ஆங்கிலேயர்களுக்கே கடல் வலிமை உண்டாயிருந்தது. மேலும் ஐரோப்பியக் கடல்களில் பிரெஞ்சுக் கப்பற்படைகள் முறியடிக்கப் பட்டன.

2. ஆங்கிலத் தளகர்த்தர்களின் மேன்மையும், சுதந்திரமும் :

இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட ஆங்கிலத் தளகர்த்தர்கள் பிரெஞ்சுத் தளகர்த்தர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களா யிருந்தனர். கிளைவ், மேஜர் லாரன்ஸ், கூட் முதலான வீரர்களுக்கு நிகர் பிரெஞ்சுப் படையில் ஒருவரே யிருந்தார். அவர்தான் புஸ்ஸி யெனப் பட்டவர். ஆனல் சுயேச்சையாக எந்த காரியத்தையும் செய்ய அவர் அனுமதிக்கப்படவில்லை. உதாரணமாக, வடக்கிலும், கர்நாடகத்திலும் ஆங்கிலேயரின் அதிகாரம் வளர்ந்துகொண்டு வருங்கால் புஸ்ஸியின் யோசனைக்குக் குறுக்காக அவரைத் தக்ஷிணத்திலிருந்து தம் படையுடன் வரும்படி கட்டளையிட்டது எவ்வளவு மூடத்தனமான செய்கையாகும்? அவ்வாறு செய்ததாலன்றோ பிரெஞ்சுக்காரர் தக்ஷிணத்திலும்கூட, தங்களுடைய செல்வாக்கையும், ஸ்தலங்களையும் இழந்தனர்? புஸ்ஸி நீங்க, பிரெஞ்சுக் கட்சியில் டியூப்ளே சிறந்து விளங்கினர். ஆனல் அவர் தேர்ந்த தளகர்த்தரல்ல. பெருமை வாய்ந்த ராஜதந்திரியே யாவர்.

3. ஆங்கிலத் தளகர்த்தர்களுடைய்வும், உத்தியோகஸ்தர்களுடைய்வும் ஒற்றுமை :

மேலும் ஆங்கிலத் தளகர்த்தர்களிடத்திலும், ஆங்கில உயர்தர உத்தியோகஸ்தர்களிடத்திலும் ஒற்றுமை நிலவியிருந்தது. அதன் காரணமாக ஆற்காட்டு முற்றுகையைப் போன்ற தக்க யோசனை வாய்ந்த யுத்த ஏற்பாடுகள் எளிதிலும், சீக்கிரத்திலும் நடைபெற்றன. பிரெஞ்சுக்காரர்களிடத்திலோ அவ்வொற்றுமை கிடையாது. முதல் கர்நாடக யுத்தத்தில் டியூப்ளேயும், லாபோர்டினேயும் எவ்வாறு சண்டையிட்டுக் கொண்டனர், பாருங்கள்!

வினுக்கள்

1. மூன்று கர்நாடக யுத்தங்களில் ஏதாவது ஒன்று நிகழ்ந்ததற்குக் காரணங்களைக் குறிப்பிடுக.
2. டியூப்ளேயின் ராஜீய நோக்கமென்ன? அது ஏன் வெற்றி அடையவில்லை?
3. கிளைவின் போர்த்திறத்தை விளக்க இரண்டு உதாரணங்கள் தருக.
4. கர்நாடக யுத்தங்களில் பிரெஞ்சுக்காரர் தோல்வியுறப் பொதுக் காரணங்களில், இரண்டினை விளக்குக.
5. குறிப்புகள் தருக:—ஆம்பூர் சண்டை; பிரெஞ்சுக்காரர் வட சர்க்காரை அடைந்த விதம்.

6. ஆங்கிலேயர் வங்காளத்தை அடைதல்.

1. வங்காளம் சுயேச்சை அடைதல்:

ஔரங்கசீப்பிற்குப் பின் ஆண்ட அரசர்களுடைய காலத்தில் **வங்காளம்** சுயேச்சை அடைந்தது. அது முதற் கொண்டு அது டில்லி மன்னனுக்குக் கட்டுப்படாமல் ஓர் தனி நவாபால் ஆளப்பட்டு வந்தது. **1756-வரை அலிவர்டிகான்** என்ற நவாப் அதை ஆண்டு வந்தார். அவருக்குப்பின் அவருடைய பேரரான ஸுராஜ் உத்தௌலா வங்காளத்திற்கு நவாப் ஆனார்.

2. ஸுராஜ் உத்தௌலா:

அலிவர்டிகான் வங்காளத்தில் வியாபாரம் செய்துவந்த ஆங்கிலேயரிடம் சிநேகப்பான்மை கொண்டிருந்தார். ஆனால் அவரது பேரரோ, ஆங்கிலேயர் வங்காளத்திலிருப்பது தம்முடைய அதிகாரத்திற்கு அழிவை யுண்டுபண்ணுமென எண்ணி, அவர்களிடம் வெறுப்புக் கொள்ளலானார். அவர்களை

எப்படியாவது வங்காளத்தைவிட்டுத் துரத்திஅடித்துவிட வேண்டுமென முயற்சித்தார்.

3. ஆங்கிலேயருடன் அவர் தொடுத்த போருக்குக் காரணங்கள்:

(1) ஆங்கிலேயருடன் ஸுராஜ் உத்தௌலா தொடுத்த போருக்கு அவர்களிடம் அவர் கொண்டிருந்த பகைமை மாத்திரம் காரணமல்ல. மற்ற காரணங்களுமுண்டு. (2) தமது குடிகளில் ஒருவனான **கிருஷ்ணதாஸ்** என்னும் பணக்காரன், தாம் கேட்ட பணத்தைக் கொடுக்க மறுத்துத் தமக்கு எதிரிகளான ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தான். அதைக் கண்ட ஸுராஜ் உத்தௌலா அவனைத் தம்மிடம் ஒப்புவிக்குமாறு ஆங்கிலேயர்களைக் கேட்டார். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யச் சம்மதிக்கவில்லை. (3) மேலும் ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஓர் யுத்தம் நடக்கும் போலிருந்தது. அந்த யுத்தம் இந்தியாவிலும் பரவலாமென எண்ணி, ஆங்கில கவர்னர் கல்கத்தாவில் கட்டியிருந்த **வில்லியம்** என்ற கோட்டையைச் செப்பனிட்டு வீரர்களை நிரப்பி பலப்படுத்தினர். ஏற்கனவே ஆங்கிலேயரை வெறுத்த ஸுராஜ் உத்தௌலா கல்கத்தா கவர்னருக்குத் தம் கோட்டையை புதுப்பிக்கக் கூடாதென உத்திரவிட்டார். ஆனால் ஆங்கிலேயர் அவரது கட்டளையைப் பொருட்படுத்தவில்லை. ஆகவே ஸுராஜ் உத்தௌலா ஆங்கிலேயர் மீது போர் தொடுத்தார்.

4. கல்கத்தாவைப் பிடித்தல்:

மேற்குறிக்கப்பட்டுள்ள காரணங்களின் நிமித்தம் ஸுராஜ் உத்தௌலா ஓர் பெரிய படையைத் திரட்டிக் **காஸிம் பஜாரிலிருந்த** பண்டகசாலையைக் கைப்பற்றி **வில்லியம் கோட்டையையும்** தகர்த்தெறிந்தார். 5 நாட்கள்வரை முற்றுகை நடந்தது. அச்சமயம் கோட்டையிலிருந்து சிலர் பயந்து ரகசிய

மாகத் தப்பியோடினர். ஆனாலும் கோட்டை பிடிபடும் பொழுது 146 பேர் தங்கியிருந்தனர். அவர்கள் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

5. கல்கத்தா இருட்டறைச் சம்பவம்:

அன்றிரவே அவர்கள் எல்லோரையும் நவாப் ஓர் சிறிய அறையில் அடைக்க உத்திரவிட்டாரென்றும், அவ்வாறு செய்ததால் நிற்க இடமின்றியும் சுவாசிக்கக் காற்றின்றியும், 123 பேர் மாண்டுவிட்டனரென்றும், மறுநாட் காலையில் மிஞ்சியிருந்தவர்களும் நவாப்பினது ஆக்ஞையினால் கொடுமையான கஷ்டங்களுக்குள்ளாயினரென்றும் கூறப்படுகிறது.

ஆனால் இதைக் குறித்துச் சில அபிப்பிராய பேதங்கள் உலாவிவருகின்றன. ஒரு சாரார் நவாப் அவ்வாங்கிலேயர்களைச் சிறையிடத்தான் உத்திரவிட்டாரேயொழிய அவ்வளவு சிறிய அறைக்குள் தள்ளி மடியச் செய்யக் கட்டளையிடவில்லையென்று கூறுகின்றனர். பின்னுமொரு சாரார் அந்த நிகழ்ச்சி நடக்கவில்லை யென்றும், அது கல்கத்தா கவர்னரான ஹால்வெல் என்பவருடைய கட்டுக்கதையென்றும் சாதிக்கின்றனர். பின்னும் சிலர் அது நடந்தது வாஸ்தவமேயென அறைகின்றனர். ஆனால் அச்சம்பவம் நடக்கவில்லையென்ற அபிப்பிராயம்தான் தற்காலத்தில் பெரும்பாலோரால் ஏற்கப்படுகிறது.

6. கல்கத்தா மீண்டும் ஆங்கிலேயர் வசமாகுதல்:

கல்கத்தா பிடிபட்டதெனக் கேள்வியுற்றதுமே கிளைவின் கீழ் ஓர் தக்க சேனையும், வாட்சன் என்னும் கப்பல் அதிகாரியின் கீழ் ஓர் கப்பற் படையும் வங்காளத்திற்குச் சென்று, கல்கத்தாவை மீட்க ஏற்பாடுகள் செய்யத் தலைப்பட்டன. கல்கத்தா எளிதில் ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டது. உடனே அதனது கோட்டையும் பலப்படுத்தப்பட்டது. அப்பொழுது

ஆங்கிலேயரிடம் தோல்வியடைந்த ஸுராஜ் உத்தௌலா கிளைவுடன் ஓர் உடன்படிக்கை செய்து முடித்தார். அதன்படி தம்மிடமிருந்த கைதிகளை விடுவித்துக் கோட்டையைக் கட்டச் சம்மதித்து, ஆங்கிலேயர்களின் வியாபார உரிமையையும் ஏற்றுக்கொண்டார்.

7. கிளைவின் சதி:

இவை நிற்க 1756-ல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போர் தொடங்கியது. அச்சமயம் வங்காளத்திலிருந்த கிளைவ் இந்தியச் சண்டையில் தாம் முந்த வேண்டிப் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான சந்திரநாகூரைக் கைப்பற்றினர். அவ்வெற்றி ஸுராஜ் உத்தௌலாவின் பொருமையை அதிகரிக்கச் செய்தது. ஆகவே அவர் பிரெஞ்சுக்காரர்களின் சிநேகத்தை விரும்பினர். ஸுராஜ் உத்தௌலாவை யெதிர்க்க அது ஒன்றே தகுந்த காரணமாகுமெனக் கொண்டு அவரை எதிர்க்கக் கிளைவ் முயற்சித்தார்.

அதற்கேற்றாற்போல் வங்காளக் குடிகளும் தங்களுடைய நவாபிடத்தில் வெறுப்புற்று மீர்ஜாபரை நவாப் ஆகும்படி வேண்டினர். மீர்ஜாபருக்கும் சபலம் தட்டியது. ஆகவே அவன் கிளைவின் உதவியை நாடினன். அது அவருக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று. அவர் உடனே அதற்குச் சம்மதித்து நவாபிற்கெதிரே போர் நடத்துங்கால் மீர்ஜாபர் தம்பக்கம் அவனது சேனையுடன் வந்துவிட வேண்டுமென்று பேசிமுடித்தார். இவ்விஷயம் அமீன் சந்த் என்ற ஓர் ஹிந்துவிற்குத் தெரிய வந்தது. அவன் அதை நவாபிடம் தெரிவித்துவிடுவதாகப் பயமுறுத்தினன். அதற்காகக் கிளைவ் அவனுக்கு வாய்ப்பூட்டை மாட்ட 40 லக்ஷம் ரூபாய் தர ஒப்புக்கொண்டார். ஆனால் அவ்விழிகுலத்தோனை ஏமாற்றக் கருதி ஓர் பொய்ப் பத்திரம் தயாரித்ததாகவும்

அதில் வாட்சனுடைய கையெழுத்தைத் தாமே போட்டதாக வும் சொல்லப்படுகிறது.

8. பிளாஸி யுத்தம்:

அவ்வேற்பாட்டிற்குப் பின் பிளாஸி யென்ற இடத்தில் ஆங்கிலேயருக்கும் ஸுராஜ் உத்தௌலாவிற்கும் போர் நிகழ்ந்தது. முன்னுலேயே தயாரித்தபடி, யுத்தத்தின் நடுவே, மீர் ஜாபர் தன் சேனையுடன் கிளைவின் பக்கம் வந்து சேர்ந்துவிட்டான். அதைக்கண்ட ஸுராஜ் உத்தௌலா மனம் தளர்ந்து யுத்த களத்தினின்றும் தப்பியோடினுர். ஆனுல் அவர் பின்பு பிடிக்கப்பட்டு மீர்ஜாபரின் புத்திரனுல் கொல்லப்பட்டார். மீர்ஜாபரே நவாப் ஆக்கப்பட்டார். அவருடைய தலை நகரம் மூர்ஷிதாபாத் ஆகும்.

9. பிளாஸிச் சண்டையினுல் உண்டான பலன்கள் :

1. பிளாஸியில், ஆங்கிலேயருக்குக் கிடைக்கச்செய்த வெற்றிக்காக ஒரு கோடி ரூபாய்க்குமேல் கிளைவுக்கு வெகுமதி கிடைத்தது. 2. ஆங்கிலேயருக்கு அடங்கிய நவாப் வங்காளத்தை ஆளத்தொடங்கினுன். 3. ஆங்கிலேயருக்கு 24 பரிகாணங்கள் ஜாகீராக வழங்கப்பட்டன. அதனின்றும் வருஷா வருஷம் நவாபிற்குக் கிட்டவேண்டிய வரிப்பணம் கிளைவிற்கே அளிக்கப்பட்டுவிட்டது. 4. அந்த ஜாகீர்தான் இந்தியாவிலேயே ஆங்கிலேயருடைய ராஜ்யத்திற்கு அடிப்படையாய் உதவிற்று.

10. வங்காளத்தில் ராஜ்ய ஸ்தாபனம் ஏற்பட்டதினுல் உண்டான பயன் :

வங்காளத்தில் ஆங்கிலேயருக்கு ராஜ்ய ஸ்தாபனம் ஏற்பட்டது அவர்களுக்கு மிக்க நன்மையைப் பயந்தது. ஏனெனில் கங்கைச் சமவெளி மிகச் செழிப்புற்ற பிரதேசம். அதிலும்

வங்காளம், கங்கையும், பிரம்மபுத்திராவும் சங்கமமாகிற இடத்தில் அமையப்பெற்றிருக்கிறது. அவ்விரண்டு நதிகளும் ஜீவ நதிகளாகும். மேலும் அவற்றின் கரைகளில் படியும் வண்டல் மண் மிக்க சாரம் கொண்டுள்ளது. அதனால் விளைபொருள்கள் அங்கு ஏராளமாய் உற்பத்தியாகின்றன. பின்னும் அப்பிரதேசத்தில் பாயும் ஆறுகள் பெரியவையானது பற்றிக் கரையோரங்களில் தொழிற்சாலைகள் உண்டாயிருப்ப



வங்காளச் சண்டையில் சம்பந்தப்பட்ட ஊர்கள்.

துடன், அந்நதிகளின் வழியாகச் சாமான்கள் மேலும் கீழும் படகுகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. அவ்விரு நதிகளின் முகத்துவாரங்களும் அகலமாயும், ஆழமாயுமிருப்பதால், அயல் நாட்டுச் சாமான்களைக்கொண்ட கப்பல்களை உள்ளே வரவிடுகின்றன. இவை நிற்க, அச்சமவெளி ஏராளமான மழையைக் கொண்டுள்ளது கணக்கற்ற நகரங்களை அடைந்திருக்கிறது. புத்தி கூர்மை வாய்ந்த மாந்தர்களையும் அடையப் பெற்றிருக்கிறது. இவ்வளவு பெருமைவாய்ந்த ஸ்தலத்

தில் ராஜ்யம் ஒன்று ஏற்படுமாயின், அது எவ்வளவு நேர்த்தியாய் வளர்ந்து துலங்கும்? பின்னும் வட இந்தியாவில் அச்சமயம் பேரரசர்கள் ஒருவருமில்லாமல் அது குழப்பத்தில் சிக்குண்டு, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைப் பெருக்கிற்று.

. ஐரோப்பியரது ராஜ்ய ஸ்தாபனத்திற்கும் ஏனையோரின் ராஜ்யம் தோன்றியதற்கும் உள்ள வித்தியாசம் :

வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் முன்னேற்றத்தைப் பற்றி இங்கு ஓர் விஷயத்தை மனத்தில் இறுத்திக்கொள்ளுவது பயன்படும். இந்தியாவின்மீது பண்டைக்காலத்திலும், அதற்குப் பின்னும், படையெடுத்த சாகர், குஷானர், அராபியர், மகம்மதியர் முதலாயினோர் நாட்டினுள் பிரவேசித்துத் தங்களது ராஜ்யத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருக்கிக் கொண்டே கடற்கரையை அணுகினர். ஆங்கிலேயர்களோ கரையோரங்களிலிருந்தே உள்நாட்டில் பிரவேசிக்கலாயினர். இம் மாறுபாடு எம் முக்கிய அம்சத்தைக் குறிக்கின்றது? ஐரோப்பியரின் கடல் வலிமையையும், கடற் போர்த்திறமையையு மன்றோ? இந்தியாவினின்றும் பரந்த கடல்களால் பிரிக்கப்பட்ட ஐரோப்பியர்களுக்கு கடல் ஆதிக்கம் மிக உபயோகமாகும். அதுவே இந்தியாவில் அவர்களுடைய ராஜ்யத்தை நிலைக்கச்செய்ய வல்லது.

வினாக்கள்

1. ஆங்கிலேயருடன் ஸுராஜ் உத் தௌலா தொடுத்த போருக்குக் காரணம் குறிப்பிடுக.
2. ஆங்கில ஆதிக்கத்தைப் பிளாஸி வெற்றி எவ்வண்ணம் பெருக்கியது?
3. இருட்டறைச் சம்பவத்தைக் குறித்த அபிப்பிராய பேதங்களை விவரிக்க.

4. கிளைவ் யாருக்கெதிரே, என், சதி செய்தார்? அதைப்பற்றி ஓர் குறிப்பு எழுதுக.
5. ஐரோப்பியரின் ராஜ்ய ஸ்தாபனத்திற்கும், இந்தியாவில் குடியேறிய ஏனையோரின் ராஜ்ய ஸ்தாபனத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

7. கி. பி. 1760—1764 வரை வங்காள நிலை.

1. கிளைவ் இங்கிலாந்திற்குச் செல்லுமுன் வங்காளத்தின் நிலை :

மீர் ஜாபரை நவாப் ஆக்கிய பிறகு ஆங்கிலேயரின் அதிகாரம் வங்காளத்தில் ஓங்கத் தலைப்பட்டது. டச்சுக்காரர்களுடையவும், பிரெஞ்சுக்காரருடையவும் போட்டி ஒழிந்தது. ஆயினும் வங்காளத்தை ஆண்ட நவாப் பலஹீனனாகவும், சாமர்த்தியமற்றவனாகவு மிருந்தான். ஆகவே மொகலாயச் சக்கரவர்த்தியும், மஹாராஷ்டிரர்களும் வங்காளத்தைத் தாக்கினர். ஆனால் ஆங்கிலேயர்கள் அவர்களைத் துரத்தியடித்தனர். அதற்காக நவாப் அவர்களுக்கு யுத்தப்பணம் தர வேண்டியதாயிற்று. அதனால் பொக்கிஷமும் காலியாயிற்று.

2. மீர்ஜாபர் டச்சுக்காரர்களைச் சேருதலும், தோற்றலும் :

தனது நிலை மிகவும் நெருக்கடியாக இருந்ததால் மீர் ஜாபர் ஜனங்களிடமிருந்து கட்டாயப் பணம் வசூலிக்க ஆரம்பித்தான். அது ஆங்கிலேயரால் ஆக்ஷேபிக்கப்பட்டது. தன்னுடைய கஷ்டத்தை எவ்வண்ணமும் போக்கிக்கொள்ள முடியாததைக் கண்டு, சுயேச்சையாக ஆளவிரும்பி, மீர்ஜாபர் டச்சுக்காரர்களின் உதவியை நாடினான். அதையறிந்த கிளைவ் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான சின்ஸுராவைப் பிடிக்கச்செய்து டச்சு யெதிர்ப்பைப் போக்கினார். அதற்கு மேல் மீர்ஜாபர் ஆங்கிலேயரைச் சரணமடைந்தான். 1760-ல்

கிளைவும் தேக அசௌக்கியத்தை முன்னிட்டு இங்கிலாந்திற்குச் சென்றார்.

3. மீர்காஸிம் நவாபாகுதல் :

கிளைவிற்குப் பின் வான்ஸிட்டார்ட் என்பவர் வங்காளத்திற்குப் பிரதம உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். அவருடைய காலத்தில் மீர் ஜாபரின் பலஹீனம் பின்னும் அதிகரிக்கவே, அவர் மீர் ஜாபரை விலக்கி, அவனுடைய மருமகனான மீர் காஸிம் என்பவரை நவாப் ஆக்கினார். தாம் நவாப் ஆக்கப்பட்டதற்காக மீர் காஸிம் வருஷத்திற்கு 50 லக்ஷம் ரூபாய் வருமானத்தைத் தரக்கூடிய பர்துவான், மிட்னபூர், சிட்டகாங்க் என்ற ஜில்லாக்களை ஆங்கிலேயருக்குத் தந்தார். மேலும் ஏராளமான பணத்தையும் கம்பெனியாருக்கு வழங்கினார்.

4. மீர் காஸிமின் முயற்சியும் ஆங்கில விரோதமும் :

• மீர் காஸிம் திறமை வாய்ந்தவர். தேச முன்னேற்றத்திற்கான நோக்கங்களைக் கொண்டவர். பெரு முயற்சிகளைக் கையாளும் சக்தியுடையவர். தாம் நவாப் பதவியை அடைந்ததும் தேசத்திலுண்டான குழப்பங்களைப் போக்கிக் கடனைத் தீர்த்துப் பொக்கிஷத்தை நிரப்பவும் செய்தார்.

பின்பு ஓர் முக்கியமான சீர்திருத்தத்தைச் செய்ய ஆரம்பித்தார். அதாவது ஆங்கிலேயக் கம்பெனிக்கு வங்காளத்தில் வியாபாரம் செய்ய வரி இல்லா உரிமை ஏற்பட்டிருந்தது. அதனால் கம்பெனியின் லாபம் பெருகியது. அதைக்கண்ட ஆங்கில உத்தியோகஸ்தர்களும், தங்களுடைய சொந்த வியாபாரங்களை வரிகொடாமல் நடத்தத் தலைப்பட்டனர். அத்துடன் நிற்காமல் வங்காளக் குடிகளிடமிருந்தும் பணத்தைப் பெற்று அவர்களுடைய சாமான்களையும் தங்களுடைய படகுகளில் ஏற்றி நவாபுக்குச் சேரவேண்டிய வரியைப் போக்கி

னர். அதை அறிந்த மீர் காஸிம் அந்த இரகஸ்ய வியாபாரத்தைப்போக்க விரும்பி யாருமே வரி கொடுக்க வேண்டாமென உத்திரவிட்டார். அக் கட்டளை ஆங்கிலேயருக்குக் கோபத்தை மூட்டியது. எப்பொழுது அவர்களுடைய கோபத்திற்கு பாத்திரமாய் விட்டாரோ இனித் தாம் தம்முடைய நிலையைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கரு முர்ஷிதாபாத்தினின்றும், மாங்கீருக்குத் தம் தலைநகரை ற்றினர். அந் நகரிலிருந்த கோட்டையையும் பலப்படுத்தின .

5. பாட்ன படுகொலை (கி. பி. 1763)

மீர் காஸிமின் செய்கையைக்கண்ட ஆங்கிலேயர் அவரை நவாப் பதவியினின்றும் தள்ளிவிட்டு மீர் ஜாபரை மீண்டும் சிங்காதனத்தில் ஏற்றினர்கள். அதற்குப்பின் தமக்கு உதவியாக அயோத்தி நவாபான ஷூஜா உத்தௌலாவையும், டில்லிச்சக்கரவர்த்தியான ஷா ஆலத்தையும் துணைசேர்த்துக் கொண்டார். அதைக்கண்ட ஆங்கிலேயர் பாட்னவை பிடித்துக் கொண்டனர். ஆனல் மீர் காஸிம் அதைமீட்டு அங்கிருந்த 200 ஆங்கிலேயர்களைச் சிறை செய்தார். ஆனல் தாம்தோற்றுவிட்டதற்காக ஆங்கிலேயர்கள் பின் வாங்கவில்லை. அடுத்தபடியாக அவர்கள் தொடுத்த மூன்று போர்களிலும் மீர் காஸிமைத் தோற்கடித்து, மாங்கீரையும் கைப்பற்றினர்கள். அப்பொழுது மீர் காஸிம் பாட்னவிற்கு ஓடினர். அங்கும் அவர்கள் வரவே மீர் காஸிம் தம்மிடமிருந்த ஆங்கிலக் கைதிகளனைவரையும் கொலை செய்துவிட்டுத் தம் நாட்டை விட்டு ஓடி அயோத்தி நவாபை அடைந்தார். பின்பு வங்காளமும், பீஹாரும் ஆங்கிலேயர் கைவசமாயிற்று.

6. பக்ஸார் சண்டை (கி. பி. 1764)

இனி மீர் காஸிம் மிதமாயிருக்க முடியாதன்றே? ஆகவே அவர் மேற்கூறப்பட்டுள்ள சிநேகிதர்களைச் சேர்த்துக்

கொண்டு, 1764-ல், பக்ஸார் என்னுமிடத்தில் ஆங்கிலேயரை யெதிர்த்தார். சண்டை வெகு ஆவேசத்துடன் புரியப்பட்டது. ஆனால் ஆங்கிலத் தளகர்த்தரான ஸர் ஹெக்டர் மன்ரோ என்பவர் அம்மூவரையும் தோற்கடித்து, அவர்களுடைய சேனைகளையும் சின்னாபின்ன மாக்கினார். ஷா ஆலம் பிடிபட்டு ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டார். ஷூஜா உத்தௌலாவும், மீர் காஸிமும் யுத்தகளத்தைவிட் டோடினார்கள். சில நாட்களுக்குப்பின் ஷூஜா உத்தௌலா சரணமடைந்தான். ஆனால் மீர் காஸிம் போன இடம் தெரியவில்லை.

இவ்வாறு வங்காளத்தில் குழப்ப மேற்படவே, அதைப் போக்கி ஆட்சியைச் சீர்படுத்தக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அத்யக்ஷகர்கள் கிளைவை மீண்டும் இந்தியாவிற்கு அனுப்பினார்கள்.

வினாக்கள்

1. பக்ஸார் சண்டை ஏன் புரியப்பட்டது? அதனது முடிவு என்ன?
2. மீர் காஸிமிற்கும், ஆங்கிலக் கம்பெனியாருக்கும் சண்டை நிகழக் காரணம் என்ன?
3. குறிப்புகள் தேவை: பாட்னா படுகொலை, சின்ஸுரா பிடிபடுதல்.

8. கிளைவ் பிரபுவின் ஆட்சியும், (கி. பி. 1765-1767)

அவர் சென்றபின் வங்காள நிலையும் (கி. பி. 1767-1772)

I. கிளைவ் பிரபுவின் ஆட்சி.

1. கிளைவ் பிரபுவின் வருகை :

பிளாஸி யுத்தம் இங்கிலாந்தில் கிளைவின் பெருமையைப் பெருக்கிற்று. ஆங்கில ராஜாங்கம் அவருக்குப் பிரபுப் பட்டமும் வழங்கியது. ஆகவே, அவர் இந்தியாவிற்கு வரும் பொழுது கிளைவ் பிரபு என்ற பட்டத்துடன் வந்தார். அவருக்குச் சேனாதிபதிப் பதவியும் வழங்கப்பட்டது. அவர் முதலில் வங்காளத்திலும், அதற்குச் சுற்றிலுமுள்ள நாடுகளில் தென்பட்ட சீர்கேட்டைக்கண்டார். உடனே அதைப் போக்கத் தக்க முறைகளைக் கையாளத் தொடங்கினார்.

2. அலகபாத் உடன்படிக்கை (கி. பி.1765)

முதலில் ஷா ஆலத்துடனும், அயோத்தி நவாபுடனும் அலகாபாத்தில் ஓர் உடன்படிக்கை செய்து முடித்தார். அதன்படி அயோத்தி நவாபிற்குச் சொந்தமான கோரா, அலகாபாத் என்ற ஜில்லாக்கள் டில்லிச் சக்கரவர்த்தியான ஷா ஆலத்திற்குக் கொடுக்கவேண்டும். ஆனால் யுத்தச் செலவிற்காக ஆங்கிலேயருக்கு 50 லக்ஷம் ரூபாய் தரவேண்டும். ஷா ஆலமோ ஆங்கிலேயர்களுக்கு வங்காளம், பீஹார், ஒரிஸா என்ற மாகாணங்களில் வரிவசூல் செய்யும் உரிமையை வழங்க வேண்டும். மேலும், அவருக்காகத் தொகுக்கப்பட்ட கோராவையும், அலகாபாத்தையும் ஆங்கிலேயர் வைத்துக்கொண்டு,



1765-ல் ஆங்கிலேயரின் ஆட்சி

அதற்கும், முன் குறிப்பிட்ட வரி வசூல் உரிமைக்கும் வருஷந் தோறும் 26 லக்ஷம் ரூபாய் ஷா ஆலம் அடையவேண்டும்.

2. **ஆங்கிலேயருக்கு இவ்வுடன்படிக்கையால் உண்டான பயன் :**

இவ்வுடன்படிக்கை இந்து தேச சரித்திரத்திலே மிக விசேஷத்தைக் கொண்டது. ஏனெனில் வங்காளம் முதலிய மூன்று மாகாணங்களில் வரிவசூல் செய்ய அடைந்த உரிமை இந்தியாவில் ஆங்கில ராஜ்யபாரத்திற்கு அஸ்திவாரம் போல் உதவியது. அடுத்தபடியாகக் **கோரா, அலகாபாத்** என்ற இடங்கள் மிகச் செழிப்பான பிரதேசமாகும். அது ஆங்கிலேயரின் வருவாயைப் பெருக்கியது. மேலும் இவ்வுடன்படிக்கையால் ஆங்கிலேயருக்குக் கஷ்டத்தை விளைவிக்கக்கூடிய டில்லிச் சக்கரவர்த்தியும், அயோத்தி நவாபும் ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டனர்.

3. **வங்காளத்தில் இரட்டை யாட்சியின் ஸ்தாபனம் :**

அடுத்தபடியாகக் கிளைவ் வங்காள நிலைமையை நேராக்க முயன்றார். அச்சமயம் வங்காளம் மீர்ஜாபரின் குமாரனால் ஆளப்பட்டு வந்தது. அவன் நாட்டையாள வலிமையும், சாமர்த்தியமு மற்றிருந்ததால் கிளைவ் அவனுடன் ஓர் ஏற்பாடு செய்து முடித்தார். அதன்படி ராஜ்யபாரத்தில் இரு தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. நியாயம் வழங்குவது, கலகங்களை யடக்கி, அமைதியை நிலைநாட்டுவது, வரிவசூல் செய்வது முதலியவை எல்லாம் நவாபினது வேலையெனத் திட்டம் செய்யப்பட்டது. வசூலித்த வரியை வாங்கிவைத்தல், அதை அரசியனுக்காகச் செலவழித்தல், தக்க படையொன்றைச் சர்க்கார் செலவில், எதிரிகளினின்றும் நாட்டைக் காப்பதற்காகப் பரிபாலித்து வருதல் முதலிய காரியங்கள் ஆங்கிலேயரின் வேலையெனக் குறிக்கப்பட்டன. இவ்வண்ணம் இரண்டு தனித் துறைத்தனத்தார்களைக் கொண்டிருந்ததால், இவ்வாட்சிக்கு

இரட்டைத் துறைத்தனம் அல்லது இரட்டை ஆட்சி எனப் பெயர் தோன்றலாயிற்று. இவ்வித ஏற்பாட்டில் எத்தொகுதியினர்க்கு அதிக சௌகர்யமுண்டாகுமென்பதை யோசித்துப் பாருங்கள்!

4. கிளைவின் இதர சீர்திருத்தங்கள் :

கிளைவ் கம்பெனியின் நிலையை மேன்மையுறச் செய்யப் பின்னும் சில சீர்திருத்தங்களை உண்டாக்கினார்.

(1) முதலில் உபயோகமற்ற உத்தியோகஸ்தர்களை வேலையினின்றும் விலக்கி அவர்கள் ஸ்தானங்களில் தக்க ஆட்களை நியமித்தார். (2) பொதுவாக ஆங்கிலேய அதிகாரிகள் சுதேசக் குடிகளைத் துன்புறுத்திப் பணம் வாங்கியும், சிற்றரசர்களிடமிருந்து லஞ்சம் பெற்றும், சுயேச்சையான வியாபாரத்தை நடத்தி அதிக லாபமடைந்தும், மேலும் சுயநல வழிகளையே பின்பற்றிக் கம்பெனியின் முன்னேற்றத்தைக் கவனியாது மிருந்ததால், கிளைவ் அவற்றையெல்லாம் தடுத்து ஆங்கில அதிகாரிகளின் வருமானம் குறையாதிருக்க வேறு சௌகரியங்கள் செய்து தந்தார். ராணுவத்தின் செலவு அதிகமாவதைக்கண்டு யுத்த காலங்களில் சிப்பாய்களின் இரட்டைப் படியை நிறுத்தி, எக்காலத்தும் ஒரே படி தான் வழங்கப்படுமெனத் திட்டம் செய்தார். அதனால் ராணுவத்தில் கலகங்கள் தோன்றின. ஆனால் அவர் தமது சாமர்த்தியத்தாலும், திறமையாலும், அவைகளைப் போக்கினார். பொது ஜனங்களுக்கு ஓர் நன்மை புரியக் கருதி உணவுப்பொருள்களில் அத்தியாவசியமான உப்பின் வரியைக் குறைத்தார்.

5. கிளைவ் இங்கிலாந்திற்குத் திரும்புதலும், அவரது முடிவும் :

கிளைவ் இந்தியாவிற்கு வந்து இரண்டு வருடங்களுக்குள்ளாக அவர் செய்த சீர்திருத்தம் யாவராலும் மதிக்கத்

தக்கதே அன்றோ? அவர் மீண்டும் வியாதியால் பீடிக்கப் பட்டு 1767-ல் இங்கிலாந்திற்குத் திரும்பினார். அங்கு அவர் தம் வாழ்நாட்களைக் கழித்து வருங்கால், அவருடைய எதிரிக ளால் அவரது இந்திய ஆட்சியைக் குறித்துப் பார்லிமெண் டில் குற்றம் சாட்டப்பட்டனர். அவருக்கு அவமரியாதை ஏற்படும்போல் தோன்றிற்று. மனமும் சோர்ந்தது. ஆகவே அவர் 1774-ல் எதிரிகளின் ஏசுதலுக்கு இடம் தராமல் தம் மைத்தாமே சுட்டுக்கொண்டு இறந்தார்.

கிளைவின் அரசாட்சியைக் குறித்த அபிப்பிராயங்கள் பல வாராயிருப்பினும் அவரது சரித்திரத்தை நோக்குங்கால், நாம் அவரை மெச்சாமலிருக்க முடியவில்லை. ஓர் ஏழைக் குடியில் பிறந்து தம் நாட்டிலேயே வேண்டாமெனப் பெற் றோரால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு, இங்கும் குமஸ்தா வேலையைச் செய்ய முடியாமற் திகைத்து, பின்பு யதேச்சை யாக ராணுவத்தில் சேர்ந்து, அங்கு அதற்குமேல் படிப்படி யாகத் தன் பதவியை உயர்த்திக்கொண்டு, அரிய செயல்களைப் புரிந்து, அனைவரின் புகழ்ச்சியையும் பெற்றுக் கவர்னர் பதவி யையும் ஏற்று, வெற்றி வீரராகக் காலங்கழித்துக் கடைசியாய் ஓர் வீரரைப்போலவே உயிரையும் மாய்த்துக் கொண்டார் என்றால் அது எவ்வளவு விசேஷம்!

II. கிளைவ் சென்ற பொழுதும், சென்ற பின்னும் இந்தியாவின் நிலை

1. கிளைவ் இந்தியாவை விட்டுச் செல்லுங்கால் அந்த ஆங்கிலேய ரின் நிலை எவ்வாறிருந்தது?

வங்காளம் முழுவதும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத் தைப் பெற்றிருந்தது. வங்காளத்தைச் சேர்ந்த இதர இடங் களிலும், ஆங்கிலேயரின் அதிகாரம் அங்கீகரிக்கப்பட்டு வங்

தது. எல்லோரையும் ஜயித்து வந்த மஹாராஷ்டிரர்கள் மூன்ருவது பானிபட் யுத்தத்திற்குப் பின் தங்களுடைய பலத்தை இழந்தனர். பஞ்சாபோ சீக்கியர்களால் வெகு திறமையுடன் ஆளப்பட்டு, வட மேற்கு எல்லையைப் பலப் படுத்தியது. ஆப்கானிஸ்தானமும் தக்க அரசர்களைக்கொண்டு மத்திய ஆசியாவினின்றும் எதிரிகள் எவரும் இந்தியாவிற் குள் நுழையா வண்ணம் நம் நாட்டைக் காத்து வந்தது. இப்படிப்பட்ட நிலையை யுண்டு பண்ணக் கிளைவிற்கு எவ் வளவு ஆற்றல் இருக்கவேண்டும்!

2. ஆனல் இப்படிப்பட்ட நிலையைக் கிளைவ் உண்டு பண்ணிய கொஞ்ச காலத்திற்குப் பின் அது சீர்கேடுறத் தலைப்பட்டது. இரட்டை ஆட்சி சரிவர நடை பெருமல் போயிற்று, பல துறைகளிலும் ஜனங்களின் துயரம் பெருகி யது. குடிகளின் வருவாய் குறைந்தது. விவசாயமும், கைத் தொழிலும் பெரும்பாலும் அற்றன. இவைகளுக்கிடையே வரி வசூலிப்போரின் கொடுமையும் சொல்லொணுதிருந்தது. எல்லாம் ஒன்று சேரவே, வங்காளத்தில் ஓர் கொடிய க்ஷாம மும் உண்டாகியது. கொள்ளை நோயும் மக்களைக் கணக் கின்றி மாளச் செய்தது. சுமார் ஒருகோடிக்குப் பக்கமாகக் குடிமக்கள் மாண்டனர். இவைகளுக்கு ஏற்ருற்போல் கிளை வுக்குப் பின் நியமிக்கப்பட்ட கவர்னர்களும் பிரயோஜன மற்றவர்களாக இருந்தனர். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் வாரன் ஹேஸ்டிங்ஸ் கி. பி. 1772-ல் நாட்டின் குறைகளைப் போக்கக் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

வினுக்கள்

1. கிளைவ்சென்றபின் இந்தியாவின் நிலை எவ்வண்ணம் இருந்தது?
2. கிளைவின் இரட்டை ஆட்சி ஸ்தாபனத்தை விளக்குக.
3. அலகாபாத் உடன்படிக்கையின் உபயோகத்தை வருணிக்க

9. வாரன் ஹேஸ்டிங்ஸின் பூர்வ சரித்திரமும், (1732-1772), கவர்னர் பதவியும் (1772-1774)

1. வாரன் ஹேஸ்டிங்ஸின் பூர்வ சரித்திரம் :

வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்தில் சர்ச்சில் என்ற கிராமத்தில் பிறந்தவர். அவர் கிளைவைப்போலவே தமது 19-வது வயதில் இந்தியாவிற்கு வந்தார். காஸீம்பஜாரில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். காஸிம்பஜார் ஸூராஜ் உத்தெளலாவால் பிடிபட்டபொழுது அங்கிருந்து தப்பியோடியவர்களில் அவரும் ஒருவராகும். பின்பு பிளாஸி யுத்தத்தில் கிளைவின் கீழிருந்து சண்டை செய்தார். அதற்குப் பின் மீர்ஜாபர் ஆண்டபொழுது மூர்ஷிதாபாத்தில் ஸ்தானிகராக வேலை பார்த்து வந்தார். 1761-ல் கல்கத்தாவில் கௌன்ஸிலர் பதவியை ஏற்றார். 1765-ல் இங்கிலாந்து சென்றார். 1769-ல் திரும்பி இந்தியாவிற்கு வந்து சென்னைக் கௌன்ஸிலின் 2-வது அங்கத்தினராக வேலையில் அமர்ந்தார். வாரன் ஹேஸ்டிங்ஸ் தாம் பார்த்துவந்த ஒவ்வொரு வேலையிலும், உற்சாகத்தையும், புத்தி நுட்பத்தையும், நடு நிலைமையும், திறமையையும் காட்டிவந்ததால் சீர்குலைந்திருந்த வங்காளத்திற்கு 1772ல் அவர் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

2. வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள் :

பதவியை வகித்ததுமே அவர் கிளைவால் ஏற்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சியின் தீமைகளைக் கண்டார். ஆகவே முதலில் அதைப் போக்கி ராஜ்யபாரத்தில் ஆங்கிலேயரின் பொறுப்பை அதிகப்படுத்தினர். (1) இரட்டை ஆட்சி முறையில் வரி வசூலிக்கும் உரிமை நவாபிற்கே இருந்தது. அதை வாரன் ஹேஸ்டிங்ஸ் மாற்றி வரி வசூலிக்கும் பொறுப்பை

ஜில்லா அதிகாரிகளான ஆங்கில கலெக்டர்களிடம் ஒப்பிவித்தார். (2) மேலும் வரிப் பணத்தை வரையறுத்து ஜனங்களின் துயரைக் குறைத்தார். (3) பொக்கிஷ சாலையைக் கல்கத்தாவில் ஏற்படுத்தி ரேவின்யூ போர்ட் என்ற ஒரு சபையை வரிவசூல் வேலையை மேற்பார்வையிட ஏற்படுத்தினார். (4)



வாரன் ஹேஸ்டிங்ஸ்

கலெக்டர்களுக்கு பின்னுமோர் கடமையிடப்பட்டது. சிவில், கிரிமினல் என்ற இருவகை வழக்குகளையும் அவர்களே தீர்க்க வேண்டுமென்று ஆயிற்று. ஆனால் மகம்மதியர்களும், ஹிந்துக்களும் வங்காளத்தில் வசித்து வந்தார்களாதலால், அவர்களுக்கு ஏற்ற நியாயம் கூற முறையே காஸி, பண்டிட் என்ற சட்ட நிபுணர்கள் கலெக்டர்களுக்கு உதவத் தோன்றினர்.

(5) வழக்குகளுக்குச் சரிவர நியாயம்கூறவேண்டுமாயின் சட்டங்கள் குற்றம் குறையின்றி அறியப்பட வேண்டுமன்றோ? ஆகவே மகம்மதியச் சட்டங்களும், ஹிந்துச் சட்டங்களும் செவ்வனே தொகுக்கப்பட்டன. (6) மேலும் நியாய விசாரணை நேர்மையுடன் நடைபெறத் தக்கவையான சாதாரண நியாயஸ்தலங்களும், பிரதம ஸிவில் கோர்ட்டும், பிரதம கிரிமினல் கோர்ட்டும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வேற்பாடுகள் எவ்வளவு ஆழ்ந்த யோசனையைக் கொண்டவை!

3. போக்கிஷத்தை நிரப்புதல்:

மேற் கூறப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் தீர்க்க யோசனையை வாயப்பெற்றனவேயாயினும் கம்பெனியின் பொக்கிஷத்தை அவைகள் மூலம் நிரப்பமுடியாது என்பதைக் காணலாம். ஆகவே அதற்குச் சில உபாயங்களைத் தேடவேண்டியதாயிற்று. (1) வங்காள நவாபின் அரசியல் வேலை குறைந்துவிடவே அவருக்குக் கொடுத்துவந்த உபகாரச் சம்பளத்தைக் குறைத்து அதில் பாதியையே அவருக்குத் தருவதெனத் திட்டம் செய்யப்பட்டது. (2) அலகாபாத் உடன்படிக்கைக்கு முரணாக ஆங்கிலேயரின் ஆதீனத்தின் கீழ் அலகாபாத்தில் வசித்து வந்த ஷா ஆலம் ஆங்கிலேயரின் உத்திரவைப் பெறாமல் அவர்களுடைய எதிரிகளாகிய மஹாராஷ்டிரர்களுடன் 1771-ல் வசிக்கச் சென்றார். அதுவே போதிய காரணமென்று அவருக்கும் கொடுத்து வந்த உபகாரச் சம்பளமாகிய 26 லக்ஷ ரூபாயையும் ஆங்கிலேயர்கள் நிறுத்திவிட்டார்கள். (3) மேலும் அயோத்தி நவாபிற்கு ஆதியில் சொந்தமாயிருந்த கோராவும், அலகாபாத்தும் மீண்டும் அவருக்கே 50 லக்ஷம் ரூபாய்க்கு விற்கப்பட்டன. (4) அவருக்கு யுத்த காலங்களில்

ஆங்கிலேயர் சேனையைத் தந்து உதவுவதென்றும் ராணுவச் செலவிற்காக மாதத்திற்கு 2 லக்ஷ ரூபாய் தருவதென்றும், காசியில் ஓர் உடன்படிக்கை மூலம் தீர்மானிக்கப்பட்டது. (5) அயோத்தி நவாபிற்கு மேற்கில் வசித்துவந்த ரோஹில்லர்கள் எதிரிகளாகத் தோன்றினர். அவர்களை ஜயிக்காத வரையிலும் அயோத்தி க்ஷேமமாக இருக்க முடியாது. ஆகவே காசி உடன்பாட்டின்படி ஆங்கிலேயர் ராணுவ உதவியைத் தர வேண்டப்பட்டனர். அவர்களும் 1773-ல் ரோஹில்லரைத் தோற்கடிக்க உதவி, அயோத்தியுடன் அந்நாட்டைச் சேர்ப்பித்து 40 லக்ஷ ரூபாய் அயோத்தி நவாபிடமிருந்து நன்கொடையாகப் பெற்றனர்.

வினாக்கள்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் பொக்கிஷத்தை நிரப்பக் கையாண்ட வழிகளில் இரண்டினை விளக்குக.
2. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னராயிருந்தபோது அவர் செய்த சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.
3. வாரன் ஹேஸ்டிங்ஸின் பூர்வ சரித்திரத்தைப்பற்றிச் சுருக்கி எழுதுக.

10. வாரன் ஹேஸ்டிங்ஸ் [முதல் கவர்னர் ஜெனரல். 1774-1784]

1. ரெகுலேடிங் ஆக்ட் உண்டாகக் காரணம் :

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் பதவியையேற்குங் காலத்தில் கம்பெனியின் ஆட்சி முறையும், வியாபாரமும் சீர்கேடுற்றிருந்தனவென்றும், ஆகவே அவற்றைப் போக்க அவர் பெரிதும் முயன்றாரென்றும் படித்தோம். ஆயினும் கம்பெனிக்

குக் கடன் அதிகமாகி அது அக்கடனை அடைக்க முடியாம லிருந்தது. அப்பொழுது கிழக்கிந்தியக் கம்பெனி ஆங்கில ராஜாங்கத்தை 19 லக்ஷம் பவுன் கடன் கொடுத்து உதவுமாறு வேண்டிற்று. ஆங்கிலச் சர்க்காரும் அத்தொகையைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு இந்தியாவில் கம்பெனியின் ராஜாங்கத் திட்டத்தில் தங்களுடைய அமுலையும் செலுத்தத் தலைப்பட்டனர். அதற்காக அவர்கள் ரேகுலேடிங் ஆக்ட் என்ற ஓர் சட்டத்தைப் பிறப்பித்தார்கள்.

உ. ரேகுலேடிங் ஆக்ட் :

ரேகுலேடிங் ஆக்ட் என்றால் ஒழுங்கு படுத்தும் சட்டம் என்று அர்த்தம். அது கம்பெனியின் ஆட்சியைப் பின்வருமாறு சீர்திருத்தியது. (1) கம்பெனிக்குச் சேர்ந்த இடங்களில் எல்லாம் ஒரு தலைப்பட்ட ஆட்சி நடக்க வேண்டுமென விரும்பி, ஆங்கிலப் பார்லிமெண்ட் பம்பாயிலும், மதராஸிலும் இருந்த கவர்னர்களுக்கு மேம்பட்ட உத்தியோகஸ்தராக வங்காள கவர்னர் கருதப்பட வேண்டுமென்றும், அதற்காக அவருக்குக் கவர்னர் ஜெனரல் பட்டம் தரப்பட்டிருக்கிறதென்றும், அவருக்குக் கல்கத்தா ராஜதானியாக நியமிக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தது. (2) அவருக்குப் பரிபாலன விஷயங்களில் யோசனை கூற 4 அங்கத்தினர்கள் கொண்ட ஓர் ஆலோசனை சபையும் ஏற்படுத்தப்பட்டது. (3) அவ்வங்கத்தினர்களும், கவர்னர் ஜெனரலும் 5 வருடங்கள் வரையிற்றான் பதவியை வகிக்கலாம். (4) கம்பெனி நியாய ஸ்தலங்களினின்றும் வரும் வழக்குகளைத் தீர்க்க 4 ஆங்கில நியாயாதிபதிகளைக் கொண்ட உயர்தர நியாயஸ்தலம் (Supreme Court) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. (5) பார்லிமெண்டின் உத்திரவைப் பெற்றுத்தான் சண்டையோ, சமாதானமோ சுதேச மன்னர்க

ளுடனும், அயல் நாட்டினருடனும் செய்யப்படவேண்டும். (6) கம்பெனி வேலையை மேற்பார்வையிடவும் சட்டதிட்டங்களை மாற்றவும் பார்லிமெண்டிற்கு அதிகாரமுண்டு.

இவ்விதமாக ஆங்கிலப் பார்லிமெண்ட் தன்னுடைய அதிகாரத்தைக் கம்பெனியின் ஆட்சிக்குள் புகுத்தியது.

3. ரேகுலேடிங் ஆக்டின் குறைகள் :

(1) ஒழுங்கை யுண்டுபண்ணுவதற்காக ரெகுலேடிங் ஆக்ட் என்பது ஏற்பட்டபோதிலும், அனுஷ்டானத்தில் அது சில குறைகளைத் தெளிவாக்கின. (1) ஆலோசனை சபையைச் சேர்ந்த 4 மெம்பர்களில் மூன்று பேர்கள் ஒருபுறம் சேர்ந்து கொண்டு கவர்னர் ஜெனரல் செய்ய விரும்பிய எக்காரியத்தையும் தடைசெய்து வந்தனர். இது ஓர் சமயம் வாரன்ஹேஸ்டிங்ஸையும், பிரான்ஸிஸ் என்ற அங்கத்தினரையும் குத்துச் சண்டைக்குக் கொண்டுவந்து விட்டது.

பின்னும் பழிக்குப் பழி என்னும் முறையில் கவர்னர் ஜெனரல்மீது அபாண்டமான குற்றங்களும் சாட்டப்பட்டன. உதாரணமாக ராஜ நந்த குமார் என்ற ஓர் வங்காளப் பிரபு மீர்ஜாபரின் மனைவியிடமிருந்து வாரன்ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் வாங்கினாரெனக் குற்றம் சாட்டத் தூண்டப்பட்டான். வாரன் ஹேஸ்டிங்ஸ் அதை மறுத்த போதிலும் அவருடைய விரோதிகள், ஆலோசனை சபையில் வேண்டுமென்றே அவரை மிகவும் தாழ்த்திப் பேசினார்கள். அதனால் அவர் கோபங்கொண்டு சபையை விட்டு வெளியேறினார். அது எவ்வளவு அபகீர்த்தியான சம்பவம் பாருங்கள்! ஆனால் அந்த நந்த குமார் பின்பு பொய்ப் பத்திரமொன்று தயாரித்ததாக குற்றம் சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான். அவ்வாறு நிகழ்ந்ததும்

வாரன்ஹேஸ்டிங்ஸின் தூண்டுதலின் பேரிலேயே யாகுமென ஆலோசனைக் கமிட்டியினர் அவதூறு கூறினர்.

(2) பின்னுமோர் குறை யாதெனில் பிரதம நியாய ஸ்தலத்திற்கும், கம்பெனி நியாயஸ்தலங்களுக்குமுள்ள சம்பந்தாசம்பந்தங்கள் சரியாக வரையறுக்கப்படவில்லை. அதனாலும் பல சச்சரவுகள் நிகழலாயின.

4. ஹேஸ்டிங்ஸ் புரிந்த கண்ணியக் குறைவான செயல்கள்:

கீழ்க் குறிக்கப்பட்டுள்ள இரண்டு விஷயங்களும் வாரன் ஹேஸ்டிங்ஸினது பெருமையை குறைக்கின்றன.

. காசி மன்னனுடன் வழக்கு:

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாய் இருந்த பொழுது செயித்ஸிங் என்பவர் ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றுச் சிங்காதன மேறினர். அதற்காக அவர் கப்பம் கட்டு வதாக ஏற்றுக்கொண்டார். ஆனால் வாரன் ஹேஸ்டிங்ஸ் தாம் புரிய வேண்டிவந்த 2-வது மைசூர் யுத்தத்திற்காகவும், முதல் மஹாராஷ்டிர யுத்தத்திற்காகவும் ஏராளமான பொருள் செலவழிக்க வேண்டிவந்தது. ஆகவே பொக்கிஷம் காலியாயிற்று. அக்காரணத்தை முன்னிட்டுச் சுமார் 1780-ல் கவர்னர் ஜெனரல் செயித் ஸிங்கை 5 லக்ஷம் ரூபாய் யுத்தப் பணமாகக் கேட்டார். அதற்கு அவர் மனக் கசிப்புடன் ஒப்புக்கொண்டு தந்தார். மீண்டும் அதே மாதிரி பணத்திற்காக கவர்னர் ஜெனரல் அவரை வற்புறுத்தினர். அப்பொழுது செயித்ஸிங்கால் அதைக் கொடுக்க சாத்தியப்படவில்லை. ஆகவே வாரன் ஹேஸ்டிங்ஸ் தம் அதிகாரம் நிராகரிக்கப்பட்டதாக எண்ணி அவர்மீது 50 லக்ஷ ரூபாய் அபராதம் விதித்தார். அச்செய்கை காசியில் ஓர் குழப்பத்தை யுண்டு பண்ணியது. அத

னிடையே வாரன் ஹேஸ்டிங்ஸே கொல்லப்படுவார்போல் ஆய்விட்டது. ஆனால் நல்ல வேளையாக அவர் தப்பிச் செயித் ஸிங்கைச் சிங்காதனத்தினின்றும் நீக்கி, அவருடைய சகோதரனின் மகனுக்குப் பட்டம் சூட்டினார். அப்புது மன்னரிடமிருந்து ஏராளமான பொருள்களைப் பெறவும் முயற்சித்தார்.

ii. அயோத்தி பீகங்களை வற்புறுத்திப் பணம் பெறுதல் :

காசி சம்பவத்தில் பணம் பெற முடியாமற் போகவே ஆங்கிலேயருக்கு கொடுக்கவேண்டிய கடனையும், யுத்தச் செலவிற்காகப் பணத்தையும் கொடுக்கும்படியாக அயோத்தி நவாபைக் கவர்னர் ஜெனரல் வற்புறுத்தலானார். அப்பொழுது அந்நவாப் தம்மிடம் பணம் இல்லையென்றும், தமது தாயாரிடமும், பாட்டியாரிடமும் ஏராளமான நிதியிருக்கிறதென்றும், அப்பொருள்களை அவர்களிடமிருந்து பெற்றுத் தங்களுக்கு சேரவேண்டிய தொகையை எடுத்துக்கொண்டு, எஞ்சியதைத் தனக்குத் தரும்படியாகவும் வேண்டினான். அவ்வேற்பாட்டிற்கு வாரன்ஹேஸ்டிங்ஸ் இசைந்து தமது ஆட்களைக் கொண்டு அவர்களை வாட்டி வருத்தி 1 கோடி ரூபாய் வரையிலும் பணத்தைப் பறித்தார்.

5. வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்தில் குற்றம் சாட்டப்படுத்தலும், தப்பித்துக் கொள்ளலும்:

1784-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்திற்குத் திரும்பினார். அங்குச் சென்ற சில நாட்களுக்கெல்லாம் காமன்ஸ் சபையில் அவர்மீது அவருடைய எதிரிகளால் வழக்குத் தொடுக்கப்பட்டது. அது 7 வருஷ காலம் நடைபெற்றது. ஆரம்பத்தில் அவர்மீது சாட்டப்பட்ட குற்றங்கள் நிலைத்துவிடும்போற் றோன்றின. ஆனால் கடைசியாக அவர் விடுவிக்கப்பட்டு, கௌரவிக்கவும் பட்டார். அவருக்கு வருஷத்திற்கு

4 ஆயிரம் பவுன் உபகாரச் சம்பளம் தருவதென ஏற்பாடா யிற்று. அதற்குப்பின் அவர் சில வருடங்கள் சந்தோஷமா கத் தம் வாழ்நாளைக் கழித்து 1818-ல் காலமானார்.

பிள்ளைகளே! பிரான்ஸில் டியூப்ளேயும், இங்கிலாந்தில் கிளைவும், வாரன் ஹேஸ்டிங்ஸும் முறையே அவர்களுடைய நாட்டு மக்களால் எவ்வண்ணம் நடத்தப்பட்டார்கள், பாருங் கள்! அதுதான் ஆங்கில அதிகாரிகளின் உண்மை உழைப்பிற்குக் காரணம்.

6. பிட் இந்தியா சட்டம் (1784)

ரெகுலேடிங் ஆக்டில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண் டியது அவசியமெனப் படித்தோம். அவைகளை யுண்டுபண்ண பிட் என்ற ஆங்கிலப் பிரதம மந்திரி ஓர் சட்டத்தை யுண்டு பண்ணினார். அதன் முக்கிய ஷரத்துக்களாவன :

(1) கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் கமிட்டியில் நான்கு அங்கத்தினருக்குப் பதில் மூன்று அங்கத்தினர்களே நியமிக்கப்படவேண்டும். (2) இங்கிலாந்தில் கம்பெனி காரி யங்களை மேற்பார்வையிட போர்டு ஆப் கன்ட்ரோல் என்ற 6 அங்கத்தினர்கள் அடங்கிய சபை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். (3) கம்பெனியார் கவர்னர் ஜெனரலையும், சேனா திபதியையும் நியமிக்கலாம். ஆனால் அந் நியமனம் ஆங்கில அரசாங்கத்தாரின் ஆமோதிப்பைப் பெறவேண்டும். (4) புதிதாக ராஜ்யத்தைப் பெருக்கும் விஷயத்தில் கம்பெனியார் பார்லிமெண்டின் அனுமதியை முன்னரே அடையவேண்டும்.

இந்தச் சட்டம் சுயநலமுறையில் ஆங்கில அரசாங்கத்தா ரின் ஆதிக்கத்தை வளரச் செய்ததேயாயினும், உண்மையில் இந்திய அரசியலில் ஒழுங்கையும் உண்டுபண்ணிற்று.

வினாக்கள்.

1. பிட் இந்தியாச் சட்டத்தின் ஷரத்துக்களை விவரிக்க.
2. ரெகுலேடிங் ஆக்டின் திட்டங்களை விளக்குக.
3. ரெகுலேடிங் ஆக்டில் காணப்பெற்ற 2 குறைகள் யாவை ?
4. ஹேஸ்டிங்ஸின் கண்ணியத்தைக் குறைக்கத்தக்க செய்கை களைக் குறிப்பிடுக.

11. மைசூர் யுத்தங்கள்
(கி. பி. 1767—1799)

கி. பி. 1761 வரை மைசூர் ஹிந்து மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அதற்குப்பின் **ஹைதர் அலி** என்ற தளகர்த்தரும், அவரது குமாரர் **திப்புவும்** அதை ஆளத் தொடங்கினர். அவர்களைப்பற்றிய சரித்திரத்தை இனி கற்போம்.

1. ஹைதர் அலி :

ஹைதர் அலி மைசூர் ராஜ்யத்தில் சாமான்ய உத்தியோகத்தை வகித்த ஓர் மகம்மதியரின் குமாரர். அவரும் ஆரம்பத்தில் ஓர் சாதாரண வீரராக மைசூர் சேனையைச் சேர்ந்து பின்பு குதிரைப் படைத் தலைவரென்றும், திண்டுக்கல் கோட்டைக் கதிபதியென்றும், சேனைத் தலைவரென்றும், படிப்படியாகத் தமது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டு கடைசியாய்த் தம் அரசரையே தள்ளிவிட்டுத் தாம் பட்டத்திற்கு வந்தார். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் இயற்கை அறிவை ஏராளமாகப் படைத்தவர். உடல் வலிமையையும், மனோ வலிமையையும் கொண்டவர். போரிற் தேர்ச்சியும், அரசியலில் ஆற்றலுமுடையவர். மதத்துவேஷம்

கிடையாது. தாம் பட்டத்திற்கு வந்ததுமே மலேயாளம், பெட்னூர் முதலான இடங்களைக் கைப்பற்றி ராஜ்யத்தைப் பெருக்கினார். தாம் ஓர் சக்கரவர்த்தியாக வேண்டுமெனத் தீவிர நோக்கங் கொண்டவர். அதற்காகத் தாம் பட்டம்

ஹைதர் அலி

பெற்ற நாள் முதல், போர் தொடுப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்துத் தம்முடைய வாழ்நாளையும் அதற்கே அர்ப்பணம்செய்து உயிர் நீத்தார்.

2. திப்பு :

திப்பு அவர் தந்தையைப்போல் அல்லாது நன்றாகக் கற்றுணர்ந்தவர். ஆனால், அந்த ஒரு அம்சம் தவிர, மற்ற துறைகளில் ஹைதருக்கு அவர் நிகராகார். ஹைதரைப்போல் மனோதிடங் கொண்டவரல்லர். எளிதில் சுய எண்ணத்தை

நீத்துப் பிறர் போதனைக்குட்படுவார். இவை நீங்கலாக பெரிய மதத்துவேஷியுமாவார். அந்நிய நாட்டினரான ஆங்கிலே யரை எவ்விதமாயினும் துரத்தி யடிப்பதையே தமது முக்

திப்பு சுல்தான்

கிய நோக்கமாகக் கொண்டவர். அவரும் தம் தந்தையைப் போலவே இரண்டு யுத்தங்களைச் செய்து, அவற்றால் தம் உயி ரைப் போக்கிக்கொண்டார்.

I. முதல் மைசூர் யுத்தம் (கி. பி. 1767—1769)

1. காரணம் :

முதல் மைசூர் யுத்தத்திற்கு முக்கிய காரணம் நாட்டைப் பெருக்க வேண்டுமென்று ஹைதர் மனத்தை ஈடுபடுத்திய தீவிர எண்ணமேயாகும். ஆனால், மஹாராஷ்டிரர்களும், நிஜாமும் ஹைதருடைய ஆதிக்கத்தைக் கண்டு பொறாமை

கொண்டனர். ஆங்கிலேயரோ ஹைதரது அதிகார வளர்ச்சியைக் கண்டு அஞ்சினர். ஆகவே அவர்கள் மூவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் ஓர் சிநேக உடன்பாட்டைச் செய்து கொண்டனர். ஆனால் ஹைதர் முதலில் கர்நாடகத்தைத் தாக்கக் கருதி மஹாராஷ்டிரர்களைப் பணங்கொடுத்து விலக்கி, நிஜாமிற்குக் கர்நாடகத்தை அளிப்பதாக ஆசை வார்த்தை கூறி, ஆங்கிலேயரைத் தனிப்படுத்தி அவர்களைத் தாக்கத் தொடங்கினர்.

2. நிகழ்ச்சிகள் :

முதலில் ஹைதர் ஆங்கிலேயருக்குச் சொந்தமான வியாபார ஸ்தலங்களைத் தாக்கினர். அதைக் கண்ட கர்னல் ஸ்மித் என்பவர் செங்கம் கணவாய், திருவண்ணாமலை முதலான இடங்களில் 1767-ல் ஹைதரைத தோற்கடித்தார். நிஜாமும் ஹைதர் கட்சியைவிட்டு விலகினர். ஹைதருக்கு அச்சமயம் சமாதானம் செய்துகொள்வதே தகுதியெனத் தோன்றிற்று. ஆனால் ஆங்கிலேயர் அதற்கிடங் தரவில்லை. ஆகவே ஹைதர் திடீரென 1769-ல் சென்னையைத் தாக்கி, ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை அசையச் செய்தார். உடனே ஆங்கிலேயர் ஓர் உடன்படிக்கைக்குக் கட்டுப்படலானர்.

3. சென்னை உடன்படிக்கை :

அவ்வுடன்பாடு சென்னையில் செய்து முடிக்கப்பட்டது. அதில் அவரவர்கள் பிடித்த நாடுகளையும், கைதிகளையும் திரும்பத் தந்துவிடவேண்டுமென ஏற்பாடாயிற்று. யுத்த காலத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டுமெனவும் திட்டம் பிறந்தது.

இந்த யுத்தம் கிளைவ் இங்கிலாந்திற்குச் சென்றபின் தென்னிந்தியாவில் ஏற்பட்டது.

இரண்டாவது மைசூர் யுத்தம் (கி.பி. 1780-1784)

1. காரணம் :

(1) முதல் மைசூர் யுத்தத்திற்குப்பின் ஹைதர் மஹாராஷ்டிரர்களை யெதிர்த்தார். அப்பொழுது ஹைதர் சென்னை ஆங்கிலேயரைத் தமக்கு உதவிபுரியுமாறு கேட்டார். அவர்கள் மஹாராஷ்டிரர்களின் பகையை ஏற்க விரும்பவில்லை. ஆகவே ஹைதர் வலுவில் போர் தொடுத்தாரென்றும், அப்படிப்பட்ட போரில் அவருக்குதவ இஷ்டப்படவில்லையென்றும் தெரிவித்தார்கள். (2) 1778-ல் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் ஐரோப்பாவில் போர் தொடங்கியது. ஆனதுபற்றி இந்தியாவிலும் இவ்விரு ஐரோப்பியர்களுக்கிடையே யுத்தம் நிகழ்ந்தது. ஆங்கிலேயர்கள் புதுச்சேரியைக் கைப்பற்றினுர்கள். பின்பு பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான மாஹியையும் பிடிக்கத் தலைப்பட்டனர். அதை ஹைதர் ஆட்சேபித்தார். ஏனெனில் மாஹி ஹைதருடைய ராஜ்யத்தைச் சேர்ந்ததோர் துறைமுகப் பட்டணம். மேலும் தமது யுத்த சாமான்களை அத்துறைமுகப் பட்டணத்தின் மூலமாகத்தான் ஹைதர் மேல்நாடுகளினின்றும் அடைந்தார். ஆனுல் அவருடைய ஆட்சேபத்தை ஆங்கிலேயர் கொஞ்சமேனும் மதிக்காமல் மாஹியைப் பிடிக்க ஏற்பாடு செய்தனர். அதைக் கண்டு ஹைதர் உடனே மஹாராஷ்டிரர்களுடன் சமாதானம் செய்துகொண்டு, ஆங்கிலேயருக்கெதிரே போர் தொடுக்க ஆயத்தமானுர்.

2. நிகழ்ச்சிகள் .

ஆங்கிலேயர்கள் மாஹியைப் பிடித்தனர். உடனே ஹைதர் கர்நாடகத்துட்சென்று காஞ்சீபுரம், பரங்கிப்பேட்டை முதலான ஸ்தலங்களைக் கைப்பற்றிப் பின்பு ஆற்காட்டையும்

பிடித்தார். அப்பொழுது பேய்லி என்ற தளகர்த்தர் ஓர் பெரிய சேனையுடன் ஹைதரைத் போலிலூரில் எதிர்த்தார். ஆனால் அவர் தோற்றோடினார். அதேபோல் மன்ரோ என்ற தளகர்த்தரும் யுத்த ஆயுதங்களைக் கிணற்றில் எறிந்துவிட்டுப் பயந்து சென்னைக்கோடினார். அதற்குப்பின், தென்னிந்தியாவில் காவேரி வரையிலுமுள்ள நாடுகளை ஹைதர் கைக்கொண்டார். சென்னையில் ஆங்கிலேயர்களுக்கு நடுக்கங் கண்டது. வங்காளத்தில் அச்சமயம் கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேயருக்குண்டான அத்தோல்வியைக் கண்டு மனம் நொந்து தம்மிடமிருந்த ஸர் அயர் கூட் என்பவரை ஓர் தக்க சேனையுடன் ஹைதரைத் தாக்க அனுப்பினார். 1781-ல் பரங்கிப்பேட்டை, போலிலூர், சோளிங்கபுரம், ஆரணி முதலான இடங்களில் அவர் ஹைதரைத் தோற்கடித்தார். அவ்விதம் சண்டை நிகழ்ந்துகொண்டு இருக்கும்பொழுதே ஹைதர் திடீரென 1782-ல் தமது கூடாரத்தில் மாண்டார். ஹைதரின் குமாரருக்கு அவர் எதிர்பார்த்த உதவி ஒன்றும் கிடைக்கவில்லை.

3. மங்களூர் உடன்படிக்கை (1784)

ஆகவே பாலக்காட்டிலிருந்த திப்பு விரைவுடன் வந்து ஆங்கிலேயருடன் மங்களூரில் ஓர் உடன்படிக்கை செய்ய வேண்டியதாயிற்று. அதன்படி இருதிறத்தாரும் முன்னிருந்தபடியே நாடுகளை வைத்துக் கொள்ளுவதென்றும், யுத்தத்திற் கொண்ட கைதிகளை விட்டுவிடுவதென்றும் ஏற்பாடாயிற்று.

மூன்றாவது மைசூர் யுத்தம் (கி. பி. 1790-1792)

1. காரணம் :

ஹிந்துக்களை மகம்மதியராக்கும் முயற்சியின் தொடக்கமாக 1790-ல் திப்பு திருவாங்கூர் மீது படையெடுத்தார்

திருவாங்கூர் மன்னர் ஆங்கிலேயர்களுக்கு நண்பர். ஆகவே அக்காலத்தில் கவர்னர் ஜெனரலாயிருந்த காரன் வாலிஸ் தமது ராஜீயக் கொள்கைக்கு மாறுதலாய்ச் சிற்றரசரின் சார் பாகத் திப்புவை யெதிர்க்க நேர்ந்தது. ஆகவே அவர் திப்பு விற்கு விரோதிகளான நிஜாமையும், மஹாராஷ்டிரர்களையும் துணை சேர்த்துக்கொண்டு திப்புவைத் தாக்கத் தயாரானர்.

2. நிகழ்ச்சிகள் :

சென்னை ஆங்கிலக் கவர்ன்மெண்டார் திப்புவிற்குச் சொந்தமான கோயம்புத்தூர், பாலக்காடு, திண்டுக்கல் முதலிய இடங்களைக் கைப்பற்றினர்கள். காரன்வாலிஸ் பிரபு வங்காளச் சேனை மூன்றையும் ஒன்றுபடுத்தித் தாமே அக் கூட்டுப் படைக்குத் தலைமைவகித்துப் பெங்களூரைப் பிடித் துக் கொண்டார். பின்பு ஸ்ரீரங்கப் பட்டணத்தையும் எதிர்க்கத் தொடங்கினர். உடனே திப்பு சமாதானத்திற் குடன்பட்டார்.

3. ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கை. (1792)

இச்சண்டையில் தோற்றது திப்புவின் புகழையும், ராஜ்யத்தையுமே போக்கி விட்டது. இவ்வுடன்பாட்டின்படி திப்பு யுத்த செலவிற்காக 330 லக்ஷம் ரூபாய் தரவேண்டிய தாயிற்று. கைதிகளையும் விடுவிக்கவேண்டி நேர்ந்தது. இவை நிற்கத் தமது ராஜ்யத்தைச் சேர்ந்த மதுரை, சேலம், மலையா ளம் முதலிய ஜில்லாக்களை ஆங்கிலேயருக்கும், கடப்பை, கர் நூல், பல்லாரி, அனந்தபுரம் முதலிய ஜில்லாக்களில் ஓர்பாகம் நிஜாமிற்கும், கிருஷ்ணுநதிக்குத் தெற்கில் உள்ள பிரதேசம் மஹாராஷ்டிரர்களுக்கும் கொடுக்கப் பட்டன. இந்நிபந்தனை கள் திப்புவால் செய்து முடிக்கும்வரை திப்புவின் இரு குமா ரர்கள் ஆங்கிலேயர் வசம் ஜாமீனுக ஒப்புவிக்கப்பட வேண்டு மென்றும் திட்டம் செய்யப்பட்டது.

நான்காவது மைசூர் யுத்தம். (1779)

1. காரணம் :

வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலாய் வேலைபார்த்து வந்த பொழுது ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்கார ருக்கும் ஓர் யுத்தம் நிகழ்ந்து வந்தது. பிரான்ஸின் அதிபதி யாகிய நெபோலியன் என்ற வீரர் பூலோகச்சக்ரவர்த்தியென விளங்க விருப்பங்கொண்டு, ஐரோப்பா முழுவதையும் ஆட்டி வைத்து இந்தியாவையும் கைப்பற்றக் கருதினர். திப்புவிற்கு ஆங்கிலேயரைத் துரத்திவிட வேண்டுமென்ற நோக்கமிருந்த தன்றோ? ஆகவே அவர் பிரெஞ்சு மன்னருக்கு உதவுவ தாக வாக்களித்தார். ஆப்கானிய மன்னனையும் உதவத் தூண்டினர். அச்சதியை அறிந்த வெல்லெஸ்லி திப்புவை ஆங்கிலக் கம்பெனியாருடன் ஓர் சிநேக உடன்பாட்டிற்கு வற் புறுத்தினர். ஆனல் திப்பு அதை நிராகரித்தார். ஆகவே திப்புவின் விரோதிகளின் உதவியைப் பெற்றும் சென்னை, பம்பாய்க் கவர்ன்மெண்டாரின் சேனைகளைக் கொண்டும் அவர் திப்புவைத் தாக்குவதெனத் தீர்மானித்தார்.

2. நிகழ்ச்சிகள் :

பம்பாய்ச் சேனையும், சென்னைச் சேனையும் ஓரிடத்தை யடைந்து, திப்புவை யெதிர்ப்பதென ஆங்கிலேயரால் ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. அதை அறிந்த திப்பு அச் சேனைகளை ஒன்றுசேர விடாமற்றடுக்கக் கருதி அவைகளைத் தனித்தனியே யுத்தகளத்திற் சந்தித்தார். சேடசர் என்ற இடத்தில் பம்பாய்ச் சேனையும், மாளவல்லி யென்ற இடத் தில் சென்னைச் சேனையும் திப்புவைத் தோற்கடித்தன. அப் பொழுது அவர் தமது தலை நகரின் கோட்டைக்குட் புகுந்து கொண்டார். அத்தலை நகரமும் (ஸ்ரீரெங்கபட்டணமும்) பிடி

படும்போலிருந்தது. அதைக் கண்ணுற்ற திப்பு சமாதானத்திற்கு உடன்படுவதாகச் சொல்லி அனுப்பியதில் மிகவும்



மைசூர் யுத்தங்களில் சம்பந்தப்பட்ட இடங்கள்

கேவலமான நிபந்தனைகள் இடப்பட்டன. அவற்றை ஏற்க மனமின்றிப் போர்புரிவதே மேலென எண்ணித் திப்பு தம்

கோட்டையின் வாயிலில் நின்று சண்டை செய்து உயிர் துறந்தார்.

3. முடிவு :

திப்புவின் வம்சம் அற்றது. அவருடைய குமாரர்கள் உபகாரச் சம்பளத்துடன் வேலூருக்கு அனுப்பப்பட்டனர். மதுரை, சேலம், கன்னடம் முதலான ஜில்லாக்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின. மூன்றாவது மைசூர் யுத்தத்தில் நிஜாமுக்குத் தரப்பட்ட நாடுகளில் மிஞ்சியிருந்த பாகமும் அவருக்கு வழங்கப்பட்டது. பழைய மைசூர் ராஜ்யமே மிஞ்சிற்று. அதற்குப் பழைய ஹிந்து அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ உடையார் என்ற சிறு வயதினர் ஒருவர் அரசராக்கப்பட்டார். அவரே அப்பொழுது ஆள முடியாதாகையால் அரசியலைச் செலுத்துவதற்காக நிர்வாக சபை ஒன்று ஏற்படுத்தப் பட்டது. ஒரு ஆங்கில ஸ்தானிகரும் பெங்களூரில் வசிக்கலுற்றார். நாட்டைக் காக்க ஓர் உதவிச் சேனையும் அந்நாட்டுப் பணத்தைக்கொண்டு மைசூரில் நிலையாக நிறுத்தப் பட்டது.

வினாக்கள்

1. எல்லா மைசூர் யுத்தங்களிலும் சேர்ந்து ஹைதர்அலி, திப்புவிற்கெதிரிடையாகச் சண்டை செய்தவர்களுக்கென்ன கிடைத்தது ?
2. ஆங்கிலேயர் ஜயிக்கவும், திப்பு தோற்கவும் காரணம் என்ன ?
3. ஹைதர் அலியின் பூர்வ சரித்திரத்தைப்பற்றிச் சுருக்கி எழுதுக.
4. மைசூர்ச் சண்டைகள் முடிந்தபின் மைசூர் ராஜ்யத்தில் என்ன ராஜீய ஏற்பாடு நடைபெற்றது ?

12. மஹராஷ்டிர யுத்தங்கள்

I. முதல் மஹராஷ்டிர யுத்தம். 1775—1782.

1. காரணம் :

மூன்ருவது பானிபட் யுத்தம் வட இந்தியாவில் மஹராஷ்டிரர்களின் ஆதிக்கத்தை யொடுக்கியதென்றும், அதற்குப்பின் மஹராஷ்டிரர்களுக்குள்ளாகவே சண்டை சச்சரவுகள் உண்டாகி, பொதுவாகவே அவர்களுடைய அதிகாரம் க்ஷீணித்ததென்றும் படித்தோம். மூன்ருவது பானிபட் யுத்தத்தில் மஹராஷ்டிரர்கள் பெரும் தோல்வி அடைந்ததால் துயர்மேலிட்டு பாலாஜீ விஸ்வனுத ராவ் உயிர் துறந்தார். அவருக்குப்பின் அவரது குமாரர் 1-வது மாதவ ராவ் பட்டத்திற்கு வந்தார். அவர் 1772-வரை ஆட்சி புரிந்தார். அவருக்குச் சந்ததியில்லே. ஆனதுபற்றி அவருடைய தம்பியான நாராயண ராவ் பீஷ்வாவின் பதவியை அடைந்தார். அவர் சாமர்த்தியம் வாய்ந்தவரல்லர். மேலும் அவருடைய காலத்தில் அவரது சிறிய தந்தையாகிய ரகோபா அல்லது ரகுநாத ராவே ராஜ்ய பரிபாலனத்தை நடத்திவந்தார். நாளடைவில் அவர் நாராயண ராவைத் தமது சூழ்ச்சியில் சிக்கவைத்துக் கொலேசெய்துத் தாமே பீஷ்வாவென ஆளத் தொடங்கினுர்.

அச்சம்பவம் நாராயணராவ் இறந்த சில மாதங்களுக்குள்ளாகவே நேரிட்டது. ஏற்கனவே கர்ப்பமாயிருந்த நாராயண ராவின் மனேவி அப்பொழுது ஓர் ஆண் மகவை ஈன்றனள். ராகோபாவினுடைய தீச்சதியும், கொடூர ஆட்சியும் மஹராஷ்டிரர்களேப் புண்படுத்தின. ஆகவே அவர்கள் நானுபர்னவிஸ் என்பவரைத் தங்களுக்குத் தலேவராகக் கொண்டு ரகோபாவைத் தள்ளிவிட்டு 2-வது மாதவ ராவ் என்று பெயரிடப்பட்ட நாராயணராவின் குழந்தையைப் பீஷ்வாவாக ஆக்க

வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தார்கள். இது அவ்விரு கட்சியினருக்குள்ளும் மனஸ்தாபத்தை முற்றச் செய்தது.

ஆகவே ரகுநாத ராவ் 1775-ல் சூரத் என்னுமிடத்தில் பம்பாய் கவர்னருடன் ஓர் சிநேக உடன்பாடு செய்து முடித்தார். அதன்படி ரகுநாத ராவிற்குச் சேனை தந்து உதவ வேண்டுமென்றும், அதற்குப் பிரதியாக அவர் அவர்களுக்கு ஸால்ஸெட், பஸ்ஸீன் என்ற இரு முக்கிய வியாபார ஸ்தலங்களைத் தருவதென்றும் தீர்மானமாயிற்று. நானுபர்னவிஸ் அவ்வுடன்படிக்கையைப்பற்றிக் கேள்வியுற்றபொழுது அது கவர்னர் ஜெனரலின் ஆமோதிப்பைப் பெறவில்லையென்பதை உணர்ந்து, அக்காலத்தில் கவர்னர் ஜெனரலாயிருந்த வெல்வெஸ்லியிடம் புரந்தரில் தனித்து ஓர் உடன்படிக்கை செய்தார். அதன்படி ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிரர்களின் சச்சரவுகளில் தலையிடாதிருந்தால் அவர்களுக்கு ஸால்ஸெட் வழங்கப்படவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அவ்விஷயம் பம்பாய் கவர்னர் செவிக்கெட்டவே அவர் தாம் ரகுநாத ராவுடன் முதலில் செய்துமுடித்த உடன்பாட்டையே ஆமோதிக்குமாறு இங்கிலாந்து மேலதிகாரிகளுக்கு எழுதி வேண்டிக்கொண்டார். ஆங்கில அரசாங்கத்தாரும் சூரத் உடன்படிக்கையே அதிக பலனை அளிக்கவல்லதால் அதையே ஏற்றுக்கொண்டனர்.

2. நிகழ்ச்சிகள் :

i. ஆங்கிலேயரின் தோல்வி :

ஆங்கிலேய மேலதிகாரிகளின் ஆமோதிப்பை அடைந்ததால் பம்பாய்க் கவர்னர் ஓர் துணைச்சேனையை பீஷ்வாவிற்கு வதவப் புனாவிற்கு அனுப்பினார். அதைக்கண்ட நானுபர்னவிஸ் சிந்தியாவையும், பான்ஸ்லேயையும் சேர்த்துக்கொண்டு

பம்பாய்ச் சேனையை வார்காம் என்னுமிடத்தில் எதிர்த்தார். நானுபர்னவிஸின் படைத் திறத்தைக் கண்ட ஆங்கிலேயர் திகைத்துப் பின்வாங்கினர். உடனே ஓர் சமாதானத்திற்குக் கட்டுப்பட்டு, மஹாராஷ்டிர விவகாரங்களில் ஆங்கிலேயர் தலையிட்டுக் கொள்ளுவதில்லையென்றும், கல்கத்தா சேனையை வரவொட்டாமல்தடுத்து விடுவதாயும் ஏற்றுக்கொண்டனர். பின்பு ஆங்கிலச் சேனை பம்பாய் திரும்பியது. அவர்களின் மொழிகளில் நம்பிக்கை வைத்த நானுபர்னவிஸ் தமது எதிர்ப்பை நிறுத்திக்கொண்டார்.

ii. ஆங்கிலேயரின் வெற்றி:

ஆங்கிலச் சேனை பம்பாய் சேர்ந்ததும், ஹேஸ்டிங்ஸ் பம்பாய்ச் சேனையின் உடன்பாட்டிற்குக் கட்டுப்படாமல் சண்டையைத் தொடங்கினர். சிந்தியா திடீரெனத் தாக்கப்பட்டு தமது முக்கிய நகரமாகிய குவாலியரை இழந்தார். அதனுல் அவர் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. அதற்கு அடுத்தபடியாக கேயிக்வாரும், பான்ஸ்லேயும் ஆங்கிலேயருடன் உடன்பாட்டிற்கிசைந்தார்கள். அப்பொழுது தாம் தனியாகப் போர் தொடுக்க நேர்ந்ததை நினைத்து நானுபர்னவிஸ் சற்று மலைத்தார். ஆங்கிலேயரும் அச்சமயம் திப்புவிற்கெதிரே 2-வது மைசூர் யுத்தம் புரிய வேண்டி நேர்ந்ததால் சமாதானத்தை விரும்பினர்.

3. ஸால்பை உடன்படிக்கை (1782)

இருகட்சியினரும் ஸால்பை யென்னுமிடத்தில் ஓர் உடன்பாடு செய்துகொண்டனர். அதில் பின் கூறப்படும் தீர்மானங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

i. இரண்டாவது மாதவராவ் பேஷ்வா என்று ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். நானுபர்னவிஸே அவருக்கு மந்திரியாக நியமிக்கப்படவேண்டும்.

ii. ஆங்கிலேயருக்கு ஸால்ஸெட்டும், சிந்தியாவிற்குப் புரோச்சும் வழங்கப்படவேண்டும்.

iii. மஹாராஷ்டிரர்கள் வேறு ஐரோப்பிய நாட்டினருடன எவ்வித உடன் பாட்டிற்கும் இசையக்கூடாது.

iv. ரகுநாத ராவுக்கு வருஷத்திற்கு 3 லக்ஷ ரூபாய் உபகாரச் சம்பளம் அளிக்கப்படவேண்டும்.

இரண்டாவது மஹாராஷ்டிரயுத்தம் (கி. பி. 1802—1803).

1. காரணம்:

i. பீஷ்வாவின் மதியீனச் செயல்கள்:

2 வது மாதவராவுக்குப்பின் 2-வது பாஜீராவ் என்பவர் பீஷ்வாப் பட்டத்தை அடைந்தார். அவர் திறமை யற்றவர். ராஜ தந்திரம் அவரிடம் சிறிதேனும் தென்படவில்லை. மேலும் யுக்தாயுக்த மறிந்து எதொன்றையும் அவருக்குச் செய்யத் தெரியாது. நானுபர்னவிஸின் செல்வாக்கையும், திறமையும், உபயோகத்தையும் சற்றும் உணராது அவரை விரோதித்துக் கொண்டார். அவரை ஓர் சூழ்ச்சியிலும் சிக்க வைத்து 1800-ல் இறக்கச் செய்தார்.

அவரது மதியீனம் அத்துடன் நிற்கவில்லை. அவர் சிந்தியாவுடன் சேர்ந்துகொண்டு ஹோல்காரினுடைய சகோதரரைத் தாக்கிக் கொன்றுவிட்டார். உடனே ஹோல்கார் புனுவின்மீது படையெடுத்து வரலாயினர். அதைக் கண்ட பீஷ்வா பஸ்ஸீனுக்கு ஓடினர்.

ii. ஆங்கிலேயருடன் உடன்பாடு:

பீஷ்வா பின்பு ஆங்கிலேயரை உதவிபுரிய வேண்டினர். அப்பொழுது பீஷ்வா உதவிச்சேனை ஏற்பாட்டிற்குக் கட்டுப் படுவதா யிருந்தால் ஆங்கிலேயர் அவருக்குத் துணைபுரிவதா

கக் கூறினர். வேறு வழியில்லாததைக் கண்ட பீஷ்வா அதற்கிசைய நேர்ந்தது. அதை அறிந்த மற்ற மஹாராஷ்டிர வீரர்களுக்குப் பீஷ்வாவிடத்தில் கோபமும் அறுவருப்புமுண்டாயின. ஆகவே அவர்கள் பீஷ்வாவை யெதிர்க்கத் தலைப்பட்டார்கள்.

2. நிகழ்ச்சிகள் (1803.)

i. மஹாராஷ்டிரர்களின் தோல்வியும், பான்ஸ்லேயின் உடன் பாடும்:

வெல்லெஸ்லி தமது தம்பியான ஆர்தர் வெல்லெஸ்லியிடம் ஓர் பெரும் படையை அனுப்பி அஸ்ஸே என்ற இடத்தில் சிந்தியா, பான்ஸ்லே என்ற இருவரையும் சேர்ந்தாற்போல் தோற்கச் செய்தார். பின்னும் சில மாதங்களுக்கப்பால் அர்காம் என்னுமிடத்தில் பான்ஸ்லேயைத் தனியே தோற்கடித்தார். இனித் தாம் ஆங்கிலேயரை யெதிர்க்க முடியாதெனப் பயந்து தேவகான் என்ற இடத்தில் பான்ஸ்லே உதவிச்சேனை யேற்பாட்டிற்குக் கட்டுப்பட்டார். பீராரும், கட்டாக்கும் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டன. அவைகளில் ஆங்கிலேயர் தங்களுடைய சிநேகிதரான நிஜாமிற்கு பீராரைத் தந்து விட்டார்கள்.

ii. ஸிந்தியாவும் உடன்படுதல்:

அஸ்ஸே என்ற இடத்தில் ஸிந்தியா தோல்வியுற்றது வாஸ்தவமே யாயினும், மஹாராஷ்டிர வீரர்களுக்குள் ஹோல்காரும் அவருமே மிக்கச் செல்வாக்கைப் பெற்றிருந்தனர். தமது நாட்டைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருக்கி சிந்தியா டில்லியையும் கைப்பற்றி, ஷா ஆலத்தையும் தம் சிநேகத்திற்கு இணங்கச் செய்தார். பின்பு அவரை டில்லிக்கு வரவழைத்து வஞ்சகமாகச் சிறையிலிட்டுத் தாமே ராஜ்யபாரம்

நடத்திவந்தார். தக்க சமயம் வாய்த்தபொழுது அவர் ஆங்கிலேயரையும் எதிர்ப்பார்போல் தோன்றியது. ஆகவே வெல்லெஸ்லி மீண்டும் ஜெனரல் லேக்கினிடம் ஓர் பெரும் படையை அனுப்பி ஆக்ராவையும், டில்லியையும் கைப்பற்றச் செய்தார். அப்பொழுது டில்லியில் கண்ணையிழந்து அடைபட்டுக்கிடந்த ஷா ஆலம் ஆங்கிலேயரிடம் அனுப்பப்பட்டார். மீண்டும் லாஸ் வாரி யென்னுமிடத்தில் சிந்தியா தோற்கடிக்கப்பட்டுப் பின்பு சண்டைசெய்ய இயலாமல் ஓர் உடன்பாட்டிற்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

3. சமாதானம்:

அஞ்சன்கான் என்னுமிடத்தில் சிந்தியா, பான்ஸ்லேயைப் போலவே, படை மானியத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு யமுனைக்கு இருபுறமுள்ள பிரதேசத்தையும், புரோச்சையும் ஆங்கிலேயருக்குத் தந்துவிட்டார். சிந்தியாவிற்குப் பின் தம் நாட்டில் மிஞ்சியது மாளவமே யாகும்.

அவ்வளவு மஹராஷ்டிரர்களும் உதவிச்சேனை ஏற்பாட்டை ஏற்றுக்கொண்ட போதிலும் ஹோல்காரே அதற்கு இசைய விரும்பாமற் றனித்து நின்றார்.

மூன்றாவது மஹராஷ்டிர யுத்தம் (கி. பி. 1804—1805)

1. காரணம்:

ஹோல்காரை மீண்டும் தாக்குவதற்கு அவர் உதவிச்சேனை ஏற்பாட்டிற்குக் கட்டுப்படாமலிருந்ததே ஓர் தக்க காரணமாக இருந்தது. ஆங்கிலேயரின் சிநேகத்தைக் கொண்ட ராஜபுத்திரர்களை யெதிர்த்தாரென்பது பின்னுமோர் முகாந்திரமாய் உதவிற்று. ஆனதுபற்றி யுத்தம் தொடங்கியது.

நிகழ்ச்சிகள் (1804)

i ஆங்கிலேயரின் தோல்வி:

கர்னல் மன்ஸன், முகுந்தராபாஸ் என்ற இடத்தில் ஹோல்காரை எதிர்த்தார். அச் சமயம் சிந்தியாவும், பரத புரத்தரசரும் ஹோல்காருக்கு உதவினர். ஆகவே மன்ஸன் தோல்வியுற்று ஆக்ராவிற்கு ஓட வேண்டியதாயிற்று. பின்பு மத்ராவும், டில்லியும் ஹோல்காரால் கைப்பற்றப்பட்டன. அதைக் கண்ட ஆங்கிலேயர் மனம் தளர்ந்தனர்.

ii. ஆங்கிலேயரின் வெற்றி:

ஆயினும் வெல்லெஸ்லி ஜெனரல் லேக்கைக் கொண்டு ஹோல்காரை எதிர்க்கச் செய்தார். பருகபாத் என்ற இடத்தில் ஹோல்கார் தோல்வி அடைந்து, இந்தூரையும் இழந்தார். பின்பு டீக் என்ற இடத்திலும் அவருக்கு அபஜய மேற்பட்டது. உடனே அவர் பஞ்சாபிற்கு ஓடி மறைந்து கொண்டார். அதற்குப் பின் பரதபுரத்தரசர் தனியே எதிர்க்கப் பட்டு ஓர் உடன்பாட்டிற்கு ஒப்புக் கொண்டார். அதன் பயனாக அவர் ஆங்கிலேயருடைய சிநேகத்தைப் பெறுவ தென்றும், யுத்தச் செலவிற்காக 26 லட்சம் ரூபாய் தருவ தென்றும் ஏற்பா டாயிற்று.

3. ஹோல்காருடனும், சிந்தியாவுடனும் சமாதானம்:

அச் சமயம் யுத்தங்களால் செலவுண்டாகிச் சுதேச மன்னர்களின் அதிருப்தியும் பெருகியதால் ஆங்கில மேலதிகாரிகள் வெல்லெஸ்லியைக் கோபித்து இங்கிலாந்திற்குத் திரும்பி வந்துவிடும்படி உத்திரவிட்டனர். ஆகவே 1805-ல் வெல்லெஸ்லி இங்கிலாந்திற்குச் சென்றார். அவருடைய ஸ்தானத்தில் மறு முறை கவர்னர் ஜனர லாக்கப்பட்ட காரன்வாலிஸ்

உடனே மேலதிகாரிகளின் உத்திரவுப்படி ஹோல்காருடன் சமாதானப் பேச்சைத் தொடங்கினர். ஆனால் அப் பேச்சு முடியு முன் அவர் திடீரென உயிர் துறந்தார். அவருடைய பதவியை அடுத்தபடியாகவகித்த ஸர் ஜார்ஜ் பார்லோ எனப் பட்டவர் ஹோல்காருடனும், சிந்தியாவுடனும் உடன்பாடு செய்துகொண்டார். அதன்படி ஆங்கிலேயர் இருவரிடமிருந் தும் அடைந்த நாடுகள் திருப்பித் தரப்பட்டன. ஆங்கிலே யர் அவர்களுடைய ராஜீய விஷயங்களில் தலையிடுவ தில்லை என்றும் ஒப்புக்கொண்டனர். ஆனால் சிந்தியாவும், ஹோல் காரும் வேறொரு ஐரோப்பிய நாட்டினருடனும் உறவாடக் கூடாதென்றும் ஏற்பாடாயிற்று.

நான்காவது மஹாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1817-1819)

1. காரணம்:

3-வது மஹாராஷ்டிர யுத்தத்தில் சிந்தியாவிற்கும், ஹோல்காருக்கும் சொந்தமான இடங்கள் ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டன. ஆனால் அந்த யுத்தத்தின் முடிவில் அவை கள் திரும்பியும் தரப்பட்டன. அதைக் கண்ட மஹாராஷ்டி ரர்கள் மீண்டும் தங்களுடைய அதிகாரத்தை ஸ்தாபிக்கலா மென எண்ணி முயற்சி செய்யலானர்கள்.

2. நிகழ்ச்சிகள்:

i. பீஷ்வாவின் தோல்வி:

மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ் என்ற கவர்னர் ஜனரல் பிண்டாரிகளுடனும், நேபாள நாட்டினருடனும் சண்டை செய்துகொண் டிருந்ததைக் கண்டு, அதுதான் தகுந்த சமய மென எண்ணி பீஷ்வா வாகிய இரண்டாவது பாஜீ ராவ் தமது தலை நகராகிய புனவில் வசித்து வந்த ஆங்கிலேய



1805-ல் ஆங்கிலேயரின் ஆட்சியும், மஹாராஷ்டிர யுத்தங்களில் சம்பந்தப்பட்ட இடங்களும்.

ஸ்தானிகரைத் திடீரெனத் தாக்கினர். ஆனால் அந்த ஸ்தானிகருக்குத் துணையா யிருந்த சேனை பீஷ்வாவை காக்கி என்ற இடத்தில் தோற்கடித்து புனாவையும் பிடித்துக்கொண்டது. பீஷ்வா மீண்டும் ஓர் முறை முயற்சி செய்தார். ஆயினும் அது வீணாகி அவர் ஜோதிபுரத்திற்குத் தப்பி யோட வேண்டியதாயிற்று.

ii. பான்ஸிலேயின் தோல்வி:

இக் குழப்பத்திற் கிடையே நாகபுரியின் தலைவ ராகிய பான்ஸ்லே என்ற மஹாராஷ்டிர வீரர் அவரது தலை நகரில் வசித்து வந்த ஆங்கில ஸ்தானிகரைத் தாக்கினர். சிடிவால்டி என்ற இடத்தில் ஸ்தானிகரது சேனைக்கும், இவருக்கும் சண்டை நடந்தது. அச் சண்டையில் அவர் தோல்வியுற்று சிறை பிடிக்கப்பட்டார். ஆனால் சில நாட்களில் அவர் அங்கிருந்து தப்பி யோடித் தமது அதிகாரிகளில் ஒருவரால் கொல்லப்பட்டார்.

iii. ஹோல்கார் இணங்குதல்:

ஹோல்காருக்கு 1817-ல் சித்த சுவாதீனம் இல்லாமல் இருந்தது. அப்பொழுது இந்தூரில் ராஜ்யபாரம் அவரது மனைவியால் செவ்வனே நடத்தப்பட்டு வந்தது. அவள் ஆங்கிலேயருடன் நட்புக் கொள்ள இசைந்தாள். ஆயினும் அவளுடைய சேனைத் தலைவர் அவ்வாறு செய்ய உடன்படாமல் ஆங்கிலேயரை 1817-ல் எதிர்த்தார். ஆனால் தோல்வியுற்றார்.

3. சமாதானம்:

இவ்வண்ணம் மஹாராஷ்டிர வீரர்கள் ஆங்கிலேயரிடம் தோல்வியுறவே அவர்கள் ஆங்கிலேயருடன் சமாதானத்திற்கு இசைந்தனர். பீஷ்வா ஆங்கிலேயர்களுக்குத் தமது நாடு

முழுவதையும் தந்து, வருஷத்திற்கு 8 லக்ஷ ரூபாய் உபகாரச் சம்பளம் பெற்று, ஆங்கிலேயரின் கட்டளைக் கிணங்க பிதூருக்குச் சென்ருர். ஆனல் மஹாராஷ்டிர மன்னரின் சந்ததி, அற்றுப் போகாம லிருக்கவும், மஹாராஷ்டிரர்களின் கோரிக்கைக் கிணங்கியும், ஆங்கிலேயர் சதாரா என்பதை ஓர் சிற்றரசு நாடாக்கி அதை ஆளுவதற்கு சிவாஜியின் ராஜ வம்சத்தினரில் ஒருவரையும் நியமித்தார். இந்தூரிலும், நாகபுரியிலும் இரு சிறுவர்கள் அரசாள நியமிக்கப்பட்டு அந்த நாடுகளின் பெரும் பாகம் ஆங்கில ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டது. கெயிக்வாரும், சிந்தியாவும் முன்னரே உடன்பாட்டிற்குக் கட்டுப்பட்டிருந்ததால் அவர்களும் ஆங்கில சிநேகத்தை ஏற்றவர்களாயிருந்தார்கள். இந்த யுத்தத்துடன் மஹாராஷ்டிரர்களின் எதிர்ப்பு ஒழிந்தது. ஆங்கிலேயரின் ஆதிக்கமும் ஓங்கி வளர்ந்தது.

வினுக்கள்

1. முதல் மஹாராஷ்டிர யுத்தத்திற்காவது, 2-வது மஹாராஷ்டிர யுத்தத்திற்காவது காரணங்களைக் குறிப்பிடுக.
2. 2-வது மஹாராஷ்டிர யுத்தத்தின் முடிவு அல்லது 4-வது மஹாராஷ்டிர யுத்தத்தின் முடிவு எவ்வண்ணம் முக்கியமானது?
3. குறிப்புகள் தருக: நாளுபர்னவிஸ், ஸால்பை உடன்படிக்கை, பரதபுரத்தரசர்.

13. ஆங்கில அதிகார வளர்ச்சியும் சில முக்கிய சீர்திருத்தங்களும் (கி. பி. 1774-1805)

இந்தக் கால வரைக்குள் 4 கவர்னர் ஜெனரல்கள் வேலை பார்த்து வந்தனர். அவர்களின் ஒவ்வொருவருடைய காலத்திலும் சில முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றைப் பற்றிச் சுருக்கமாக அறிவோம்.

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் (கி. பி. 1774-1786)

வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் ஆவர். அவருடைய காலத்தில் தான் ஆங்கில ராஜ்யம் வேரூன்றத் தலைப்பட்டது. அவர் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் கம்பெனியின் ஆட்சியை ஒழுங்கு படுத்தின. அவர் புரிந்த இரண்டாவது மைசூர் யுத்தம் மைசூர் நாட்டின் அதிகாரப் பெருக்கைக் குறைத்தது. முதல் மஹாராஷ்டிர யுத்தம் மஹாராஷ்டிரர்களை ஆங்கிலேயரின் உதவியை எதிர்பார்க்கச் செய்தது. ஸால்ஸெட் என்ற முக்கியத் துறைமுகப் பட்டணத்தையும் ஆங்கிலேயருக்குக் கிடைக்கும் வண்ணம் உதவியது. மேலும் ஹேஸ்டிங்ஸினுடைய காலத்தில் ரெகுலேடிங் ஆக்ட் என்றும், பிட் இந்தியாச் சட்டமென்றும் இரண்டு சட்டங்கள் உண்டாகி, அவை கம்பெனி ஆட்சியை சீர்படுத்தியதுடன் ஆங்கில அரசாங்கத்தாரின் அதிகாரத்தையும் இந்தியாவில் புகுத்தின. கடைசியாக ரோஹில்லரை வென்று, ஷா ஆலத்தை வசப்படுத்தி, அயோத்தி நவாபையும் சிநேக உடன் பாட்டிற்குச் சம்மதிக்கச் செய்து, ஐரோப்பியப் போட்டிகளைப் போக்கி, வங்காள இரட்டை ஆட்சியை நீக்கி, வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேயரின் பெருமையை வளர்த்தார்.

2. காரன் வாலிஸ் (1786-1793)

சண்டைகளும், ஆங்கிலேய ராஜ்யம் பெருகுதலும்:

வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு அடுத்தபடியாக **காரன் வாலிஸ்** கவர்னர் ஜெனரலானார். அவருடைய காலத்தில் **மூன்றாவது மைசூர் யுத்தம்** நிகழ்ந்தது. அதன் பயனாக ஆங்கிலேயருக்கு மலையாளம், சேலம், மதுரை முதலிய

லார்ட் காரன்வாலிஸ்

ஜில்லாக்கள் கிடைத்தன. திப்புவிற்கு ஆங்கிலேயரை எளிதில் வெல்ல முடியாதென்று தெரிய வந்தது. நிஜாம் ஆங்கிலேயரின் உதவியை நாடவிரும்பினார். மற்ற பேர்களை யெதிர்ப்பது போல் ஆங்கிலேயரையும் எளிதில் யெதிர்க்க முடியாதென மஹாராஷ்டிரர்கள் கண்டனர். கம்பெனியார் தங்களது ஆட்சியில் அதிக சிரத்தை யெடுத்துக் கொள்ளலாயினர்.

2. சீர் திருத்தங்கள் :

காரன் வாலிஸ் தமது காலத்தில் மூன்ருவது முக்கிய சீர் திருத்தங்களைச் செய்தார். அவையாவன : (1) அவர் தமது பதவியை வகிக்கும் பொழுது, கம்பெனி உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதையும், வெகுமதி பெருவதையும் கண்டார். அவர் அவ்வழக்கங்களைப் போக்கி உத்தியோகஸ்தரின் சம்பளங்களை உயர்த்தினர். (2) கலெக்டர்களால் வரி வசூல் வேலையையும், நியாய விசாரணையையும் ஒருங்கே சமாளிக்க முடியவில்லை. ஆகவே ஜில்லா ஜட்ஜ்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ஸிவில் கிரிமினல் வழக்குகளை நியாய ஸ்தலங்களில் விசாரிப்பதென ஏற்பாடாயிற்று. (3) காரன் வாலிஸினது காலம் வரை நிலவரி 5 வருஷத்திற்கோ, 10 வருஷத்திற்கோ ஏலங் கூறப்பட்டு ஜமீன்தார்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. அவ்வழக்கம் ஜமீன்தார்களுக்குக் குடிகளிடத்தில் பிரியத்தை உண்டு பண்ணுவதற்கு மாருக, ஒன்றுக்கிரண்டாக வரியை வாங்கி ஹிம்சிக்கும் புத்தியை உண்டு பண்ணியது. அதைக்கண்ட காரன்வாலிஸ் அவ்வழக்கத்தை மாற்றி ஜமீன்தார்களை அவர்களிடம் குத்தகைக்கு அடைக்கப்பட்டிருந்த இடங்களுக்குச் சொந்தக்காரர்களாக்கி, அவர்களைக் குடிகளின்பால் பிரியத்தையும், நாட்டின்கண் க்ஷேமத்தையும் விரும்பச் செய்தார். அவ்வேற்பாட்டிற்குச் சாசுவத நிலவரித் தீர்மானம் என பெயர் வழங்கிற்று. அவ்வேற்பாட்டினுல் விவசாய விருத்தியும், நேர்மையான வரி வசூலும் உண்டாயின.

3. ஸர் ஜான் ஷோர் (1793-1798)

காரன் வாலிஸிற்குப்பின் ஸர் ஜான் ஷோர் என்பவர் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். காரன் வாலிஸ் காலத்திலிருந்தே சுதேசமன்னர்களின் விவகாரங்களில் தலை

யிடக் கூடாதெனக் கிழக்கிந்தியா கம்பெனிக்கு ஆங்கில மேலதிகாரிகள் கட்டளையிட்டிருந்தனர். ஆகவே ஸர்ஜான் ஷோர் அப் பிரவேசியாக் கொள்கையை முற்றிலும் கடைப் பிடிக்க நோக்கங் கொண்டார். அதன் நிமித்தம் 1795-ல் நிஜாமை மஹாராஷ்டிரர்கள் தாக்கிய பொழுது தமக்குதவி செய்யவேண்டு மென நிஜாம் தெரிவித்ததற்கு, ஸர்ஜான் ஷோர் இசைய மறுத்து விட்டார். அதன் பயனாக கர்ட்லா என்னுமிடத்தில் நிஜாம் முற்றிலும் தோல்வி யுற்றுத் தமது நாட்டின் தென் பாகத்திலுள்ள ஜில்லாக்களை மஹராஷ்டிரர் களுக்குக் கொடுத்ததுமல்லாமல், யுத்தச் செலவிற்காக 3 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியதாயிற்று. அச் சம்பவத் திற்குப் பின் நிஜாம் ஆங்கிலேயரின் சிநேகத்தை வெறுத் தார்.

ஆனல் ஷோர் சுதேச மன்னர்களின் விஷயங்களில் அறவே தலையிட்டுக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அயோத்தியில் வார்சுப் போர் உண்டாகவே ஆங்கிலேயர் சாதத் அலி என்பவரை நவாப் ஆக்கினர். மேலும் அயோத்தி அது முதற்கொண்டு ஆங்கில ஆதரவைப் பெறவேண்டு மென்றும், அவ்வாறு அவர்கள் உதவுவதற்காக அலகாபாத் தும் வருஷத்திற்கு 76 லக்ஷ ரூபாயும், ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட வேண்டு மென்றும் திட்டம் செய்யப்பட்டது.

இவ்விரண்டு சம்பவங்களைத் தவிர ஸர் ஜான் ஷோர் காலத்தில் நாம் ஆராயத்தகுந்த விஷயம் வேறொன்றும் நடை பெறவில்லை.

4. வெல்லெஸ்லி (1798-1805)

ஸர் ஜான் ஷோருக்குப் பின் கவர்னர் ஜெனரல் பத வியை வகித்தவர் வெல்லெஸ்லி பிரபு ஆவர்.

1. இந்தியாவின் நிலை :

அவர் கவர்னர் ஜெனரலானபொழுது இந்தியாவின் நிலை ஆங்கிலேயரின் அதிகார வளர்ச்சிக் கேற்றதாயில்லை. ஸர் ஜான் ஷோர் அனுசரித்த பிரவேசியாக் கொள்கையினால் சுதேச மன்னர்களுக்கு ஆங்கிலேயரிடம் நம்பிக்கையும், பய

மார்க்விஸ் ஆப் வெல்லெஸ்லி

மும் அற்றுவிட்டன. தமக்கு வேண்டும் பொழுது உதவாமலும், ஏராளமான நஷ்டத்தையும் அடையச் செய்ததால், நிஜாம் பிரெஞ்சுக்காரர்களுடன் உறவாடி, அவர்களது தளகர்த்தர்களின் உதவியைக் கொண்டு சொந்தத்தில் ஓர் சேனையையும் தயாரிக்கத் தலைப்பட்டார். திப்புவும், பிரெஞ்சுக்காரர்களின் சிநேகத்தைக் கொள்ளலானார். கர்நாடக நவாபும் திப்புவுடன் ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டார்.

மஹாராஷ்டிரர்களோ ஆங்கிலேயரிடம் பயமற்று வடக்கிலும் தெற்கிலுமுள்ள சுதேச மன்னர்களைத் தாக்கியும் கொள்ளை யடித்தும் வந்தார்கள். இவர்கள் நீங்க வடக்கில் பஞ்சாப் சீக்கர்களின் தேர்ச்சியால் வலிமையைப் பெருக்கிக்கொண்டே வந்தது. ஆப்கனிஸ்தானமும் திப்புவால் தூண்டப்பட்டு இந்தியாவைத் தாக்கத் தயாரித்துக் கொண்டு இருந்தது.

கடைசியாக ஐரோப்பாவில் நடைபெற்று வந்த யுத் தத்தை முகாந்திரமாகக் கொண்டு, பிரெஞ்சுச் சக்கரவர்த்தி யான **நெபோலியன்** திப்புபோன்ற சுதேச மன்னர்களின் உதவியைப் பெற்று இந்தியாவைத் தாக்கக் காத்துக் கொண் டிருந்தார். மற்ற மன்னர்களின் விரோதத்தைக் காட்டிலும் நெபோலியனது முயற்சி வெல்லெஸ்லியைக்கலங்கச் செய்தது. ஆகவே பிரெஞ்சுக்காரருக்கு உதவி புரியாமற் தடுப்பதே தாம் செய்யும் முதற் கடமையாகுமென அவர் எண்ணினர்.

2. வெல்லெஸ்லி கையாண்ட ராஜீய முறைகள் :

தமது நோக்கத்தை நிறைவேற்ற வெல்லெஸ்லி மூன்று விதமான கொள்கைகளைக் கையாண்டார்.

a. படைமானியத் திட்டம்:

i. படை மானியத் திட்டமென்றால் என்ன ?

சுதேச மன்னர்களைக் கட்டுப்படுத்தி அவர்களை ஆங்கில சிநேகத்தை யேற்கச் செய்ய, வெல்லெஸ்லி **உதவிச் சேனை யேற்பாடு** என்ற ஓர் திட்டத்தைப் பிறப்பித்தார். அது பின் வருமாறு:- எச் சிற்றரசரும் ஆங்கிலேயரின் நட்பைத் தவிர, வேறு ஐரோப்பியர்களின் சிநேகத்தைக் கொள்ளக்கூடாது. அச்சிற்றரசர்களுக்கு வெளி விரோதிகளாலும் உள்நாட்டுக் கலகங்களாலும் கஷ்டம் நேரிடாமலிருக்க, ஆங்கிலக் கம்பெனி

யார் அவர்களுக்கு ஓர் ஏற்ற சேனைகொண்டு உதவுவார்கள். அச்சேனை அந்நாட்டின் பாதுகாப்பிற்காக அந்நாட்டிலேயே நிலையாகத் தங்கியிருக்கும். அச்சேனையின் செலவிற்காக வருஷவாரிக் கப்பம் சுதேச மன்னர் செலுத்த வேண்டும். கப்பம் செலுத்த மறுத்தாலும், அதைச் செலுத்த முடியாமல் தொகை அதிகரித்தாலும், அம்மன்னருடைய நாட்டில் ஓர் பாகம் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட வேண்டும். மேலும் அந்நாட்டு ராஜதானியில் ஒரு ஆங்கில ஸ்தானிகர் தங்கி அரசியலைக் கண்காணித்து வர அனுமதிக்கப்பெற வேண்டும். கடைசியாக அயல்நாட்டினருடனும், அண்டை ராஜ்யங்களுடனும், சண்டையோ, சமாதானமோ ஆங்கிலேயரின் அனுமதியின்றி நிகழ்த்தப் படக்கூடாது.

ii. படை மானியத் திட்டத்திற்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்கள்.

கெயிக்வார். (1779)

1799-ல் கெயிக்வார் வெல்லெஸ்லியின் ஆலோசனைக்குட்பட்டு உதவிச்சேனை ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டார்.

நிஜாம் (1800)

1800-ல் நிஜாமும் படை மானியத் திட்டத்தை யேற்றுக்கொண்டு சேனையின் செலவிற்காக, நிரந்தரமாகவே, தாம் திப்புவிடமிருந்து அடைந்த கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபூர் என்ற ஜில்லாக்களைத் திரும்ப ஆங்கிலேயர்களுக்குத் தந்துவிட்டார். ஆகவே அவைகள் திரும்பித் தரப்பட்ட ஜில்லாக்கள் (Ceded Districts) என்ற பொதுப் பெயர் அடைந்தன.

அயோத்தி (1801)

அயோத்தி நவாப் மஹாராஷ்டிரர்களாலும் ஆப்கானிய மன்னராலும் பயமுறுத்தப்பட்டார். அவருக்கு ஆங்கிலே

யர்களின் உதவி உண்மையில் உபகாரத்தைத் தரவல்லது. ஆனால் நாட்டில் ஆங்கில அதிகாரம் வளர்ந்துவிடுமெனப் பயந்து ஆங்கில உதவியை அவர் ஏற்கவில்லை. ஆயினும் வெல்லெஸ்லியால் 1801-ல் வற்புறுத்தப்படவே நவாபும் உதவிச் சேனை யேற்பாட்டிற்கு இணங்கவேண்டியதாயிற்று. அதற்காக அவுத் நவாப் கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலுள்ள தோவாப் என்னும் செழிப்புற்ற பிரதேசத்தையும், ரோஹில் கண்டையும் ஆங்கிலேயருக்குத் தந்தார்.

b. வெல்லெஸ்லி நிகழ்த்திய போர்கள் :

மேற்கூறப்பட்டுள்ள ஏற்பாட்டிற்குத் திப்புவும், மஹராஷ்டிரர்களுமே இணங்கவில்லை. ஆகவே அவர்கள் இருவருடனும் வெல்லெஸ்லி போர் புரிந்தார்.

நான்காவது மைசூர் யுத்தம் :

திப்பு பிரெஞ்சியரின் உதவியைக்கொண்டு ஆங்கிலேயரைத் துரத்தியடிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டிருந்தாரென முன்னமேயே படித்தோம். வெல்லெஸ்லி அந்த யோசனையைப் பயனறச் செய்யக் கருதித் திப்புவை 1799-ல் தாக்கினர். திப்பு சண்டையில் தோற்று மடிந்தார். பின்பு மைசூர் ராஜ்யத்தை வெல்லெஸ்லி பழைய அரச வம்சத்தினரிடமே ஒப்புவித்து அவர்களை உதவிச் சேனை யேற்பாட்டிற்கும் கட்டுப்படச் செய்தார்.

இரண்டாவது, மூன்றவது மஹராஷ்டிர யுத்தங்கள்:

திப்புவைப்போலவே மஹராஷ்டிரர்களும் ஆரம்பத்தில் உதவிச்சேனை ஏற்பாட்டை ஏற்க மறுத்தார்கள். ஆனல் பின்பு பாஜீ ராவ் ஓர் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சிக்

குண்டு 1807-ல் ஆங்கிலேயரின் உதவியை நாடவேண்டிய தாயிற்று. அவர் படை மானியத் திட்டத்தையும் ஏற்றுக் கொண்டு தமது நாட்டில் ஓர் பாகத்தையும் உதவிப் படைக்காக ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். அந்த உடன்பாடு மஹாராஷ்டிரச் சிற்றரசர்களுக்கு வெறுப்பை யுண்டுபண்ணி 2-வது மஹராஷ்டிர யுத்தத்திற்கு வழிவைத்தது. அந்த யுத்தத்தின் முடிவில் சிந்தியாவும், பான்ஸ்லேயும் உதவிச் சேனை யேற்பாட்டிற்குக் கட்டுப்பட்டனர். அதன் பயனாகச் சிந்தியா டில்லியையும் யமுனையின் இரு கரையிலுமுள்ள பிரதேசங்களையும் ஆங்கிலேயருக்கு ஈந்தார். பான்ஸ்லே ஒரிஸாவில் ஒரு பாகமாகிய கட்டாக்கைத் தந்தார். ஹோல்கார் மாத்திரம் இவ்வேற்பாட்டிற்குக் கட்டுப்படவில்லை. ஆகவே அவருக்கெதிரே போர் தொடுக்கப்பட்டது. ஆனால் அப்போர் முடிவடையுமுன் வெல்லெஸ்லி இங்கிலாந்திற்குத் திரும்பி அழைக்கப்பட்டார்.

c. ஆட்சிபுரியச் சக்தியற்றச் சுதேச மன்னர்களின் நாடுகளை கைப்பற்றல்.

கடைசியாக வெல்லெஸ்லி நாட்டைப் பெருக்க மற்றோர் உபாயமும் செய்தார்.

தஞ்சாவூர் (1799)

தஞ்சாவூர் சிவாஜியின் வம்சத்தினரான சரபோஜரால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் ஆட்சி சரியாக நடைபெறவில்லை. அதைக்கண்ட வெல்லெஸ்லி வருஷத்திற்கு 6 லக்ஷ ரூபாய் அவருக்கு உபகாரச் சம்பளமாகத் தந்து அவரை விலக்கி விட்டார். பின்பு தஞ்சாவூர் ஆங்கில ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டு விட்டது.



1805 ம்வருஷத்
தில்இந்தியா
வின் நிலமை
ஆப்கன்ராஜ்யம்
சிக்கர்
ராஜயம
நேபாளம்
அயோத்தி
சிந்து
ராஜபுதனம்
வங்காளம்
கல்கத்தா
மஹாராஷ்டரராஜ்யம்
நைஜாம்
ராஜயம
பம்பாய்
மசூலிப்பட்டணம்
மைசூர்
சென்னப்பட்டணம்
புதுச்சேரி
பிரிடிஷ்ராஜ்யம்
பிரிடிஷ் ஆதினத்
திறட்பட்ட
ராஜயம்
திருவாங்கூர்

கர்நாடகத்தை அடைதல் (1801)

1795-வரை மகம்மதுஅலி கர்நாடகத்தை ஆண்டார். அவருடைய காலத்தில் ஆட்சி சரிவர நடைபெறவில்லை. மேலும் அவர் ஆங்கில உத்தியோகஸ்தர்களிடம் ஏராளமாகக் கடன் பெற்று அவர்களுக்குக் கர்நாடகத்தைச் சேர்ந்த சில இடங்களை ஈடு வைத்தார். அவருடைய குமாரரான உம்தத் உல் உம்ரா என்பவர் அவரைக் காட்டிலும் திறமையற்றவர். அவர் 1801-ல் இறந்தார். கடைசி மைசூர் யுத்தத்தில் ஸ்ரீ ரெங்கபட்டணத்தை முற்றுகையிட்டபொழுது, அவரும், அவருடைய தகப்பனுருமே திப்புவுடன் இரகசிய உடன் படிக்கைசெய்து வந்ததாக அத்தாட்சி கிடைத்தது. ஆகவே, அதைக் காரணமாகக்கொண்டு அவருடைய குமாரர்களுக்கு ஆங்கிலேயர் நாட்டின் வருமானத்தில் ஐந்திலொரு பங்கை உபகாரச் சம்பளமாகக் கொடுத்து கர்நாடகத்தைக் கைப் பற்றிக் கொண்டுவிட்டனர்.

வெல்லெஸ்லி நாடு திரும்பினர்:

ஆங்கில ராஜ்யம் கிளைவால் உண்டாயது ; வாரன்ஹேஸ் டிங்ஸ் காலத்தில் அது வேரூன்றியது. வெல்லெஸ்லி காலத் திலோ அது மிக்க வளர்ச்சியைப்பெற்று நிலைக்கலாயிற்று. அவ்வண்ணமிருந்தும் வெல்லெஸ்லியை அனுவசியப் போர் களைத் தொடுத்தாரென்றும், மேலதிகாரிகளின் கட்டளைகளை நிராகரித்தாரென்றும், அதிகப் பணச்செலவிற்கு வழிவைத் தாரென்றும், அவர் இனி இருந்தால் ஆங்கில அதிகாரமே இந்தியாவில் அழிந்துவிடுமென்றும் எண்ணி அவரை 1805-ல் திடீரென இங்கிலாந்திற்கு திரும்பிவரக் கட்டளையிட்டுவிட்ட னர். ஆனல் வெல்லெஸ்லி கம்பெனியாருக்குச் செய்த பேரு தவியை அதிகாரிகள் பின்னர் அறிந்து அவரை வெகுவாகக் கௌரவித்தனர்.

வினுக்கள்

1. சாசுவத நிலவரி தீர்மானத்தை விளக்குக.
2. நிஜாம் ஏன் ஓர் சமயம் பிரெஞ்சியரின் சிநேகத்தை விரும்பினுர்?
3. வெல்லெஸ்லி பதவியை ஏற்ற சமயம் இந்தியாவின் நிலை எவ் வண்ணம் இருந்தது ?
4. படை மானியத் திட்டத்தை விவரிக்க.
5. வெல்லெஸ்லி ஏன் திடீரெனத் தமது நாட்டிற்கழைக்கப்பட்டு விட்டார்?
6. வெல்லெஸ்லி தஞ்சாவூரையும், கர்நாடகத்தையும் ஆங்கில ராஜ் யத்துடன் சேர்த்துக்கொண்டதேன்?

14. ஆங்கில இராஜ்யம் இந்தியாவில் நிலையாக ஏற்படுதல்

(கி. பி. 1805—1828)

1. ஸர் ஜார்ஜ் பார்லோ கி. பி. 1805—1807 :

3-வது மஹாராஷ்டிர யுத்தம் முடிவடைவதற்குள் வெல் லெஸ்லி தமது நாட்டிற்குத் திரும்ப அழைக்கப்பட்டுவிட்டா ரெனப் படித்தோம். அவருக்குப் பின் காரன்வாலிஸ் மறு முறை கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தார். அவர் இரண்டு மாத காலமே ஜீவித்திருந்தார். ஆகவே, அவருடைய ஸ்தானத்திற்கு ஸர் ஜார்ஜ் பார்லோ எனப்பட்டவர் நியமிக்கப்பட்டு இந்தியாவில் தமது அலுவல் களைக் கவனிக்கலுற்ருர்.

i. 3-வது மஹாராஷ்டிர யுத்தத்தின் முடிவு :

தாம் வந்ததும் முதலில், காரன் வாலிஸால் தொடங்கப் பட்ட சமாதானப் பேச்சைப் பின் பற்றி அவர் சிந்தியாவுட

னும், ஹோல்காருடனும் சிநேக உடன்பாடுகள் முடித்து அவர்களிடமிருந்து கைப்பற்றிய நாடுகளையும் திரும்பத் தந்தார். அத்துடன் 3-வது மஹராஷ்டிர யுத்தம் முடிவடைந்தது.

ii. வேலூர் சிப்பாய்க் கலகம். கி. பி. 1806.

ஸர் ஜார்ஜ் பார்லோவின் காலத்தில் ராணுவத்தில் ஓர் புதுத் திட்டம் செய்யப்பட்டது. அதாவது எல்லா வீரர்களும், ஒரே விதமான மீசையை வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், திலகமணிவதை நிறுத்த வேண்டுமென்றும், தீர்மானிக்கப் பட்டது. ஹிந்துக்கள் நிறைந்த சிப்பாய்களினிடையே இந்நிபந்தனை வேலூரில் ஓர் கலகத்தை யெழுப்பியது. ஆனால் கர்னல் ஜில்லெஸ்பி என்பவரால் அது அடக்கப்பட்டு, அதில் சம்பந்தப்பட்ட சிப்பாய்கள் தண்டனைக்குள்ளாக்கப் பட்டனர். வேலூரில் அச்சமயம் வசித்து வந்த திப்புவின் குமாரர்கள் அச்சதியில் சம்பந்தப்பட்டவர்களெனச் சந்தேகிக்கப்பட்டு கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.

2. லார்டு மிண்டோ கி. பி. 1807—1813.

i. மிண்டோவின் செயல்கள் :

ஸர் ஜார்ஜ் பார்லோவிற்குப் பின் லார்டு மிண்டோ கவர்னர் ஜெனரலாக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தார். அவரும் ஸர்ஜார்ஜ் பார்லோவைப்போலவே தலையிடாக்கொள்கையைக் கைப்பற்ற வேண்டுமெனக் கருதினர். ஆனால் ஆங்கில ராஜ்யத்தின் க்ஷேமத்திற்காகச் சில முக்கிய பாதுகாப்புகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அச்சமயம் ஐரோப்பாவில் யுத்தம் நடந்துகொண்டிருந்ததால் இந்தியாவிலும் போர் ஏற்படலாமெனக் கருதப்பட்டது. ஆகவே, எல்லைப்புற நாடுகளைப் பலப்படுத்த கி. பி. 1808-ல் ஆப்கனிஸ்தானத்துட

னும், கி. பி. 1809-ல் பஞ்சாபுடனும், பாரசீகத்துடனும் சிநேக உடன்பாடுகள் செய்து முடிக்கப்பட்டன. மத்திய இந்தியாவிலும் கலகங்களைக் கிளப்பி வந்த மஹாராஷ்டிரர்கள் அடக்கப்பட்டனர். நாகபுரியின் மீது படையெடுத்த ஆப்கனியனும் துரத்தியடிக்கப் பட்டான். நிற்க, மோரிஷஸை யும், ஜாவாவையும், ஆங்கிலேயர் கைப்பற்றிப் பிரெஞ்சு ஆதிக்கத்தைக் குறைத்தனர்.

ii. கம்பெனியின் சாஸனத்தைப் புதுப்பித்தல் :

கம்பெனியின் சாஸனம் ஒவ்வொரு முறையும் 20 ஆண்டு களுக்கு வழங்கப்பட்டது. கி. பி. 1813-ல் முந்திய காலத் தவணை முடியவே அச் சாஸனம் புதுப்பிக்க வேண்டியதா யிற்று. ஆனல் அச்சமயம் ஆங்கிலேயருக்கு அதுவரை உரித்தாயிருந்த தனி வியாபார உரிமை வழங்கப்படவில்லை. ஆனல் சீனவுடன் கம்பெனியாரே வியாபாரம் செய்யலா மெனத் திட்டம் செய்யப்பட்டது.

3. மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ் கி. பி. 1813—1823.

லார்டு மிண்டோவிற்குப் பின் கவர்னர் ஜெனரலாக வந்த வர் ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆவர். அவரும் பிரவேசியாக் கொள்கையை மேற்கொள்ள விருப்பங் கொண்டவர்தான். ஆனல் அவ்வாறு செய்ய அவருக்குச் சாத்தியப்படாமற் போயிற்று. இரண்டு யுத்தங்களை அவர் அவசியமாகப் புரிய வேண்டியதாயிற்று.

யுத்தங்கள் :

a. நேபாள யுத்தம் கி. பி. 1814—1816.

1. காரணம் :

மிண்டோ காலம் முதற்கொண்டே இமயமலைச் சாரலில் அமையப் பெற்றிருக்கும் நேபாளம் என்ற தேசத்தைச்

சேர்ந்தவர்கள் தெற்கு நோக்கி வந்து புதிய நாடுகளைக் கைப்பற்ற முயன்று வந்தனர். ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் காலத்தில் அந்நாட்டாராகிய கூர்க்கர்கள், தாரை யென்னும் மலை அடிவாரத்தைப் பிடித்துக் கொண்டு, கங்கை நதி வரையிலுள்ள நாடுகளையும் கைப்பற்றினர். அதுமாத்திரமன்றி ஆங்கிலக் கம்பெனியாருக்குச் சொந்தமான இடங்களையும் தாக்கத் தலைப்பட்டனர். ஆனதுபற்றி அவர்களை அடக்க வேண்டியது கவர்னர் ஜெனரலுக்கு அவசியமாய் முடிந்தது.

2. நிகழ்ச்சிகள் :

ஹேஸ்டிங்ஸ் பிரபு நான்கு தளகர்த்தர்களிடம் நான்கு தனிச் சேனைகளை அனுப்பி நான்கு இடங்களில் ஏககாலத்தில் தாக்க உத்திரவிட்டார். ஆனால் மூன்று சேனைகள் வழியில் பல கஷ்டங்களை அடைந்து, குளிரால் வருந்தித் திரும்பலாயினர். கிழக்குப் படையோ ஜெனரல் ஆக்டர்லோனியின் தலைமையின் கீழ் முதலில் மாலூன் என்னுங் கோட்டையை முற்றுகையிட்டு ஜயித்தது. பின்னர் மக்வான்புரம் என்ற இடத்தில் நேபாளத் தளகர்த்தரான அமர்சிங்கை அடியுடன் முறியடித்தது.

3. ஸிகௌலி உடன்படிக்கை கி. பி. 1816.

அம் முக்கிய இரு தோல்விகளுக்குப் பின் நேபாள மன்னர் மனம் தளர்ந்து ஓர் உடன்பாட்டிற்குச் சம்மதித்தார். அதன்படி நேபாள மன்னர் ஆங்கிலேயருக்கு சிம்லா, நைனிடால், முஸௌரி முதலிய இடங்களைத் தந்து அவர்களின் நட்பை ஏற்று, காத்மாண்டு என்ற தமது தலை நகரில் ஓர் ஆங்கில ஸ்தானிகரையும் வைத்துக்கொள்ள இசைந்தார். மேலும், அவர் தாரை என்னும் பிரதேசத்தை விட்டகல வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. அது முதல் கூர்க்கர்கள்

ஆங்கிலேயரின் சிநேகத்தை வளர்த்து, அவர்களுடைய சேனை களில் வீரர்களாயும் அமர்ந்து, சென்ற மஹா யுத்தத்திலும் அதற்கு முன்னும் அரிய பெரிய செயல்களைப் புரிந்திருக் கிறார்கள். ஆதி ராஜபுத்திரர்களுக்குப் பின் கூர்க்கர்களுடை யவும், சீக்கர்களுடையவும் யுத்தப் பயிற்சியே இந்தியாவின் மேன்மையைப் பெருக்கி வந்திருக்கின்றது.

b. பிண்டாரி யுத்தம் :

பிண்டாரிகள் யார் ?

பிண்டாரிகள் எனப்படுவோர் ஓர் கலப்புக் கூட்டத்தி னர். இங்கிலாந்தில் 11-ம் நூற்றாண்டில் ராபின்ஹுட் என் பவரின் கீழ் கூடிய வீரர்களைப்போலவே பிண்டாரிகளும் திரு டர்களையும், கொலைபாதகர்களையும், தேசப் பிரஷ்டர்களையும், யுத்த வீரர்களையும், தங்களிடத்தில் அடையப் பெற்றவர்கள். மஹாராஷ்டிரர்களது வீழ்ச்சிக்குப் பின் சண்டையில் வீரர் களாக அமைய வழியின்றி திருட்டுத் தொழிலையும், கொள்ளையையும், அண்டை நாடுகளின் மீது படையெடுப் பையுமே பிண்டாரிகள் தங்களுடைய முக்கியத் தொழிலாக நடத்திவந்தனர். அவர்களைச் சுமார் 60,000 பேர்களுக்குக் கணக்கிடலாம்.

யுத்தத்திற்குக் காரணம் :

பிண்டாரிகள் மத்திய இந்தியக் குடிகளுக்குப் பல தீங் குகள் இழைத்து, அவர்களுடைய கிராமங்களைக் கொள்ளை யிட்டு, பயிர்களைப் பாழாக்கி, பொருள்களைச் சூறையிட்டு, ஆயிரக் கணக்கான மாந்தர்களைக் கொலையும் புரிந்து வந்தனர். இவை நிற்க, கி. பி. 1812-ல் அவர்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமான பீஹாரையும், கி. பி. 1816-ல் வட சர்க்காரை யும் தாக்கியதால், ஆங்கிலேயர்கள் அவர்களின் கொட்டத்தை யடக்க யுத்தத்திற்குத் தயாரானார்கள்.

2. நிசழ்ச்சி கி. பி. 1816 :

நேபாளத்திற்கு அனுப்பியது போலவே ஹேஸ்டிங்ஸ் பிரபு நான்கு சேனைகளை நான்கு திக்குகளில் அனுப்பிப் பிண்டாரிகள் அறியா வண்ணம் அவர்களை வளைத்துக் கொள்ளச் செய்தார். எதிர்பாராமல் அக்கூட்டத்தினர் தாக்கப் படவே, அவர்கள் தோற்றோடினார்கள். அவர்களுடைய தலைவர்களில் ஒருவரான அமீர்கான் என்பவன் ஆங்கிலேயரிடம் சரண்புகுந்து, பின்பு, ராஜபுதனத்தில் டாங்கு என்ற சிறு ராஜ்யத்திற்கு அரசனானான். சிட்டு என்பவனோ ஆங்கிலேயர் கைகளில் சிக்கக் கூடாதெனத் தப்பியோடினும், கானகத்தில் ஓர் கடுவாய்க்கு இரையானான். அதன் பின் இரண்டு வருடங்களுக்குள்ளாகவே (கி. பி. 1818) பிண்டாரிகளின் கூட்டம் அடியுடன் ஒழிந்தது. மத்திய இந்தியரின் கஷ்டம் நீங்கியது.

3. 4-வது மஹாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1817—1818)

ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் காலத்தில் பின்னுமோர் முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. "விட்டில் பூச்சி தானே விளக்கில் வீழ்ந்து மாள்வது" போல் மஹாராஷ்டிரர்கள் 4 வது-முறை ஆங்கிலேயரை யெதிர்த்தனர். அதில் அவர்கள் தோல்வியுற்றது மன்றி மீண்டும் தலையெடுக்கா வண்ணம், ஆங்கிலேயரின் உதவிச் சேனையேற்பாட்டிற்கு உடன்பட வேண்டியதாயிற்று. அதனால் அவர்கள் பல இடங்களை யிழந்தனர். பீஷ்வா தமது நாடு முழுவதையுமே ஆங்கிலேயருக்குச் சமர்ப்பித்து விட்டு உபகாரச் சம்பளத்தை மாத்திரம் பெறலாயினர்.

ii: சீர்திருத்தங்கள் :

ஹேஸ்டிங்ஸ் பிரபு தமது நாட்டினரின் ராஜ்யத்தைப் பெருக்கப் பெரிதும் பாடுபட்டதுடன், தமக்குக் கீழிருந்த



ஹேஸ்டிங்ஸ் காலத்திய பிரிட்டிஷ் இந்தியா

இந்தியக் குடிகளைச் செவ்வனே ஆளவேண்டுமென்ற முயற்சியும் செய்தார். பழைய துரைத்தனமுறை கூடியமட்டிலும் அனுசரிக்கப்பட்டது. கலெக்டர்களுக்குக் கிரிமினல் விசாரணை அதிகாரம் வழங்கப்பட்டது. கிராமங்கள் பஞ்சாயத்துச் சபைகளின் மூலம் செவ்வனே பரிபாலிக்கப்பட்டு வந்தன. நாட்டில் கல்வி அபிவிருத்தி அடைந்தது. பள்ளிகளும், கல்லூரிகளும் தோன்றின.

ii. ஹேஸ்டிங்ஸின் ஆட்சி

கவர்னர் ஜெனரல்களில் ஹேஸ்டிங்ஸ் பிரபு முக்கியமானவர். வெல்லெஸ்லியின் காலத்தில் அவர் சென்னை மாகாணம் முழுவதையும் ஆங்கிலேயருக்குக் கிடைக்கச் செய்தது போல், ஹேஸ்டிங்ஸ் பிரபுவும் பம்பாய் மாகாணம் முழுவதையும் ஆங்கிலேயருக்குப் பெருக்கித் தந்தார். அவருடைய திறமையால் ஆங்கில அதிகாரம் இந்தியாவில் வெகுவாகப் பரவிற்று.

4. லார்டு ஆம்ஹர்ஸ்ட் கி. பி. 1823—1828:

லார்டு ஆம்ஹர்ஸ்ட் ஹேஸ்டிங்ஸிற்குப் பின்வந்த கவர்னர் ஜெனரல் ஆவர். அவருடைய காலத்தில் பரத புரத்து அரசர்களின் கோட்டை தகர்க்கப்பட்டது. பரதபுர மன்னனும் ஆங்கில சிநேகத்திற் குடன்பட்டான். அடுத்தபடியாக கி. பி. 1826-ல் பர்மா அரசர் தொடுத்தபோரில் பர்மா அரசர் அபஜயம் அடைந்து, அவர் ஆங்கிலேயருக்கு அஸ்ஸாம், அரகான், டேனஸரீம் என்ற இடங்களைத் தந்து சமாதானம் செய்துகொண்டார். இந்த யுத்தத்தைப் பற்றிய முழு விவரம் பின்வரும்.

வினாக்கள்

1. பிண்டாரிகளுடன் ஹேஸ்டிங்ஸ் பிரபு ஏன் சண்டைசெய்ய வேண்டியதாயிற்று ?
2. நேபாள யுத்தத்திலும், முதல் பர்மா யுத்தத்திலும் ஆங்கிலேயருக்குக் கிடைத்த இடங்களைக் குறிப்பிடுக.
3. 4-வது மஹாராஷ்டிர யுத்தத்தில் ஆங்கிலேயர் அடைந்த முழுப் பலனை விவரிக்க.
4. குறிப்புகள் வரைக : வேலூர் சிப்பாய்க் கலகம், ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்கள்.

15. லார்டு வில்லியம் பெண்டிங்க்

(கி. பி. 1828-1835)

1. லார்டு வில்லியம் பெண்டிங்க் :

வாரன் ஹேஸ்டிங்ஸ் சென்னையில் கவர்னர் சபையின் அங்கத்தினராயிருந்து பின்பு கவர்னராகவும், கவர்னர் ஜெனரலாகவும் நியமிக்கப்பட்டார். அதேபோல் **வில்லியம் பெண்டிங்க்** என்பவரும் முதலில் சென்னை கவர்னராக இருந்து பின்னர் கவர்னர் ஜெனரலானார். பெருந்தன்மை, தயை, ஊக்கம், பரோபகார சிந்தை, கடமையிற் குன்றாமை முதலிய நற்குணங்களை ஒருங்கே அவர் அமையப் பெற்றிருந்தார். **கிளைவ், வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ் பிரபு** முதலாயினோர் நாட்டைப் பெருக்கினராதலால் முக்கியமானவர் எனக் கருதப் பட்டனர். பெண்டிங்க்கோ துரைத்தன சீர்திருத்தத்தின் நிமித்தம் சிறந்து விளங்கினார்.

i. யுத்தங்கள் :

முதலில் இவரது காலத்தில் நடந்த யுத்தங்களைப்பற்றி அறிவோம்.

1. மைசூர் :

திப்பு இறந்தபின் மைசூர் ராஜ்யம் பழைய மன்னர் குலத்தினரான கிருஷ்ணராஜ உடையாருக்கு வழங்கப்பட்டதென அறிந்தோம். அவர் சிற்றின்பத்தில் ஆழ்ந்து ஆட்சியைச் செவ்வனே நடத்தாததால் குடிமக்கள் கலகம் செய்யத் தலைப்பட்டனர். அதைக்கண்ட பெண்டிங்க் பிரபு ஓர் சேனை

லார்டு வில்லியம் பெண்டிங்க்

யை அனுப்பிக் கலகத்தைப் போக்கி, கிருஷ்ணராஜ உடையாருக்கு உபகாரச் சம்பளம் தந்து விலக்கி, அவரது ஸ்வீகார புத்திரரான சாமராஜேந்திர உடையாரை அரசராக நியமித்தார். அவர் பட்டம் பெறுங்கால் சிறியவராதல் பற்றி சில வருடங்களுக்கு ஒரு ஆங்கிலத் துரைத்தனம் அரசியலை ஏற்று நாட்டையாண்டு வந்தது.

2. குடகு கி. பி. 1834.

சிக்கவீர ராஜா என்பவர் வில்லியம் பெண்டிங்கினது காலத்தில் குடகு நாட்டை ஆண்டுவந்தார். அவருக்கு நாட்டை ஆளும் திறமையில்லை. ஆனால் குடிகளை வருத்தும் திறமை மாத்திரம் அளவற்று இருந்தது. ஆனதுபற்றி மைசூர் நாட்டினரைப்போலவே குடகினர்களும் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி ஆங்கிலேயரைத் தங்களுக்குதவுமாறு வேண்டினர். கி. பி. 1834-ல் அவர்களுக்குதவ ஆங்கிலச் சேனை ஒன்று அவர்களுடைய நாட்டை அடைந்தது. குடகின் தலைநகராகிய மேர்க்காரா பிடிபட்டு அரசனும் சிறையானார். ஆயினும் அவருக்கு உபகாரச் சம்பளம் தந்து நாட்டைவிட்டகற்றிக் குடகை ஆங்கில ராஜ்யத்துடன் இணைத்தார். சிக்கவீரர் முதலில் வேலூரிலும், காசியிலும் சில காலம் தங்கிக் கடைசியாக இங்கிலாந் தேகினர். அங்கு 1863-ல் மாண்டார்.

ii. சீர்திருத்தங்கள் :

1. சிசு ஹத்தியும் நரபலியும் நீங்குதல்:

ராஜ புத்திரர்களிடையே பெண் மக்கள் பிறந்தால் பேதைகளென்று, சிசுக்களா யிருக்கும்பொழுதே அவர்களைக் கொன்றுவிடுவது ஒரு சிலருடைய வழக்கமாயிருந்தது. தெய்வங்களைத் திருப்திசெய்ய நரபலி யிடுதலும் மற்றோர் கொடிய அனுஷ்டானமாய்த் தென்பட்டது. ராஜாராம் மோகன் ராய் என்ற பெரியாரின் உதவியைக் கொண்டு அக் குரூர வழக்கங்கள் களையப் பெற்றன.

2. சககமனம் ஒழிதல் :

சதி அல்லது உடன் கட்டையேறல் என்பது வைதீகக் குலங்களிடையே தோன்றியதோர் வழக்கம். அதாவது கணவனிறந்து மனைவியின் வாழ்க்கை பயனற்றதாகக் கருதப்

பட்டதால், அவளும் அவனுடன் கட்டையேறி தீக்கிரையா ளுள். ஆனால் எல்லா மாதரும் இக் கொடிய வழக்கத்திற்கு இணங்கவில்லை. ஆயினும் பலாத்காரமாய்ச் சுட்டெரிக்கப் பட்டனர். இக் குரூர வழக்கத்தைப்போக்க அக்பர் பெரிதும் முயன்றனரே யாயினும், அவரால் அதை முற்றிலும் நிறுத்த முடியவில்லை. ஆனால் வில்லியம் பேண்டிங்க் ராஜாராம் மோகன் ராயரது உதவியைப் பெற்று கி. பி. 1829-ல் பெண்களை இறக்கத் துன்புறுத்துதல் கொலைக்குச் சமானமானதோர் குற்றமாகுமென ஓர் திட்டத்தைப் பிறப்பித்தார். அதன் பின்னர் அவ் வழக்கம் வேருடன் அற்றது.

3. தக்கரை ஒழித்தல் :

மத்திய இந்தியாவை பீதியால் மயங்கச்செய்த பிண்டாரிகளைப்போல் தக்கர் என்ற ஓர் கொடிய கூட்டத்தினரும் வட இந்தியாவைக் கதிகலங்கச் செய்தனர். அவர்களது அட்டூழியத்திற் களவேயில்லை. கொலை, களவு, கொள்ளை, தீ, மாறுவேடத்தின் மூலம் வஞ்சகம் முதலியன அவர்களுடைய பழக்கங்களாகும். தக்கர்கள் கையில் கிடைத்து மாளுவதைக் காட்டிலும், தீக்கிறையாவதே மேலென எண்ணி கிராமத்தினர் அநேகர் உயிர் இழக்கத் துணிவார்கள். இக் கொடியக் கூட்டத்தினரின் கொட்டத்தைப் பூண்டுட னறுத்தல் அவசியமான முயற்சியன்றோ? ஆகவே பெண்டிங்க் பிரபு 6, 7 வருஷமாக அவர்களை வேட்டையாடி, நசுக்கிப் பொசுக்கி, தூக்கிலிட்டும் அல்லது தீவாந்திரமனுப்பியும் அவர்களில் சுமார் 2000 பேரை ஒழித்தார்.

4. இந்திய உத்தியோகஸ்தர்களின் உயர்வு :

இக் கவர்னர் ஜெனரலுக்கு உத்தியோகம் வழங்குவதில் ஜாதியோ, மதமோ கணக்கில்லை. திறமை யொன்றே குறி.

மேலும் இந்தியர்களுக்குக் கூடியவரையில் உயர்தர உத்தி யோகங்கள் தரவேண்டுமென இவர் விருப்பங்கொண்டார். இவருடைய காலத்தில்தான் சப்ஜட்ஜ், டெபுடி கலெக்டர் முதலிய பதவிகள் இந்தியர்களுக்கு முதல் முதலாக அளிக் கப்பட்டன.

5. கல்வியைப் பரப்புதல் :

கல்வியைப் பரப்புவதும் தமது கடமைகளில் ஒன்றென பெண்டிங்க் கருதினார். அதற்காக அவர் பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிருமித்தார். கல்கத்தாவில் தோன்றிய வைத்திய சாலையும், மாகாணக் கலாசாலையும், பம்பாய் எல் பின்ஸ்டன் கலாசாலையும் அக்காலத்தில் விசேஷமானவை.

6. சாஸனம் புதுப்பிக்கப் பெறுதல் கி. பி. 1833 :

கி. பி. 1813-ல் வழங்கப்பட்ட சாஸனம் இவர் காலத் தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அதன் முக்கிய அம்சம் யாதெனின் கம்பெனியாருக்கு அரசியல் நிர்வாகத்தைத் தவிர்த்து எவ்வித வியாபார உரிமையும் இல்லையென ஏற் படுத்தப் பட்டது.

வினாக்கள்

1. ஆங்கிலேயருக்குக் குடகு கிடைத்தவித மெங்ஙனம் ?
2. வில்லியம் பெண்டிங்க் செய்த சீர்திருத்தங்களில் முக்கியமான மூன்றினைக் குறிப்பிடுக.

16. ராஜாராம் மோஹன்ராய்

(கி. பி. 1774—1833.)

1. இளமை :

கல்கத்தாவிற்கருகில், ஓர் கிராமத்தில், அந்தணர் குலத்தில் தனிகரும், கல்வியில் சிறந்தோருமான ஒருவருக்கு **ராஜாராம் மோஹன்ராய்** என்ற தனயன் ஒருவன் தோன்றினர். அவர் குலப் பெருமையையும், நாட்டின் பெருமையையும் ஒருங்கே வளர்த்து, ஜனசமூக சேவையிற் ஈடுபட்டு, வாழ்க்கை நலனைப் பெருக்கும் மார்க்கத்தையே பின் பற்றுபவரானர். சிறுவயதிலேயே சாஸ்திரங் கற்றுத் தர்க்கத்தில் சிறந்து விளங்கினர். கணிதம், சுதேச விதேச பாஷைகள், நுண்ணிய கலைகள் முதலியனவைகளில் அவருடைய ஆற்றலதிகம். 15 வயதிலேயே திபெத்திற்குச் சென்று பௌத்த மத ஆராய்ச்சி செய்தார். 16-வது வயதில் விக்கிரக ஆராதனையை நிக்கிரகிக்க வேண்டுமென ஓர் புஸ்தகம் வெளியிட்டார். அச்செய்கை அவருடைய தந்தைக்கு மிகவருத்தத்தைத் தந்தது. அதன் காரணமாக ராய் தமது வீட்டைவிட்டு அகன்று தந்தை யிறக்கும் வரை மனை திரும்பவில்லை.

2. உத்தியோகம் :

அவர் கி. பி. 1813 வரை சிரஸ்த்தாராக வேலை பார்த்து வந்தார். நாட்டின் மேன்மையை யுயர்த்தத் தேட்டம் கொண்டிருக்கும் அவரை அவ் வுத்தியோகத்தைக் கொண்டு பந்தப் படுத்துதல் எத்துணை பயனைத் தரும்? ஆகவே அவர் அவ் வேலையை விட்டுவிட்டார்.

3. ஜனசமூக சேவை :

சென்ற பாடத்தில் குறிப்பிட்ட சககமனம், சிசுஹத்தி முதலிய கொடிய வழக்கங்களை அவர் லார்டு வில்லியம் பெண்

டிங்க் பிரபுவுடன் நிறுத்த முயன்முர். பின்னர் கி.பி. 1828-ல் பிரம்ம ஸமாஜம் என்ற ஓர் சபையை ஏற்படுத்தி, அதற்கு அறிவாளிகள் பலரை அங்கத்தினர்களாகச் சேர்த்தார். அச் சபையின் கொள்கை பின் வருமாறு “கடவுள் எல்லோருக்

ராஜாராம் மோஹனராய்

கும் உரித்தானவர். ஜாதி மத வேற்றுமைகளை கடிபவர். மந்திரமோதி ஜபதப நிஷ்டைகளைக் கைக்கொள்ளுதலைக் காட் டிலும், ஜன சமூக சேவையையும், கடமைகளைப் புரிவதை

யுமே அவர் மேலெனக் கொள்வார். விக்கிரக ஆராதனை என்ற பக்தியின் முதற்படி உண்மைப் பக்தர்களுக்கவசிய மில்லை.

4. இங்கிலாந்திற்கேகுதலும் முடிவும்:

டில்லி சக்கரவர்த்தி இவரது மேன்மையைக் கண்டு வியந்து இவருக்கு ராஜா என்ற கௌரவப் பட்டம் அளித்தார். மேலும் இங்கிலாந்திற்கு டில்லிச் சக்கரவர்த்தியின் ஸ்தானுதிபதியாகவும் சென்ருர். அங்கு பல பிரசங்கங்கள் செய்து தமது ஆற்றலை விளக்கினுர். கி. பி. 1833-ல் பிரஸ்டல் என்னும் நகரத்தில் மாண்டார்.

வினுக்கள்

1. ராஜாராம் மோஹன் ராய் ஏன் பலரால் புகழப் படுகிருர்?
2. அவர் துவக்கிய பிரம்ம ஸமாஜம் என்றதன் கொள்கையை விளக்குக.

17. இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பு

இந்தியாவில் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த பின் அதன் எல்லையைப் பலப்படுத்துதல் அவசியமன்ருே? ஆகவே ஆங்கிலேயர்கள் எல்லைகளைப் பத்திரப்படுத்த தலைப்பட்டனர். அவ்வெல்லைகள் இந்தியாவில் பாதுகாக்கப்பட வேண்டும்? மேற்கிலும் கிழக்கிலும், தெற்கிலுமே, நம் நாடுகள் கடலால் சூழப்பட்டிருப்பதால் அத்திக்குகளைக் குறித்த கவலை இல்லை. ஏனெனில் ஆங்கிலேயர்தான் கடலாதிக்கம் படைத்தவர்கள். அவ்வண்ணமிருக்க கடலில் அவர்களை யெதிர்க்க எவர்களுக்குச் சாத்தியமாகும்? வடக்கிலும் இமயமலை நம் நாட்டைப் பாதுகாக்கின்றது. அதனைக்

கடந்து வருவது என்பது இயலாத காரியம் ஆகும். ஆகவே இந்தியாவின் வடமேற்கு, வடகிழக்கு திசைகளை காக்கப் பெறவேண்டும். அதை யுணர்ந்த ஆங்கிலேயர் அவ்வாறு செய்யலானார்கள்.

i. வடகிழக்கு எல்லை :

முதலில் வடகிழக்கு எல்லைப் பாதுகாப்பைப்பற்றி விஷயங்களை ஆராய்வோம். வடகிழக்கிலுள்ள முக்கிய நாடுகள் யாவை: **அஸ்ஸாம், அரக்கான், பர்மா** என்பவையாகும். அவைகளில் பர்மா வலிமை பொருந்தியது. ஆகவே பர்மர்களை அடக்கினால் வடகிழக்கு எல்லையைப் பாதுகாப்பதற்கொப்பாகும்.

a. முதல் பர்மா யுத்தம். (கி. பி. 1826)

1. காரணம் :

லார்டு ஆம்ஹர்ஸ்ட் காலத்தில் அரக்கான் என்பது பர்மா அரசனுக்குக் கட்டுப்பட்டதாயிருந்தது. அவன் அதற்கு மேற்கிலும் ராஜ்யத்தைப் பரப்ப எண்ணி வங்காளத்தின் கிழக்குக் கோடி ஸ்தலங்கள் அரக்கானுக்குச் சொந்தமென வாதித்தான். ஆங்கிலேயர் அதைப்பற்றி ஆராய்வதாகக் கூறினர். ஆனால் அவர்கள் முயலுவதற்கு முன்னமே இவன் ஆங்கிலேயரைத் தாக்க முயற்சித்தான்.

2. நிகழ்ச்சி :

தனது தளகர்த்தர்களில் திறமை வாய்ந்த ஒருவனை ஓர் பெரும் படையுடன் அனுப்பி ஆங்கிலேயரைத் தோற்கடித்து கவர்னர் ஜெனரலுக்குத் தங்கத் தளைகள் பூட்டி அழைத்து வருமாறு கட்டளையிட்டான். ஆனால் ஆங்கிலேயரிடம் பர்மா சேனை தோல்வியுற்றதுடன் அதன் தலைவனையுமிழந்

தது. பின்னர் காம்பெல் என்ற தளகர்த்தனின்கீழ் அனுப்பப்பட்ட ஆங்கில சேனை தென் பர்மாவின் தலைநகராகிய ஆவாவைத் தாக்கத் துயர்ந்தது.

6. யாண்டபூ உடன்படிக்கை கி. பி. (1826) :

அதையறிந்த பர்மா அரசன் யாண்டபூ என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கைக் கிசைந்து, ஆங்கிலேயருக்கு அஸ்ஸாம், அரக்கான், டெனஸரிம் என்ற எல்லைப்புற நாடுகளை ஈவதுடன், யுத்த நஷ்டத்துக்காக 1 கோடி ரூபாயும் தந்து, ஒரு ஆங்கிலேய அதிகாரியையும் தலைநகரில் வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டான். யுத்தம் முடிந்தது.

b. இரண்டாவது பர்மா யுத்தம் (கி. பி. 1852)

இரண்டாவது பர்மா யுத்தம் டல்ஹௌஸி காலத்தில் நிகழ்ந்தது.

1. காரணம் :

யாண்டபூ உடன்பாட்டின் நிபந்தனைகளின்படி பர்மா அரசன் நடக்க மறுத்தான். மேலும் ஆங்கில அதிகாரியை விரட்டியடித்தான். ஆங்கில வியாபாரிகளும் பல கஷ்டங்களுக்குள்ளாயினர். அதைக் கேள்வியுற்ற டல்ஹௌஸி பிரபு கமடோர் லாம்பர்ட் என்பவரை தூதனுப்பி மூன்று முக்கிய நிபந்தனைகளுக்குப் பர்மா மன்னனை யிணங்கச் செய்ய அனுப்பினர். அவையாவன : ஆங்கில வியாபாரிகளுக்கு பர்மாவில் தனி உரிமை; தான் செய்த குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டல்; யுத்தச் செலவு என்பனவாம். பர்மா அரசன் அத்திட்டத்திற்குக் கட்டுப்பட மறுத்தான். சண்டை உடனே தொடங்கியது.

2. நிகழ்ச்சி:

கி. பி. 1852-ல் ரங்கூன் முற்றுகை யிடப்பட்டது. அடுத்தபடியாக பஸீன், புரோம் ஆங்கிலேயர் கைவசமாயின.

3. உடன்பாடு (கி. பி. 1852):

மீண்டும் தோல்வியடைந்ததால் பர்மா வேந்தன் ஓர் உடன்பாட்டிற்குச் சம்மதித்தான். அதன்படி தென் பர்மா அல்லது பெகூ என்னும் நாடு ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்



பர்மாயுத்தம்

டது. இச்சண்டையின் பயனாய் வங்காள கடற்கரை முழுவதிலுமே ஆங்கிலேயரின் அதிகாரம் பரவியது.

அடுத்தபடியாக **வைஸிராயான டப்ரின் பிரபு** காலத்தில் **3-வது பர்மா யுத்தம்** நடைபெற்றது. ஆங்கிலேயருக்கு வட பர்மாவும் கிடைத்தது. அத்துடன் வட கிழக்கெல்லையின் தொல்லை நீங்கியது. இந்த 3-வது பர்மா யுத்தத்தைப்பற்றிய விவரம் வைசிராய்கள் காலத்தில் படிப்போம்.

ii. வடமேற்கு எல்லைப் பாதுகாப்பு அல்லது ஆப்கானியப் போர்கள்

வடகிழக்கில், ஆங்கிலேயர்களுக்குத் திடீரென விபத்து நேரிடுவதைக் காட்டிலும், வடமேற்குத் திசையில் அதை யெதிர்பார்ப்பது பொருத்ததாகும். ஏனெனில் ஆதிகால முதற்கொண்டே வட மேற்குக் கணவாய்களின் வழியாகத் தான் அன்னிய நாட்டினர்களிற் பலர் இந்தியாவைத் தாக்கி னர்.

லார்டு மிண்டோவின் காலத்திலேயே அவ்வெல்லையைப் பற்றிய கவலை பிறக்க மற்றோர் காரணமும் தோன்றிற்று. அதாவது **ருஷ்யர்கள்** கிழக்கில் தங்கள் நாட்டைப் பெருக்க முயற்சித்தனர். அச்சமயம் அவர்கள் அதிக பலமும் வாய்ந் திருந்தார்கள். ஆனதுபற்றி அவர்களுக்கும், இந்தியாவிற்கு மிடையேயுள்ள நாடுகளின் நட்பைப் பெறுவிடில் இந்தியா விற்கு ஆபத்து நேரிடுவது அதிசயமாகாது. அதை யுத்தே சித்தே லார்டுமிண்டோ எல்லைப்புற நாடுகளுடன் உடன்பாடு செய்து கொண்டார்.

முதல் ஆப்கானிய யுத்தம் (கி. பி. 1839—1842)

1. **காரணம் :**

ஆக்லந்து பிரபுவின் காலத்தில் ஆப்கானிய விஷயங் ளில் தலையிட அவசியமொன்று ஏற்பட்டது. அதாவது

ஆப்கனிஸ்தானத்தில் சிங்காதனத்தைப் பெற ஷாஷுஜா என்பவருக்கும், தோஸ்து மகம்மது என்பவருக்கும் யுத்தம் நிகழ்ந்தது. அச்சமயம் தோஸ்து மஹம்மது சண்டையில் வென்று ஷாஷுஜாவைத் துரத்தியடித்தார். தோற்றுப்



எல்லைப்புறச் சண்டைகளைக் குறிக்கும் படம்

போனவர் பஞ்சாபில் ரஞ்சிட் ஸிங்கிடம் அடைக்கலம் புகுந்தார். அச்சமயம் தோஸ்து மஹம்மது, ருஷ்யர்களுக்குதவா வண்ணம் அவரது சிநேகத்தைப் பெற ஆக்லந்து பிரபு காப்டன்பர்ன்ஸ் என்பவரைத் தோஸ்துவிடம் தூது அனுப்பினர். அதற்கு ஆப்கானிய அமீர் ரஞ்சிட் ஸிங்கின் வசமிருந்த பெஷாவரை வாங்கித் தருவதானல் சிநேக உடன்பாட்டிற்குக் கட்டுப்படுவதாகக் கூறினர். எக்காரணத்தை

முன்னிட்டும் தங்களுக்கு மிக உபயோகமாயிருந்த ரஞ்சிட் ஸிங்கை ஆங்கிலேயர் விரோதித்துக்கொள்ள முடியாதாகையால் அவ்வண்ணம் செய்ய மறுத்தனர். ஆகவே தோஸ்து மஹம்மது ருஷ்ய உடன்படிக்கைக்கு முயற்சி செய்தார். அதை அறிந்த ஆங்கிலேயர்கள் உடனே போருக்கு ஆயத்தமானார்கள்.

2. நிகழ்ச்சிகள் :

a. ஷாஷுஜா பட்டம் பெறுதல் :

கி. பி. 1839-ல் ஆக்லந்து பிரபு போலன் கணவாயின் வழியாய் ஓர் பெரும் படையை அனுப்பி **காந்தஹார், கஜினி, காபூல்** முதலியவற்றைப் பிடித்து தோஸ்து மஹம்மதுவைத் தோற்கடித்தார். உடனே அவர் ஆங்கிலச் சேனையிடம் சரண் புகுந்தார். அடுத்தபடியாக ஷாஷுஜா அமீராக்கப் பட்டு, தோஸ்து மஹம்மது கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டார். ஆங்கிலேய உதவியைப் பெற்றுப் பட்டமடைந்த ஷாஷுஜா ஆங்கிலேய நட்பை ஏற்று, ஓர் ஸ்தானிகரையும், போர்ப் படையையும் தமது நாட்டில் வைத்துக்கொள்ள இணங்கினர்.

b: ஷாஷுஜா நாட்டை இழத்தலும், ஆங்கிலேயரின் துயரமும்

அதிகாரச் செருக்கைக் கொண்ட ஆங்கிலேயரை ஆப்கானியர்கள் வெறுத்தார்கள். ஆகவே அவர்கள் தக்கதோர் சமயம் பார்த்து தோஸ்து மஹம்மதுவின் மைந்தரான **அக்பர் கான்** என்பவரின்கீழ் கிளர்ச்சியை உண்டுபண்ணி **ஸர் வில்லியம் மக்னுட்டன்** என்ற ஸ்தானிகரைக் கொன்றார்கள். பின்பு அவர்கள் ஆங்கிலேய வீரர்களை ஆயுதங்களை வைத்துச் செல்லக் கட்டாயப்படுத்தி அவர்களைச் செல்லவிடுத்தனர். அதன்

படி ஆங்கிலச் சேனை ஜலாலாபாத்தை நோக்கிச் செல்லுங் கால் கைபர் கணவாயின் உச்சியில் வஞ்சகமாகத் தங்கி அக் கணவாயின் வழியாய் ஆங்கிலேய வீரர்கள் செல்லலுற் றதுமே அவர்களில் 15,000 பேர்களைச் சுட்டும், தாக்கியும், பாறைகளை உருட்டியும், படுகொலை செய்தனர். அப்படை யில் பிரைடன் என்ற ஒரு வைத்தியரே உயிர் தப்பி ஜலாலா பாத்தை அணுகிப் படையின் பரிதாப முடிவைத் தெரிவித் தார். ஆனால் ஜலாலாபாத்தும், காந்தஹாருமே அச்சமயம் ஆப்கானியரால் முற்றுகை யிடப்பட்டன.

இவற்றினிடையே ஆங்கிலச்சேனை மடிந்ததின் நிமித்தம் வெகுண்ட மேலதிகாரிகள் ஆக்லந்தைத் திரும்பி வரும்படி கட்டளையிட்டனர்.

c. மீளவும் சண்டை :

எல்லன்பரோ ஆப்கானியரைத் தண்டிப்பதற்கென்றே இங்கிலாந்தினின்றும் கவர்னர் ஜெனரலாக அனுப்பப்பட் டார். அவர் உடனே பல்லக் என்ற தளகர்த்தன் கீழ்த் தகுந்ததோர் படையை அனுப்பினர். ஜலாலாபாத், காந்த ஹார் முதலிய இடங்களில் நடத்தப்பட்டு வந்த முற்றுகைகள் ஒழிந்தன. பின்பு காபூலும், கஜினியும் கைவசமயின. இதற்கிடையிலேயே ஆப்கானிய அமீரான ஷாஹ ஷஜா கொலை செய்யப்பட்டார். ஆனதுபற்றி எல்லென்பரோ பிரபு கல்கத்தாவில் தம்மிடமே இருந்துவந்த தோஸ்து மகம்மதுவை அமீராக்கி ஆப்கானிஸ்தானத்தை பலப்படுத்தினர்.

பின் சரிதை :

ஆனால் இப்போருடன் ஆப்கானிஸ்தானம் ஆங்கிலேய ருக்குக் கட்டுப்படவில்லை. பின்னரும் லிட்டன் பிரபுவின் காலத்தில் தோஸ்து மஹம்மதுவின் சந்ததியார் ஆங்கிலேய

ருக்கெதிரே 2-வது, 3-வது ஆப்கானிய யுத்தங்களைப் புரிந்தனர். அத்துடன் அமைதி யேற்படவில்லை. செம்ஸ்போர்ட் பிரபுவினுடைய காலத்தில் மீண்டுமோர் போர் தொடங்கியது. அது ஆங்கிலேயரால் அடக்கப்பட்டது. அதற்குப்பின் கர்ஸன் பிரபுவினுடைய காலத்தில் எதிர்ப்புகள் எல்லாம் ஒழிந்து வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஏற்பட்டு ஆப்கானிய சிநேகமும் நிலைபெற்றது.

சிந்து தேசம் ஆங்கிலேயர் வசமாகுதல்:

லார்டு எல்லன்பரோ காலத்தில் சிந்து நாட்டு அமீர்கள் தங்களுக்குப் பிரதிநிதியாயிருந்த நேபியர், தங்களைக் கொடுமையாய் நடத்தியதால், கி. பி. 1843-ல் கிளர்ச்சியை யுண்டு பண்ணினர். அதைக்கண்ட நேபியர் அவர்களை மியாணி, ஹைதராபாத் என்ற இடங்களில் தோற்கடித்து, சிந்து நாட்டையும் ஆங்கில ராஜ்யத்துடன் சேர்த்துவிட்டார்.

வினாக்கள்

1. எல்லைப்பாதுகாப்பு வேலை எவ்வண்ணம் அவசியமானது ?
2. முதல் ஆப்கானிய யுத்தத்தில் ஆங்கிலேயர் கணக்கின்றி மடியக் காரணமென்ன ?
3. வடகிழக்கில் எல்லைப்புற சண்டைகளால் உண்டான பலனென்ன ?

18. சீக்கர்கள்—ரஞ்சித்ஸிங்

(கி. பி. 1780—1838)

1. ரஞ்சித் ஸிங்கிற்கு முன் சீக்கர்கள் சரிதை :

சென்ற புஸ்தகத்தில் 15-வது நூற்றுண்டில் பஞ்சாபில் சீக்கர்கள் என்ற ஒரு ஜாதியினர் தோன்றின ரென்றும், **சீக்கர்** என்ற பதத்தை யொட்டி அவர்களுக்குச் **சீக்கர்கள்** எனப் பெயர் வந்ததென்றும், அவர்களுடைய மதம் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்கவல்லதென்றும், அம்மதத்தை ஸ்தாபித்த குரு **நானக்** என்ற மஹான் என்றும் படித்தோம். மேலும் அம் மதம் பஞ்சாபில் வேரூன்றித் தழைத்துச் சீக்கிய குருக்களாகிய **அர்ஜுனர், ஹரி கோவிந்தர் தேஜ்பகதூர், கோவிந்தர்** முதலியோரின் பெரு முயற்சியினுல் ஓங்கி வளர்ந்ததெனவும் கண்டோம். ராஜீய நிலையை யனுசரித்து அம் மதத்தினர் மதக் கோட்பாடுகளைக் கைக்கொண்டதுடன் யுத்த முறையையும் விசேஷமாகக் கையாண்டனரெனவும் கற்றோம். அப்பொழுது அவர்கள் சில பிரிவுகளாகப் பிரிந்து **ஸர்தார்கள்** என்ற தலைவர்களின் கீழிருந்து தங்களுடைய மதத்தைக் காத்ததுடன் முகம்மதிய யெதிர்ப்பையும் போக்கினுர்கள். அவ்வண்ணம் சீக்கியர்களின் மேன்மையை வளர்த்த ஸர்தார்களில் **சத்தார்ஸிங்** என்பவர் ஒருவர். அவருடைய மாட்சிமை தங்கிய குமாரரே **ரஞ்சித்ஸிங்** எனப்படுவோராவர்.

2. ரஞ்சித் ஸிங்கின் தோற்றம், குணம், ஆற்றல்.

ரஞ்சித்ஸிங் கி. பி. 1780 ல் பிறந்தார். அவர் சிற்றுருவத்தினர். அம்மையின் கொடுமையால் ஒரு கண் குருடாகி முக வசிகரமும் பாழடைந்தது. ஆயினும் அவரது தோற்றம், அவரது பெருமையையும், ஆற்றலையும் விளக்கியது.

சுபாவத்திலும் அவர் பிடிவாதம், கொடூரம், சுயநலம் முதலிய குணங்களைப் பெற்றிருந்தார். எனினும் அவரது சீக்க அபிமானமும், தேச பக்தியும், கம்பீரமும் சிறந்த ஊக்கமும் அவரை மேன்மைப் படுத்தின.

ரஞ்சித் சிங்

அவருடைய குணங்களைக் காட்டிலும், அவரது தந்திரமும், வீரமும், தைரியமும், ஆளுந் திறமையுமே அவருடைய புகழை அதிகமாகப் பெருக்கின.

3. அவரது அதிகாரப் பெருக்கு : ரஞ்சித்ஸிங், தமது 12 வது வயதிலேயே, தந்தையை யிழந்தார். 5 வருடங்கள் அவருடைய தாயார் பிரதிநிதியா யிருந்து ஆண்டு வந்தாள். 17 வது வயதில் தாமே ஆட்சியை ஏற்றுக் கொண்டார். தமது வயது 19 ஆக இருக்கும் பொழுது லாகூரை ஜெயித்தார். கி. பி. 1808-க்குள் அமிருத சரஸ் என்ற சீக்கத் தலைநகரைக் கைப்பற்றி, மற்ற ஸர்தார்களையும் வென்று, பஞ்சாபில் ஓர் சீக்க ராஜ்யத்தையும் ஸ்தாபிதம் செய்தார். பிறகு காஷ்மீரம், பேஷாவர், மூல்டான் முதலான நாடுகளையும் ஜயித்தார். அவருடைய ஆற்றலையும் உபயோகத்தையும் கண்டு கி. பி. 1809 ல் மிண்டோ பிரபு ஸர் சார்ல்ஸ் மெட்காப் மூலம் அவருடன் சிநேக உடன்பாடு செய்து முடித்தார். அதன் பிரகாரம் ரஞ்சித்ஸிங் ஆங்கில நட்பைப் பெற்று ஸட்லஜ் நதிக்குக் கிழக்கே தமது ராஜ்யத்தை பரப்புவதில்லை யெனவும் ஒப்புக் கொண்டார். இவ்

வளவு தீரம் வாய்ந்த வீரராதலால் அவருக்குப் பஞ்சாப் சிங்கம் என்ற பட்டப் பெயர் வழங்கலாயிற்று.

4. **ரஞ்சித் ஸிங்கினது ஆட்சி :**

ரஞ்சித்ஸிங் தமது ராஜ்யத்தைச் சில பிரிவுகளாகப் பிரித்துத் தக்கத் தலைவர்களின் கீழ் ஒப்புவித்திருந்தார். ஒவ்வொரு அதிகாரியும் அமைதியை நிலவி நியாயத்தை வழங்குவதுடன், அவருக்குக் கப்பமும் கட்டவேண்டும். மேலும் ஸர்தார்கள் என்ற சீக்கப் பிரபுக்கள் யுத்த காலங்களில் அரசருக்குப் படை கொண்டு உதவ வேண்டும். நாட்டின் வரி நேர்மையுடன் வசூலிக்கப்பட்டது. விக்கிரமாதித்தியர், ஹர்ஷர் முதலியோரின் காலத்தில் நடந்தது போலவே நாட்டின் வருமானம் சீர்மையுடன் செலவழிக்கப்பட்டது. உயர்தர உத்யோகஸ்தர்கள் வெகு கவனத்துடன் கண்காணிக்கப் பட்டனர். ராணுவம் நூதன ஐரோப்பிய முறையில் பயிற்சியைப்பெற்று அதை எவரும் வெல்ல முடியாதெனத் தேர்ச்சியை அடைந்திருந்தது. அவருடைய காலம் முழுதும் சீக்கர்களிடையே குழப்ப மென்பதே தோன்ற வில்லை. ரஞ்சித்ஸிங் 1839 ல் காலமானார்.

வினாக்கள்.

1. ரஞ்சித்ஸிங்கின் ஆட்சி எத்தன்மையதாயிருந்தது ?
2. ரஞ்சித்ஸிங் எவ்வண்ணம் தம் அதிகாரத்தைப் பெருக்கினார் ?
3. ரஞ்சித் ஸிங்கின் தோற்றத்தையும் குணாதிசயங்களையும் விவரிக்க.

19. பஞ்சாப் ஆங்கிலேயர் வசமாகுதல்.

i. முதல் சீக்க யுத்தம் (கி. பி. 1845—1849)

1. காரணம் :

ரஞ்சித் ஸிங்கிற்குப் பின் சீக்கர்களின் அதிகாரம் குறையத் தலைப்பட்டது. அதற்குக் காரணம் அவர்களிடையே தோன்றிய வேற்றுமையே யாகும். கி. பி. 1845-ல் பஞ்சாப் ரஞ்சித் ஸிங்கின் ராணிகளில் ஒருவரின் குமாரனான, துலீப்ஸிங் வசமிருந்தது. அவருக்கு அப்பொழுது வயது 5 ஆனது பற்றி ராஜ்யபாரம் அவருடைய தாயாரால் வகிக்கப் பட்டு நடைபெற்று வந்தது. ஆனால் அந்த ராணிக்குச் சீக்கச் சேனையும், பிரபுக்களும் அடங்காமல் தங்களுக்குத் தோன்றியவாறு காரியங்களைச் செய்து வந்தனர். அவ்விதம் புரிந்த செயல்களில் லாகூரின் உடன்படிக்கையை நிராகரித்து ஸட்லஜ் நதியைத் தாண்டி ஆங்கில நாடுகளைக் கைப்பற்றியது ஒன்றாகும். அதுவே ஆங்கிலேயருடன் ஓர் கொடும் யுத்தத்திற்கு வழி வைத்தது.

2. நிகழ்ச்சிகள் :

அக்காலத்தில் ஆங்கில கவர்னர் ஜெனரலாக இருந்தவர் ஹார்டிஞ்ச் பிரபு என்பவராவர். அவரே ஒரு பெரிய தளகர்த்தர். ஆகவே அவர் தாமும் மற்ற தளகர்த்தர்களுமாகச் சேனையை நடத்திச் சீக்கர்களை, முட்கி, பிரோஸ்ஷா, அலிவால், ஸோப்ராயன் என்ற நான்கு இடங்களில் தோற்கடித்தனர். பின்பு லாகூரையும் கைப்பற்றினர். அதைக் கண்ட சீக்கர்கள் இனிச் சண்டை தொடுப்பதிற் பயனில்லையென எண்ணி சமாதானத்திற்குடன் பட்டனர்.

3. லாகூர் உடன்படிக்கை :

லாகூரிலேயே ஓர் உடன்பாடு முடிக்கப்பட்டது. அதில் பின் வரும் தீர்மானங்கள் செய்யப் பட்டன.

(1) பீயஸ் நதிக்கும் ஸட்லஜ் நதிக்குமிடையிலுள்ள பிரதேசம் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட வேண்டும். (2) யுத்தச்



பஞ்சாப் ஆங்கிலேயர் வசமானது

செலவிற்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாய் துலீப்ஸிங் ஆங்கிலேயருக்குத் தரவேண்டும். (3) துலீப் ஸிங்கையே பஞ்சாபிற்கு அரசராக ஏற்க வேண்டும். (4) அவருடைய அரசியல் சீருடன் நடைபெற ஓர் ஆங்கில ஸ்தானிகர் லாகூரில் தங்கவேண்

டும். அவருக்குதவியாக ஓர் சேனையும் சீக்கச் செலவில் அங்கு நிறுத்தப்பட வேண்டும்.

குறிப்பு :—துலீப்ஸிங் கொடுக்க வேண்டிய பணம் அவரிடத்தில் அச்சமயம் இல்லையாதலால், ஆங்கிலேயர் பஞ்சாபைச் சேர்ந்த காஷ்மீரத்தை குலாப்ஸிங் என்ற ஒருவருக்கு 75 லக்ஷத்திற்கு விற்றுப் பணமாக்கிக் கொண்டார்கள். அது முதல் காஷ்மீரம் தனி ராஜ்யமாயிற்று.

ii. இரண்டாவது சீக்க யுத்தம்

லாகூர் உடன்பாட்டிற்குப் பின் பஞ்சாப் ஆங்கிலேய ஸ்தானிகரால் சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்பிரிவுகளைத் தனி உத்தியோகஸ்தர்கள் பஞ்சாப் மன்னருக்கு அடங்கி ஆண்டு வந்தனர். அவ்வாறு நடந்து வரும் காலத்தில் கி. பி. 1849 ல் மூல்டானை ஆண்ட மூல்ராஜ் என்ற கவர்னர் அம் மாகாணத்தைச் சரிவர ஆளாமலும், பஞ்சாப் அரசாங்கத்தினருக்குக் கணக்குகளை ஒப்புவிக்காமலும் காலங் கடத்தினர். அதனல் ஆங்கில ஸ்தானிகர் அவரை வற்புறுத்திக் கேட்க அவர் ராஜீனமா செய்தார். அக்காலத்தில் கவர்னர் ஜெனரலாயிருந்த டல்ஹௌஸி பிரபு அதைக் கண்டதுமே இரண்டு தளகர்த்தர்களை மூல்டானின் அரசியலை ஏற்கும்படி அனுப்பினர். அவர்கள் மூல்டானை யடைந்ததுமே கொல்லப்பட்டனர். ஆங்கிலச் சேனையும் துன்புறுத்தப்பட்டது. அதன்மேல் அவர் லாகூர் உடன்பாட்டை வெறுத்த மற்ற சீக்கர்களையும் யுத்தத்திற்கு ஆயத்தமாகத் தூண்டினர். யுத்தம் தொடங்கியது.

2. நிகழ்ச்சிகள் :

உடனே டல்ஹௌஸி ஸர் ஹியூ காப் என்ற சேனைத் தலைவரைச் சீக்கரைத் தாக்க அனுப்பினர். அவர் அஜாக்

கிரதையாய்ச் சீக்கர்களைச் சிலியன்வாலா என்ற இடத்தில் எதிர்த்ததனால் ஆங்கிலச்சேனைக்குப் பெரும் நஷ்டமுண்டாயது. சுமார் 2000 ஆங்கில வீரருக்குமேல் மாண்டனர். அதில் கிடைத்த வெற்றியும் பிரயோஜனமற்றதாயது. ஆகவே கப் என்பவர் சேனாதிபதிப் பதவியினின்றும் நீக்கப்படவேண்டுமென ஆங்கில மேலதிகாரிகள் உத்திரவிட்டனர். ஆனால் அவரது பதிலாளாகிய ஸர் சார்ல்ஸ் நேபியர் என்பவர் பதவியை யேற்கு முன்னரே தமது புகழை மீண்டும் நிலைநாட்டக் கருதிச் சீக்கர்களை குஜராத் என்னுமிடத்திற் றுக்கினார். அச்சண்டையில் சீக்கர்கள் அடியுடன் தோற்றனர். ராவல்பிண்டி யென்னுமிடத்தில் சீக்கச்சேனையும் அடிபணிந்தது.

3. முடிவு:

பின்பு டல்ஹௌஸி பஞ்சாபை ஆங்கில நாட்டுடன் சேர்த்துவிட்டார். துலீப்ஸிங்கிற்கு 6 லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் தந்து அவரை இங்கிலாந்திற்கு அனுப்பினர். சீக்க வீரர்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டு, அவர்களுடைய சேனையும் கலைக்கப்பட்டது. பின்பு அங்கு அரசியல் நடத்தத் தக்க ஏற்பாடும் செய்யப்பட்டது. அதைப்பற்றிய விவரத்தை அடுத்த அத்தியாயத்தில் படிப்போம்.

வினாக்கள்

1. முதல் சீக்க யுத்தம் அல்லது இரண்டாவது சீக்க யுத்தம் நடக்கக் காரண மென்ன ?
2. இரண்டு சீக்க யுத்தங்களினாலும் ஆங்கிலேயருக்குண்டான லாப நஷ்டங்களென்ன ?

20. பஞ்சாபிலும் எல்லைப்புறத்திலும் ஆங்கில ஆட்சி.

i. பஞ்சாப் ஆட்சி முறை :

மிக்க சிரமத்தின்பேரில் அடைந்த பஞ்சாபைத் தக்க முறையில் டல்ஹௌஸி ஆள விரும்பினர். அதற்காக மூன்று வல்லவர்கள் அடங்கிய ஒரு சபையை நிருமித்து அவர்களில் ஒவ்வொருவருக்கும் வேலைத் திட்டம் வரையறுக்கப்பட்டது. அதனால் அரசியல் செவ்வனே நடைபெற்றது. ஜனங்களின் மனம் குளிர்ந்து, நாடும் சுபிக்ஷமடைந்தது. அவ்வித ஆட்சியை நடத்திய அங்கத்தினர் ஹேன்ரி லாரன்ஸ், ஜான் லாரன்ஸ் என்ற இரு சகோதரர்களும் மான்ஸெல் என்ற உத்தியோகஸ்தருமேயாவர்.

1. ஹென்ரி லாரன்ஸ்:

ஹேன்ரி ராணுவ இலாகாவைக் கவனித்து வந்தார். இரண்டாவது சீக்க யுத்தத்தின் அந்தியத்தில் சீக்க வீரர்கள் ஆயுதங்கள் இழந்தனரெனப் படித்தோமல்லவா ? அவர்களை அவர் ஆங்கில சேனையில் மீண்டும் சேர்த்துக்கொண்டார். அவர்கள் ஆங்கில அதிகாரத்தை மீருவண்ணம் தக்கதோர் போலீஸ் ஆட்சியையும் ஏற்படுத்தினர். மேலும் சீக்கிய ஸர்தார்களை வசியப்படுத்தி அவர்களின் மனத்தாங்கலைப் போக்கினர். ஹென்ரி இவ்வண்ணம் சீக்கர்களிடம் அன்பும், ஆதரவும் காட்டியதாலும் சகோதரருடன் ராஜாங்க விஷயத்தில் வேற்றுமையைக் கொண்டிருந்ததாலும் டல்ஹௌஸி அவரை ராஜபுதனத்திற்கு மாற்றிவிட்டார்.

2, ஜான் லாரன்ஸ் :

ஜான் லாரன்ஸ் என்பவர் வரி, வசூல் கணக்கு முதலிய வேலைகளைக் கவனித்து வந்தார். சீக்கர்களின் கொடுமை

குறையும்படியாக, ஜான் ஏற்ற வரியையும், வருமானத்திற் கால் பங்கையுமே வசூலித்தார். வரவு செலவு கணக்குகள் அவரால் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. பின்னும் உள் நாட்டு வியாபார வரிகளில் சிலவற்றை அவர் நீக்கினர். டல் ஹௌஸிக்கு இவரிடத்திலேயே முழு நம்பிக்கை யிருந்தது. ஆனதுபற்றி ஹென்ரியின் புறப்பாட்டிற்குப் பிறகு ஜானே முழு அரசியலுக்கும் கமிஷனராக நியமிக்கப்பட்டார்.

3. மான்ஸேல் :

மான்ஸேல் எனப்படுவோர் நியாய இலாகாவிற்குத் தலைமை வகித்ததன்னியில் நாட்டில் அமைதியையும் நிலைநாட்டினர். நியாய விசாரணை நேர்மையுடன் நடைபெற்றது.

பஞ்சாப் ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஜில் லாவிற்கு நீதிபதியென்றும், கலெக்டர் என்றும் உயர்தர உத் தியோகஸ்தர்கள் தோன்றலாயினர். நியாயம் நிறுவுவதில் அதிக சிரத்தையும், அமைதியையும் பரப்புவதில் அதிக ஊக் கத்தையும் அவர் காட்டியதால் ஆங்கிலேயர்பால் சீக்கர்களின் கோபம் தீர்ந்து, தாபமும் அகன்றது.

இம்மூவரும் நடத்திய ஆட்சி சீக்கர்களுக்கு மிகவும் ஏற்றதாயிருந்தது என்றே கூறவேண்டும். இல்லையெனில் வடஇந்தியாவில் 1857-ல் பெரியதோர் புரட்சி நிகழுங்கால் சீக்கர்கள் ஆங்கிலேயர்களை எதிர்க்காமலும் புரட்சிக்காரர்களை அடக்க உதவியும் இருப்பார்களா ?

ii. எல்லைப்புற ஆட்சி :

இதே காலத்தில் எல்லைப்புறத்திற்கும் ஏற்றதோர் உத் தியோகஸ்தர் அமைதியை நிறுவ அனுப்பப்பட்டார். அவர் பெயர் ஜான் நிக்கல்ஸன் என்பதாகும். அவரும் மனே

திடத்தாலும் ஆழ்ந்த யோசனையாலும், அளவிடாத தைரியத்தாலும் எல்லைப்புறத்தை பத்திரப்படுத்தினார். கோட்டைகளைக் கட்டி, அவைகளில் சேனைகளை நிரப்பி, முரட்டு ஜாதியினரின் எதிர்ப்புகளைப் போக்கினார். மேலும் நீதியை உண்டு பண்ணி துரைத்தனத்தையும் செவ்வனே நடத்தினார். சிப்பாய் கலகத்தின் சமயம் அவருடைய மாகாணத்திலும் அமைதி நிலவியிருந்தது.

வினாக்கள்

1. இரு சகோதரர்களில் யாராவதொருவரைக் குறித்து ஓர் குறிப்பு எழுதுக.
2. எல்லைப்புறம் எவ்வண்ணம் காக்கப்பட்டது ?

21. லார்டு டல்ஹௌஸி

(கி. பி. 1848-1856)

டல்ஹௌஸி பிரபுவின் நோக்கங்களும், குணங்களும்.

இந்தியாவிற்கு வருவதற்கு முன் டல்ஹௌஸி இங்கிலாந்தில் வர்த்தகச் சங்கத் தலைவராயிருந்தார். அவ்வேலை பார்த்து வரும்போது அவர் அறிவுறுத்திய சாமர்த்தியத்தைக் கண்டு இந்தியாவிற்குத் தக்க கவர்னர் ஜெனரல் ஆவரென எண்ணிப் பார்லிமெண்டார் அவரை அனுப்பினார்கள். அவரது முக்கிய நோக்கம் இந்தியாவில் ஆங்கிலேய அதிகாரத்தை வளர்த்துக் கூடியமட்டிலும் நாட்டைப் பெருக்கவேண்டு மென்பதேயாகும்.

அதற்கிணங்க அவரது குணங்களும் அவருக்குதவியாய் இருந்தன. விடாமுயற்சி, ஊக்கம், மனோதிடம், தேக

வலிமை, தைரியம், ராஜதந்திரம், அரசியலை நடத்தும் திறமை, உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்து எடுக்கும் சக்தி முதலிய அம்சங்கள் அவரிடத்து ஒருங்கே வாயப் பெற்று, அவருடைய எண்ணங்களைப் பலனடையச் செய்தன.

i. நாட்டைப் பெருக்குதல்.

அவர் இந்தியாவிற்கு வந்ததும் அதன் நிலையைச் சீர் தூக்கித் தம்மனோபீஷ்டத்தை நான்கு வழிகளில் சாதித்துக்

லார்டு டல்ஹௌஸீ

கொள்ளலா மெனக் கண்டார். அவைகளைப் பற்றி இனி ஆராய்வோம்.

1. யுத்தங்கள் :

(a) இரண்டாவது சீக்க யுத்தம் (கி. பி. 1849)

2-வது சிக்க யுத்தம் ஆங்கிலேயர்களுக்குப் பெரும்பலனை யளித்தது. பஞ்சாப் முழுவதும் கைவசமாகித் தங்களது ஆட்சியால் சீக்கர்களின் அன்பும் அவர்களுக்குக் கிட்டிற்று.

(b) இரண்டாவது பர்மா யுத்தம் (கி, பி. 1852)

பர்மா மன்னருடன் புரிந்த 2-வது யுத்தம் தென்பர்மா முழுதையும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாக்கியது. ஏற்கனவே கிடைத்த நாடுகளுடன் அதுவும் சேரவே வங்காளக் கடற்கரை முழுதும் ஆங்கில அதிகாரத்திற்குட்பட்டது.

2. நாடுகளினிணைப்பு :

(a) பீரார் :

டல்ஹௌஸி வேறு வழியிலும் நாட்டைப் பெருக்கினார். நிஜாம் இடமிருந்து உதவிச் சேனை யேற்பாட்டின் சம்பந்தமான ஒரு பெரிய தொகை ஆங்கிலேயருக்குக் கிடைக்கவேண்டியதா யிருந்தது. அதற்குப் பதிலாக ஆங்கிலேயர்கள் பீரார் என்னும் மாகாணத்தைப் பெற்றனர்.

(b) அயோத்தி :

அயோத்தி நவாப் தமது நாட்டைச் சரிவர ஆளவில்லை. ஜனங்களின் துயர மதிகரித்தது. ஆகவே டல்ஹௌஸி அவரிடமிருந்து கி. பி. 1856-ல் அயோத்தியை அடைந்து அதற்குப் பிரதியாக நவாப்பிற்கு 12 லக்ஷம் ரூபாய் வருஷச் சம்பளமாகத் தந்தார். அயோத்தி ஆங்கில ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டது.

3. உபகாரச் சம்பளமும் பட்டமும் எடுபடல் :

அடுத்தபடியாக டல்ஹௌஸி ஆற்காடு, தஞ்சாவூர் முதலிய இடங்களின் அரச சந்ததியாருக்கு இருந்துவந்த பட்டங்

களைச் சில காரணம் கூறி எடுத்து விட்டார். இரண்டாவது பாஜீராவின் ஸ்வீகார புத்திரரான நானா சாகிப் என்பவருக்கும் சாக்குப் போக்குச் சொல்லி உபகாரச் சம்பளத்தை ஒழித்தார். இம்முறைகளால் ராஜ்ய விஸ்தீரணம் பெருகவில்லையாயினும் அச் சுதேச மன்னர்களுக்கு முந்தி இருந்த நாடுகள் ஆங்கிலேயருக்கு நிரந்தரமாயின.

4. வார்சுரிமைக் கொள்கை :

கடைசியாக டல்ஹௌஸி பின்னும் சிலஸ்தலங்களைக் கைப்பற்ற ஓர் சூழ்ச்சி செய்தார். சிற்றரசர்களிடையே வார்சு அற்றால் ஆங்கிலேயரின் அனுமதியின் பேரிலேயே ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென ஏற்கனவே கம்பெனியாரால் திட்டம் செய்யப்பட்டிருந்தது. டல்ஹௌஸி அந் நிபந்தனையைப் பின்னும் பிணைத்து ஸ்வீகார உரிமையையே நிறுத்தி விட்டார். இவ்வழியில் கம்பெனியாருக்குக் கிடைத்த இடங்கள் 7 ஆகும். அவைகளாவன. சதாரா, பகத், ஜான்ஸி, நாகபுரி, ஸம்பல்புரி, ஜோதிபுரி, உதயபுரி என்பனவாகும்.

ii. சீர்திருத்தங்கள்:

டல்ஹௌஸி நாட்டைப் பெருக்கியதைப் போலவே ஆட்சியின் மேன்மையையும் தக்க சீர் திருத்தங்களின் மூலம் பெருகச் செய்தார். (1) இவருடைய காலத்தில் தான் முதல் முதல் ரயிலும், தந்தியும் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டன. அரையணா கார்டு இவருடைய காலத்தில் தோன்றியதே. (2) மராமத்து அல்லது பொது வேலை இலாகா என்பது இவரால் தான் ஏற்படுத்தப்பட்டது. அது ரஸ்தா, கால்வாய், அணை, பாலம், பொதுக் கட்டிடங்கள் முதலியவைகளை உண்டுபண்

ணியும், மராமத்துச் செய்தும் வந்தது. (3) கல்வி இலாகாவும் விருத்தி அடைந்தது இவருடைய காலத்திலேயே பிரத



மக் கல்வியைப் பரப்பியும், தனிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குச் சர்க்காரின் பொருளுதவியை ஏற்படுத்தியும், ராஜதானிகளில் பிரதம கலாசாலைகளை நியமித்தும் டல்ஹௌஸி நாட்டில் அறி

வைப் பெருக்கினர். இந்தியாவின் கம்பெனியாரது பரந்த ராஜ்யத்தை ஆற்றலுடன் ஆள இங்கிலாந்தில் ஸிவில் ஸேர் விஸ் என்ற பரீக்ஷையை ஏற்படுத்தி அதில் தேர்ந்த ஆங்கிலேயருக்கும், இந்தியருக்கும் உயர்ந்த பதவிகள் அளிக்கப் படலாயின. (4) கடைசியாக மத விஷயத்தில் அவர் எல்லோருக்கும் முழுச் சுதந்திரத்தைத் தந்தார்.

iii. டல்ஹௌஸி சாதித்தது:

டல்ஹௌஸி இந்தியக் கவர்னர் ஜெனரல்களில் முதன்மையானவரெனக் கூற வேண்டும். அவருடைய சீர் திருத்தங்களும், ஆற்றலமைந்த அரசியலும் உண்மையிலேயே அவருடைய கீர்த்தியை வளர்த்தன. ஆயினும் பலாத்காரமாக நாடுகளைப் பறித்தல், வார்சுரிமைக் கொள்கையின் மூலம் பல இடங்களை அடைதல் என்ற செய்கைகள் இந்தியர்களின் கோபத்தைப் பெருக்கி மேலதிகாரிகளின் அறுவறுப்பையும் உண்டுபண்ணின. தற்காலத்தில் இந்தியாவில் காணப் பெறும் பிரிட்டிஷ் ஸ்தலங்கள ஆங்கிலேயருக்கு இவருடைய காலத்திலேயே கிடைத்தனவாகும்.

வினாக்கள்

1. டல்ஹௌஸியின் சீர் திருத்தங்களில் நான்கை குறிப்பிடுக.
2. டல்ஹௌஸி புரிந்த சண்டையில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த லாபமென்ன ?
3. வார்சுரிமைக் கொள்கையை விளக்கி, அது ஏன் இந்தியரால் வெறுக்கப்பட்டது என்பதையும் எடுத்துக் காட்டுக.

22. சிப்பாய்க் கலகம்

(கி. பி. 1857)

சிப்பாய்க் கலகம்:

ஆங்கில அதிகாரத்தின் கீழ் வேலை பார்த்து வந்த இந்திய வீரர்களுக்குச் **சிப்பாய்கள்** எனப் பெயர். அவர்களில் பெரும்பாலோரும், ஆங்கிலேயரிடத்தில் வெறுப்புக் கொண்ட ஏனையோரும் சேர்ந்து ஆங்கிலேய அதிகாரம் ஒடுங்குவதற்காகச் செய்த கலகத்திற்குச் **சிப்பாய்க் கலகம்** எனப் பெயர் வந்தது. அக் கலகம் முக்கியமாக வட இந்தியாவில் லார்ட் கானிங் கவர்னர் ஜனரலா யிருக்கும்பொழுது கி. பி. 1857-ல் நிகழ்ந்தது.

1. காரணங்கள்:

சிப்பாய்க் கலகத்திற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். (1) டல்ஹௌஸியினுடைய காலத்தில் இந்திய **வார்சுரிமைக் கொள்கை**யைப் போக்கி அவர் அநேக இடங்களைக் கைக்கொண்டா ரெனப் படித்தோம். அவ்விடங்கள் வட இந்தியாவிலேயே பெரும்பாலும் அமையப் பெற்றிருந்ததால் வட இந்தியர்களுக்கு வெறுப்பு உண்டாயிற்றெனவும் கற்றோம். அவர்கள் ஆங்கில அதிகாரத்தைப் போக்கச் சமயம் எப்பொழுது வாய்க்குமெனக் காத்திருந்தார்கள். (2) இந்தியச் சிப்பாய்களுக்குச் சில நாட்களாகவே ஓர் மனத் தாங்கல் இருந்துகொண்டிருந்தது. அதற்குக் காரணம் ஆங்கில வீரர்களைக் காட்டிலும் அதிக வேலை செய்தும்கூட இவர்கள் போதிய சம்பளத்தையும், உரித்தான சௌகரியங்களையும் பெறவில்லை. ராணுவ ஆட்சியின் முறையும் அவர்கள் மனத்தைப் புண்படுத்தியது. (3) மேலும் இந்திய வீரர்களுக்கு

அச் சமயம் வழங்கப்பட்ட தோட்டாக்கள் பன்றிக் கொழுப்பையும், பசுக் கொழுப்பையும் கொண்டிருந்தன வென ஓர் வதந்தி கிளம்பியது. மதத்தினிடை அதிகப் பற்று கொண்டிருந்த ஹிந்துக்களுக்கும், மகம்மதியர்களுக்கும் இச் செய்தி கோபத்தையும், சந்தேகத்தையும் கிளப்பியது. தங்களுடைய ஜாதி, மத வேற்றுமைகளைப் போக்கவே ஆங்கிலேயர் அவ்வண்ணம் செய்யத் தலைப்பட்டன ரென அவர்கள் எண்ணினார்கள். (4) அதற் கேற்றாற் போல் டல்ஹௌஸியின் காலத்தில் தோன்றிய ரயில் வண்டிகள் எல்லா ஜாதியினரையும் சேர்ந்தாற் போல் பிரயாணம் செல்லச் செய்தது. (5) பின்னும் ஆங்கிலேயப் பாதிரிமார்களும் அக் காலத்தில் கிறிஸ்தவ மதத்தைச் சிற்சில இடங்களில் பரப்ப ஆரம்பித்தார்கள். மேற்கூறிய காரணங்க ளெல்லாம் ஒன்று கூடி ஒரு பெருங் கலகத்தைக் கிளப்பின.

2. நிகழ்ச்சிகள்:

i. கலகம் பரவிய இடங்கள்:

முதல் முதல் கலகம் பரக்பூர் என்ற இடத்தில் ஆரம்பித்தது. பிறகு அது மீரத்திற்குப் பரவியது. இவ் விரு இடங்களிலும் கலகக்காரர்கள் சிறைகளைத் திறந்து விட்டு, ஆட்களைச் சேர்த்துக்கொண்டு ஜயமடையவே, அவர்கள் அடுத்தாற்போல் டில்லி, கான்பூர், லக்னௌ, மத்திய இந்தியா முதலான இடங்களிலும் கலகத்தைப் பரப்பினர்.

ii. கலகத்தில் சம்பந்தப்பட்ட முக்கிய இந்தியர்கள்:

இக் கலகத்தை வேரூன்றச் செய்தவர்கள் முக்கியமாக 14 இந்தியர்க ளாவார்கள். உபகாரச் சம்பளத்தை யிழந்த நானா ஸாகிபும், அவரது சேனாதிபதியான டாண்டியா டோபியும், கலகத்தின் மத்தியில் கான்பூரிலுள்ள ஆங்கிலப் பெண்

களையும், ஆண்களையும, சிசுக்களையும் கணக்கின்றி கொலை செய்தார்கள். அதனால் ஆங்கிலேயரால் எதிர்க்கப்படவே அவர்கள் ஜான்ஸிராணியுடன் போய்ச் சேர்ந்துகொண்டனர். இக் கலகம் அடுத்தபடியாய் டில்லியில் பரவியபொழுது அங்கிருந்த பகதூர்ஷா அவரது குமாரர்களுடன் கலகத்திற்குத் தலைமை வகிக்கலானார்.

i கலகத்தை அடக்கிய தளகர்த்தர்கள்:

கலகம் ஓர் சமயம் அடக்க முடியாததுபோல் தோன்றியது. ஆங்கில வீரர்களைக் காட்டிலும் சுமார் 5 பங்கு அதிகமாயிருந்த இந்தியச் சிப்பாய்கள் அனைவரும் ஒன்று கூடிவிட்டனர். பஞ்சாபிலும், வடமேற்கு மாகாணத்திலுமே கலகம் உண்டாகவில்லை. அச்சமயம் கலகத்தை அடக்கப் பெரிதும் பாடுபட்ட தளகர்த்தர்கள் ஹாவ்லக் என்பவரும், நீல் என்பவருமாவர். பிறகு ஆங்காங்கு கலகங்களை அடக்க காம்பேல், லாரன்ஸ், நிக்கல்ஸன், ஸர் ஹீயூரோஸ் என்ற தளகர்த்தர்களும் ஊன்றி உதவினர். ஆகவே கலகம் ஒடுங்கியது.

3. கலகத்தினால் உண்டான விளைவு:

(1) ஆங்கிலேயர்களில் ஆயிரக்கணக்கான ஆண்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும், வயோதிகரும் மாண்டனர். அமைதியென்பது முழுதும் அற்று, வட இந்தியாவில் எங்கும் ஒரே குழப்பமாயிருந்தது. (2) கலகம் முடிந்ததுமே கலகத்திற் சம்பந்தப்பட்டவர்கள் கொடும் தண்டனைக்குள்ளாயினர். (3) ஆயுதச் சட்டம் ஒன்று ஏற்பட்டு இந்தியர்கள் அனைவரும் போர் ஆயுதங்களை ஆங்கில அரசாங்கத்தாரின் அனுமதியின்றி உபயோகிக்கக் கூடாதெனத் திட்டம் செய்யப்பட்டது. (4) தண்டனையினின்று தப்பிய நானா சாகிப் ஆங்கிலேயர்களின் கைகளிற்சிக்காமல் எங்கேயோ ஓடி மறைந்

தார். ஜான்ஸி ராணி சண்டையில் மடிந்தாள். டாண்டியா டோபி மாண தண்டனைக்குள்ளானர். பகதூர் ஷாவின் குமாரர்கள் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். (5) பகதூர் ஷா ரங்கூனுக்கு அனுப்பப்பட்டார்.

4. **சிப்பாய்களின் தோல்விக்குக் காரணம் :**

(1) சிப்பாய்களுக்குள் ஒற்றுமையும், ஒன்றுபட்ட முன் ஏற்பாடும் இல்லை. (2) நல்ல தலைவர்களும் காணப்பெறவில்லை. (3) மேலும் பொது மக்கள் இக்கலகத்திற்குச் சகாயம் செய்ய விரும்பவில்லை. ஏனெனில் வீரர்களுக்கு சர்வாதிகாரம் ஏற்படுமாயின், அது கொடுங்கோல் ஆட்சியிலேயே முடியும். (4) கடைசியாக இந்தியாவில் ஒரு பாகத்திலேயே இக்கலகம் எழுந்தது. ஆகவே பொது ஆதரவு ஏற்படவில்லை.

வினாக்கள்

1. சிப்பாய்க் கலகம் தோன்ற மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.
2. இந்தியச் சிப்பாய்களுக்கு எந்த இந்தியத் தலைவர்களின் உதவி கிடைத்தது ?
3. கலகம் ஏன் தோல்வியில் முடிந்தது ?
4. கலகம் எங்கெங்கு பரவியது ? அதை அடக்கிய மூன்று தளகர்த்தர்களின் பெயர்களை வரைக.

23. விக்டோரியா மஹாராணியின் சாஸனம்

(கி. பி. 1858)

1. கம்பெனி ஆட்சியின் முடிவு.

a. புதிய சட்டம் ஏற்படக் காரணம் :

சிப்பாய்க் கலகத்தில் பல ஆங்கிலேயர் மாண்டனர் என்றதைக் கேட்ட இங்கிலாந்திலிருந்த ஆங்கிலேயர்களுக்கு அடங்காக் கோபம் எழுந்தது. கம்பெனியின் ஆட்சி பயனற்றதென்றும், கவனமற்றதென்றும், அவர்கள் ஆரவாரித்தனர். ஆகவே ஆங்கிலப் பார்லிமெண்ட் இந்தியா கவர்ன்மேண்ட் ஆக்ட் என்ற ஒரு புதுச் சட்டத்தை 1858-ஆம் ஆகஸ்டுமீ 2உ யன்று பிறப்பித்தது. அதன் நிமித்தம் இந்தியாவில் கம்பெனி ஆட்சி ஒழிந்து ஆங்கில அரசாங்கத்தார் இந்திய ஆட்சியை ஏற்கத் தலைப்பட்டனர்.

b. இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டின் திட்டங்கள் :

(1) மேற் கூறப்பட்டுள்ள சட்டத்தின்படி கம்பெனியின் ஆட்சி ஒழிந்து, ஆங்கில ஆட்சி ஆரம்பமாயிற்று. (2) இங்கிலாந்தில் ஒரு காரியதரிசி நியமிக்கப்பட்டு 15 மெம்பர்கள் அடங்கிய ஓர் ஆலோசனை சபையும், அவருக்கு யோசனை கூற ஏற்படுத்தப்பட்டது. அச்சபைக்குத்தான் இந்தியா சபை யெனப் பெயர். (3) இச்சபையின் அதிகாரத்திற்குட்பட்ட வைசிராயும், மாகாண கவர்னர்களும், ஆங்கில அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்டனர். ஆட்சி முறையிலும், மற்ற துறைகளிலும் மாறுதல்கள் உண்டாகவில்லை.

2. விக்டோரியா மஹாராணியின் அறிக்கை :

a. சாஸனமளிக்கக் காரணம் :

1858-ஆம் நவம்பர்மீ 1உ விக்டோரியா மஹாராணியார் இந்திய ராஜ்ய பாரத்தை வகித்தார். அச்சமயத்தில்

அவர் தமது இந்தியக் குடிகளுக்கு அறியதோர் அறிக்கையை வெளியிட்டார். அது பரந்த நோக்கங்களைப் பெற்றும், துணிந்த முடிவுகளைக் கொண்டும், கனிந்த அன்பை அடைந்த துமான ஓர் முக்கிய சாஸனமாக உபயோகப்படுகிறது.

விக்டோரியா மஹாராணியார்

இந்தியமக்களின் அன்பையும், ஆதரவையும் பெறுவதற்கே அச்சாஸனம் அளிக்கப்பட்டது.

b. விளம்பரத்தின் முக்கிய அம்சங்கள் :

(1) இந்தியர்களின் மனக் கொதிப்பைப் போக்க சிப்பாய் கலகத்தில் சம்பந்தப்பட்டு உயிருடனிருந்தவர்கள் மன்

னிக்கப் பட்டார்கள். (2) வார்சுரிமை மீண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (3) ஆங்கில ராஜ்யத்தைப் பின்னும் பெருக்குவதில்லையென உறுதியளிக்கப் பட்டது. (4) இந்திய குடிகளிடம் ராணியார் அன்பு கொண்டிருப்பதாயும், அரசியல் விஷயங்களில் அவர்களுடைய உதவியை யெதிர்பார்ப்பதாயும் அறிவிக்கப்பட்டன. (5) மத விஷயங்களில் ஆங்கில அரசாங்கத்தார் தலையிட மாட்டார்கள். (6) ஜாதிமத வேறுபாடின்றிக் கூடுமானவரை இந்தியர்களுக்கு ஆங்கில அரசாங்கத்தில் உத்தியோகங்கள் தரப்படும். (7) விவசாயம், கைத்தொழில், வாணிபம் முதலியவை ராணியாரின் கவனத்தைப் பெறும். (8) சுதேச மன்னர்களின் ஆட்சியில் தலையிடுவதில்லையெனவும், அம்மன்னர்கள் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்து ஆட்சி புரியலாமெனவும் அனுமதிக்கப்பெற்றது.

ஆங்கில ஆட்சியினிடம் அச்சமயம் அவநம்பிக்கைக் கொண்ட பலருக்கு விக்டோரியா ராணியாரின் விளம்பரம் நம்பிக்கையைப் பிறக்கச் செய்தது.

வினாக்கள்

1. கம்பெனி ஆட்சி ஏன் முடிவடைந்தது ?
2. விக்டோரியா மஹாராணியாரின் அறிக்கை எவ்விதம் விசேஷம் பொருந்தியது ?

24. இந்திய வைசிராய்களும் அவர்களுடைய செய்கைகளும் (கானிங் பிரபு முதல் லின்லித்கோ பிரபு வரை)

இந்திய வைசிராய்கள்

கானிங் பிரபு	1858—1862
எல்ஜின் பிரபு	1862—1863
சர் ஜான் லாரன்ஸ்	1864—1869
மேயோ பிரபு	1869—1872
நார்த்புரூக் பிரபு	1872—1876
லிட்டன் பிரபு	1876—1880
ரிப்பன் பிரபு	1880—1884
டப்ரின் பிரபு	1884—1888
லான்ஸ்டௌன் பிரபு	1888—1894
எல்ஜின் பிரபு	1894—1899
கர்ஸன் பிரபு	1899—1905
மிண்டோ பிரபு	1905—1910
ஹார்டிஞ்ச் பிரபு	1910—1916
செம்ஸ்போர்ட் பிரபு	1916—1921
ரீடிங் பிரபு	1921—1926
இர்வின் பிரபு	1926—1931
வில்லிங்டன் பிரபு	1931—1936
லின்லித்கோ பிரபு	1936—

நமக்குத் தற்பொழுது ராஜப் பிரதிநிதியாய் இருந்து வரும் **லின்லித்கோ** பிரபு உட்படப் பிரிட்டிஷ் ராஜ்யத்தை 19 வைசிராய்கள் ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் புரிந்த செயல்களைத் தனித்தனியே கற்ப தென்றால் விஷயங்கள் செவ்வனே மனத்தில் பதியாதாகை

யால், அவர்களுடைய முக்கிய செயல்களைச் சில தலைப்புகளின் கீழ் சௌகரியத்திற்காகத் தொகுப்போம்.

I. எல்லைப் பாதுகாப்பு.

A. முதல் ஆப்கானிய யுத்தத்திற்குப் பின் கி. பி. 1842—1876 வரை எல்லைப்புற சரிதை:

ஆங்கிலேயர்களுக்கு எல்லைப்புறப் பாதுகாப்பு மிக்க அவசியமான முயற்சியாகும் எனப் படித்தோம். இனி ஆப்கானிய யுத்தத்திற்குப் பின் லிட்டன் பிரபு காலம் வரை வடமேற்கு எல்லையில் யாது நிகழ்ந்ததென்பதைச் சுருக்கமாக அறிவோம்.

1. எல்ஜின் பிரபு:

இரண்டாவது வைசிராயான எல்ஜின் பிரபு முதல் ஆப்கானிய யுத்தத்திற்கு 20 வருஷத்திற்குப் பின் பெஷாவருக்கு மேற்கிலுள்ள மலை நாட்டார்களை அடக்கி அவர்களை ஆங்கில சிநேகத்தை யேற்றுக் கொள்ளச் செய்தார். பின்பு பூடான் நாட்டிற்கும் தூதனுப்பினர். ஆனால் தூதுவர்கள் திரும்பி வரும் முன் ஸர் ஜான் லாரன்ஸ் வைசிராயாக நியமிக்கப்பட்டார்.

2. ஸர் ஜான் லாரன்ஸ்

i. பூடானை எதிர்த்தல்:

அச்சமயம் பூடானுக்குச் சென்ற தூதர்கள் அவமானப் பட்டுத் திரும்பி வந்ததை யறியவே லாரன்ஸ் பூடானுக்கெதிரே போர் தொடுத்துப் பூடானுக்குச் சொந்தமான சில கணவாய்களைக் கைப்பற்றினர்.

ii. ஆப்கானியச் சம்பவங்கள்:

இது நிற்க, லாரன்ஸ் காலத்திலேயே, 1863-ல், ஆப்கானிய அமீரான தோஸ்து மஹம்மது இறக்கவே, அவரு

டைய மைந்தர்களான முறையே அப்ஸல்கான், அஸீப்கான் ஷேர்அலி என்றவர்கள் அமீர் பதவிக்குப் போட்டி போட்டனர். அப்பொழுது ஷேர்அலி ஆங்கிலேயரை உதவி செய்ய வேண்டினர். ஆனால் லாரன்ஸ் பிரபு ஆப்கானிய விஷயங்களில் தலையிட விரும்பாமல் உதவி செய்ய மறுத்தார். ஆயினும் ஷேர் அலி சொந்த முயற்சியினலேயே அமீர் ஆனபின் லாரன்ஸ் அவரை அமீர் என ஏற்றார். அதற்குக் காரணம் ஷேர் அலி ருஷ்யர்களுடன் சேராமல் இருக்க வேண்டுமென்ற முன் எச்சரிக்கையே யாகும்.

3. மேயோ :

லாரன்ஸுக்குப் பின் வந்த மேயோ அமீரை இந்தியாவிற்கு வரவழைத்து அம்பாலா என்ற இடத்தில் ஓர் உடன்பாட்டிற்கு இணங்க வேண்டினர். அதற்கு ஷேர்அலி தமது விரோதிகளுக்கு எதிரே தமக்கு உதவுவதாயிருந்தால் உடன்படிக்கைக்குக் கட்டுப்படுவதாகத் தெரிவித்தார். அதற்கிணங்காததால் மேயோவின் முயற்சி வீணாகியது. எப்பொழுது ஆங்கில உதவி மறுக்கப்பட்டதோ உடனே அமீர் ருஷ்யர்களுக்குத் தூது அனுப்பினர். அதைக் கண்ட மேயோ மற்ற எல்லைப்புற நாடுகளையாவது பலப்படுத்திக் கொள்ளலாம் எனக் கருதி யார்கண்ட், நேபாளம், பர்மா முதலிய தேசங்களுடன் சிநேக உடன்பாடுகள் செய்து முடித்தார்.

B. 2-வது ஆப்கானிய யுத்தம் (கி. பி. 1878—1879)

i. காரணங்கள் :

லார்டு லிட்டன் கி. பி. 1876-ல் வைசிராயாக நியமிக்கப்பட்டார். அவருடைய காலத்தில் ருஷ்யர்கள் மத்திய ஆசியாவைக் கடந்து, ஆப்கானிஸ்தானம் வரை தங்களது ராஜ்யத்தைப் பரப்பிக் கொண்டு வந்தனர். அதைக் கண்ட லிட்டன்

பிரபு ஆங்கிலேயர் அசிரத்தையாய் இருந்தால் ருஷ்யர்கள், இந்தியாவையும் தாக்கலாமெனக் கருதினர். அதற்காகத் தமக்கு ஆப்கனிஸ்தானத்திற்கு வழியாக்கிக் கொள்ள, பலூஜிஸ்தானத்திற்குச் சொந்தமான க்வேட்டாவைப் பிடித்துக் கொண்டார். பலூஜிஸ்தானத்தையும் சிநேக உடன்பாட்டிற்கு இணங்கச் செய்தார். பின்பு ஆப்கனிஸ்தான அமீருக்கும் ஓர் தூது அனுப்பி ஆங்கில ஸ்தானிகரை ஏற்றுக் கொள்ளுமாறு தகவல் அனுப்பினர். ஷேர் அலி முன்னமேயே ஆங்கிலேயர் தமக்குதவ மறுத்ததற்காகக் கோபங் கொண்டு, ஆங்கிலத் தூதுவரை ஏற்க இணங்கவில்லை. ஆனல் அவர் ருஷ்யர்களுடன் கி. பி. 1878-ல் வெளிப்படையாகச் சிநேகம் செய்து அவர்களுடைய தூதரையும் ஏற்றுக் கொண்டார். அதை அறிந்த வைசிராய் சண்டையைத் தொடங்க வேண்டியதாயிற்று.

ii. நிகழ்ச்சிகள் :

ஓர் வலுத்த ஆங்கிலச் சேனை கி. பி. 1878-ல் கைபர், போலன் கணவாய்களின் வழியாகக் காபூலை அடைந்தது. அப்படையை யெதிர்க்க மாட்டாமல் ஷேர்அலி ஓட்டம் பிடித்தார். அதற்குமேல் ஜலாலா பாத், காண்டஹார், காபூல் முதலியவைகள் பிடிபட்டன. அதற்குள்ளாக ஷேர்அலி இறந்தார். ஆகவே அவருடைய மைந்தரான யாகூப்கான் கி. பி. 1879-ல் ஆங்கில உதவியைக் கொண்டு அமீரானர்.

iii. கண்டமக் உடன்பாடு கி. பி. 1879.

உடனே யாகூப்கான் ஆங்கிலேயரிடம் ஓர் உடன்பாட்டிற்குடன் பட்டார். (1) அதன்படி ஆங்கிலேயர்களுக்குக் கைபர் கணவாய், குர்ரம் பள்ளத்தாக்கு முதலியவை தரப்பட்டன. (2) காபூலில் ஓர் ஆங்கில ஸ்தானிகர் தம்

படையுடன் இருப்பதென்பது சம்மதிக்கப்பட்டது. (3) அமீர் ஆங்கிலேயரைத் தவிர, வேறு ஐரோப்பியர்களுடன் சிநேக உடன்பாட்டிற்கு கட்டுப்படக் கூடாதெனவும் திட்டம் செய்யப்பட்டது.

C. மூன்றவது ஆப்கானிய யுத்தம் :

i. காரணம் :

கண்டமக் என்ற இடத்தில் முடித்த உடன்படிக்கை நடந்து சில மாதங்களுக்குள்ளாகவே, ஆப்கனிஸ்தானத்தில் ஸதானிகராயிருந்த லூயிகாவக்னரி என்பவரும், அவரைச் சேர்ந்தவர்களும் கொலை செய்யப்பட்டார்கள். உடனே மூன்ருவது ஆப்கானிய யுத்தம் தொடங்கியது.

ii. நிகழ்ச்சி :

ஆங்கில வெற்றிகள் :

லார்டு லிட்டன் உடனே ராபர்ட்ஸ் என்ற தளகர்த்தரை ஓர் சேனையுடன் ஆப்கனிஸ்தானத்திற்கு அனுப்பினர். அவர் காபூலை அடைந்ததும், யாகூப்கான் சண்டை செய்யத் திறனற்றுச் சரண் புகுந்தார். ராபர்ட்ஸ் அவரைக் கைதியாக்கி இந்தியாவிற்கு அனுப்பினர். பின்பு|காண்டஹார் என்னுமிடத்தில் அவருடைய சகோதரரான அயூப்கான் ஆங்கிலேயரை எதிர்த்தார். ஆனல் தோல்வியுற்ருர்.

iii. உடன்படிக்கை

இதன்நடுவே, லார்டு லிட்டன் இங்கிலாந்திற்குச் சென்ருர். அவருடைய ஸ்தானத்திற்கு லார்டு ரிப்பன் கி. பி. 1880-ல் வைசிராயாக வந்தார். அவர் இந்தியாவை அடைந்தவுடன் அப்சல்கானின் மைந்தனுன, அதாவது தோஸ்து மகம்மதுவின் மூத்த பேரரான அப்துல் ரஹிமான் என்பவருடன் ஓர்

உடன்படிக்கை செய்து முடித்தார். (1) அதன்படி அப்துல் ரஹிமான் அமீர் ஆக்கப் பட்டார். (2) அவர் ருஷ்யர்களின் சிநேகத்தை ஏற்கக் கூடாது. (3) மேலும் அமீர் தமது மேற்கெல்லையைக் காக்க ஆங்கிலேயர் அவருக்கு 25 லக்ஷம் ரூபாய் வருஷந்தோறும் சேனைச் செலவிற்காகத் தரவேண்டும். (4) அமீருடைய விரோதிகள் அவரை எதிர்த்தால் ஆங்கிலேயர் அவருக்குத் தக்கசேனையுடன் உதவ வேண்டும்.

D. நன்காவது ஆப்கானிய யுத்தம் வரை நடந்த சம்பவங்கள் : (கி. பி. 1880—1919) :

i. டப்ரின் 1885-ல் ராஜப் பிரதிநிதியாக வந்தார். அச் சமயம் ஆப்கானியருக்குச் சொந்தமான மேற்கு எல்லைப்புற நாடு ஒன்று ருஷ்யர்களால் கைப்பற்றப் பட்டது. முன்பே அப்துல் ரஹிமானுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்ததால் அப்பொழுது ஆங்கிலேயர் ருஷ்யர்களுடன் சண்டையைத் தொடங்க நேரிடும் போலத் தோன்றியது. ஆனால் ஆப்கன் அமீர் அப்பிரதேசத்தை ருஷ்பர்களுக்குக் கொடுத்துவிட, அந்நெருக்கடி நீங்கிற்று.

ii. லார்டு லான்ஸ்டௌன் :

கி. பி. 1888-ல் லார்டு லான்ஸ்டௌன் வைசிராயாக நியமிக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தார். அவருடைய காலத்தில் வடமேற்கு எல்லையின் தொல்லை பின்னும் தொடங்கியது. ஆப்கனிய ஸ்தானத்திற்கும்,சிந்து நதிக்குமிடையே மகம்மதிய மலைநாட்டினர் சிலர் வசித்து வருகின்றனர். அச் சமயம் அவர்கள் ஆங்கிலேயரைத் தாக்கினர். லார்டு லான்ஸ்டௌன் உடனே அவர்களின் எதிர்ப்பைப் போக்கி, அப் பிரதேசத்தை இரு பிரிவுகளாக்கிக் கீழ்ப்பிரிவை தமக்கும், மேற்

பிரிவை அமீருக்கும் கொடுப்பதென ஏற்பாடு செய்தார். அதற்கு அமீர் ஆரம்பத்தில் இணங்கவில்லையாயினும், பின்பு கட்டுப்பட்டார். அமீர் மேற்சொன்ன ஏற்பாட்டிற்கு இணங்கியதற்காக இதுவரை கொடுத்து வந்த தொகையை ஆங்கிலேயர் அதிகமாக்கினார்கள்.

iii. லார்டு கர்ஸன் :

லார்டு கர்ஸன் (கி. பி. 1899-1905) வரையிலும் இந்தியாவிற்கு வைசிராயாக இருந்தார். அவருடைய காலத்தில் மகம்மதிய மலைநாட்டினர் பின்னும் ஆங்கிலேயருக்குக் கவலையை உண்டுபண்ணி வந்தனர். அதைக் கண்ட கர்ஸன் வடமேற்கு எல்லையில் தகுந்ததோர் துரைத்தனத்தை ஸ்தாபிக்காவிடில், அக்கஷ்டம் நீங்காது என எண்ணித் தமக்குக் கட்டுப்பட்டிருந்த எல்லைப் பிரதேசத்தை ஓர் மாகாணமாக்கி, அங்கு ஓர் தகுந்த உத்தியோகஸ்தரையும் நியமித்தார். அதுவே இப்பொழுது வடமேற்கு எல்லைப்புற மாகாணம் எனக் குறிக்கப்படுகிறது. பின்னர் கர்ஸன் பலுஜிஸ்தானத்தையும், பாரசீகத்தையும், திபேத்தையும் தம்முடன் உடன்பாட்டிற்கு இணங்கச் செய்தார்.

E. நான்காவது ஆப்கானிய யுத்தம்:

. காரணம்:

அப்துல் ரஹிமான் கி. பி. 1909-ல் இறந்தார். அதற்குப்பின் அவரது மைந்தர் ஹபிபுல்லா அமீர் ஆனார். அவரும் தம் தகப்பனாரைப்போல் ஆங்கிலேயருடன் சிநேகம் பாராட்டினார். அவர் கி. பி. 1919-ல் கொலை செய்யப்பட்டார். அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் அவர் மைந்தராகிய அமனுல்லா ஆவர். இந்தியாவிலும், ஜெர்மனியிலும்

அச்சமயம் ஆங்கிலேயர் கஷ்டத்தை யனுபவித்ததைக் கண்டு, அவர் அவர்களுக்கெதிரே படையெடுத்தார்.

ii. நிகழ்ச்சி :

ஆனால் அவர் தொடுத்த யுத்தம் வலுக்கவில்லை. சில நாட்களில் அமீரின் சேனை தோல்வியுற்றது. அமீரும் ஓர் உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டார். அதன் பிரகாரம் ஆப் கனிஸ்தானத்தில் ஸ்தானிகரை வைப்பதில்லை யென்றும், ஆப்கனியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த தொகை நிறுத்தப் படலாமென்றும் தீர்மானமாயிற்று. அமனுல்லா ஆங்கிலேய ரின் சிநேகத்தை ஏற்றுக்கொண்டார்.

F. நான்காவது ஆப்கானிய யுத்தத்திற்குப்பின்:

கொஞ்ச காலத்திற்கெல்லாம் அமனுல்லா ஐரோப்பா சென்றார். தன் நாடு திரும்பியதும் துருக்கியில், கமால் பாஷா வால் புகுத்தப்பட்டிருந்த புதிய ஐரோப்பிய நாகரீகத்தைத் தம் நாட்டிலும் பரப்ப முயன்றார். அப்புதிய நாகரீகம் குடிகளுக்கு வெறுப்பை யுண்டாக்கியது. ஆகவே அவர் நாட்டைவிட்டு ஓடினார். அவருடைய சேனாதிபதி நாதர் ஷா என்பவர் அமீர் ஆனார். அவர் 1933-ம் வருஷம் கொலை யுண்டார். அவருடைய மைந்தரே இப்பொழுது அமீராக ஆண்டுவருகிறார். அவர் ஆங்கிலேயரின் நண்பர் ஆவர்.

மூன்றாவது பர்மா யுத்தம் (கி. பி. 1884-1885.)

i. காரணம் :

வட பர்மாவில் தீபா என்ற ஒரு பர்மா அரசர் ஆண்டு வந்தார். அவர் வட பர்மா நாடுகளில் வேலை செய்துவந்த ஆங்கில வர்த்தகர்களை வாட்டி வருத்தியதுடன், அங்கு வியா பாரம் செய்த ஆங்கில வர்த்தகக் கம்பெனிக்கும் அபராதம்

விதித்தார். அச்செய்கை டப்ரின் பிரபுவின் காலத்தில் நடைபெற்றது. அவர் அதைக்கேட்டு கோபித்து பர்மா மன்னருக்கெதிரே ஓர் சேனையை அனுப்பினர்.

ii. நிகழ்ச்சி :

ஆங்கிலச் சேனை தீபாவின் தலைநகராகிய மாண்டலே என்ற இடத்தை யடைந்தது. பர்மா மன்னர் சண்டைசெய்ய இயலாது தோற்றோடினர். ஆகவே வெற்றி எதிரிகளுக்குக் கிடைத்தது.

iii. உடன்படிக்கை : (கி. பி. 1865)

உடனே உடன்பாடு செய்து முடிக்கப்பட்டது. அதன்படி வட பர்மா ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிற்று. தீபாவிற்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது. இச்சண்டைக்குப்பின் வடகிழக்கிலிருந்து ஒருவித உபத்திரவமும் ஏற்படவில்லை. ஆனால் தற்பொழுது பர்மா ஓர் தனி நாடாக ஆக்கப்பட்டு, ஒரு தனி கவர்ன்மெண்டின் கீழும் இருந்து வருகிறது.

வினாக்கள்

1. மேற்குறிக்கப்பட்டுள்ள ஆப்கானிய யுத்தங்களில் ஏதாவது ஒன்றிற்குக் காரணம் கூறுக.
2. மூன்றாவது பர்மா யுத்தத்தில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த லாபம் என்ன?
3. தற்பொழுது ஆப்கானிஸ்தானத்தின் ராஜீய நிலையென்ன?

II. பஞ்சமும், கொள்ளை நோயும்.

1. ஸர் ஜான் லாரேன்ஸ் :

ஸர் ஜான் லாரேன்ஸினது காலத்தில் ஒரிஸாவில் கி. பி. 1866-ல் ஒரு கொடிய பஞ்சமுண்டாயிற்று. அச்சமயம் ஜனங்கள் வருந்தியது கணக்கில்லை. உயிர்ச்சேதமும் வெகு அதிகம். என்ன பிரயத்தனங்கள் செய்தும் ஜனங்களின் துயரம் நீங்கவில்லை.

2. லார்டு லிட்டன் :

லார்டு லிட்டன் காலத்திலும், தாது வருஷத்தில் என்றும் மறக்கமுடியாத மிகக் கொடூரமான பஞ்சமொன்று தோன்றியது. அது மைசூர், தக்ஷிணம், சென்னை இராஜதானி முதலிய இடங்களில் பரவியது. அதனிடையே தோத்து நோயும் தலையெடுக்க ஆரம்பித்தது. அப் பஞ்சத்தில் வருந்தி மாண்டவர்கள் சுமார் 50 லக்ஷம் பேர்கள் இருக்கலாம். ராஜாங்கத்தார் ஒரு கோடி ரூபாய் வரையிலும் செலவு செய்து தக்க முயற்சி யெடுத்துக்கொண்டனர். ஆபினும் அவர்களுடைய ஏற்பாடுகள் ஒன்றும் பயன்படவில்லை.

3. லார்டு எல்ஜின். II

இரண்டாவது எல்ஜினது காலத்தில் பம்பாயில் பிளேக் நோய் ஒன்று கிளம்பி ஜனங்களை ஆயிரக்கணக்கில் மாளச் செய்தது.

4. பஞ்சங்கள் தோன்றக் காரணம் :

மேற்கூறப்பட்டுள்ள பஞ்சங்கள் தோன்ற மூன்று முக்கிய காரணங்களைக் குறிப்பிடலாம். (1) அக்காலத்தில் போக்கு வரவு சாதனங்கள் சரியாயில்லை. ஆகவே, பஞ்சமில்லாத இடத்திலிருந்து பஞ்சத்தால் வருந்திய இடத்திற்கு சாமான்

களை எடுத்துச் செல்வது கஷ்டமாயிருந்தது. (2) சரியான நீர்ப்பாசனம் இல்லாததால் விவசாயம் சரியாக நடைபெற வில்லை. ஆனதுபற்றி விளைச்சல் குறைவுபட்டது. ஆண்டு கள் செல்லச்செல்ல எந்த நாட்டிலும் ஜனசங்கியை அதிக மாய்க் கொண்டேவரும். அதற்காக அரசாங்கத்தார் செய்ய வேண்டியது யாதெனில் நாட்டில் தரிசாய் இருக்கும் நிலங் களை விவசாய நிலங்களாக மாற்றவேண்டும். அதுவும் முன் யோசனையின்பேரில் செய்யப்படவில்லை.

ஆனால் தற்காலத்தில் இக் குறைகள் அநேகமாக நீக்கப் பட்டுள்ளன.

வினாக்கள்

1. லார்டு லிட்டன் காலத்திலாவது, ஸர் ஜான் லாரென்ஸ் காலத்தி லாவது உண்டான பஞ்சத்தை வருணிக்க.
2. மேற்கூறப்பட்டுள்ள பஞ்சங்கள் உண்டாகக் காரணம் என்ன ?

III. அரச வம்சத்தினர்களின் வருகையும், தர்பார்களும், கொண்டாட்டங்களும்.

1. அரச வம்சத்தினரின் வருகை :

லார்ட் நார்த்புரூக் காலத்தில் எட்வர்ட் VII இளவரச ராய் இருக்கும்பொழுது இந்தியாவுக்கு வந்தார். அவர் இந் திய மக்களின் அன்பைப் பெரிதும் பெற்றார். லார்ட் மின் டோவின் காலத்தில் ஜார்ஜ் இளவரசர் நம் நாட்டிற்கு வந்தார். அவர் இந்தியரின் விசுவாசத்தைக் கண்டு வியந்தார். மேலும் அவர் மதராஸுக்கு வந்தபொழுது, மதராஸின் ஒரு பாக மாகிய கறுப்புப் பட்டணம் என்பது ஜார்ஜ் பட்டணம் எனப் பெயரிடப்பட்டது. லார்ட் ரீடிங் காலத்தில் ஐந்தாவது ஜார்

ஜின் குமாரரான எட்வர்ட் இளவரசர் இந்தியாவின் நிலையை அறிய வந்தார். அச் சமயம் சுய ராஜ்யக் கக்ஷியினர் ஆங்கில ஆட்சியினிடம் தங்களுக்கு உண்டா யிருந்த அதிருப்தியைத் தெரிவிக்கக் கறுப்புக் கொடிகளை ஏந்தி நின்றார்கள். ஆனால் எட்வர்ட் இளவரசர் இந்தியரிடம் அனுதாபத்தைக் கொண்டாரே யொழிய கோபத்தை யடையவில்லை.

2. தர்பார்கள் :

லார்ட் கர்ஸனுடைய காலத்தில் ஏழாவது எட்வர்ட் இந்தியாவில் முடி சூட்டிக் கொள்வதாக இருந்தது. ஆனால் சில அசந்தர்ப்பங்களால் அவர் வர முடியாமற் போகவே, 1903-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி அவருடைய பெயரில் டில்லியில் அவருடைய ஸ்தானத்தை அவருடைய இந்தியப் பிரதிநிதியான கர்ஸன் பிரபு வகித்துத் தர்பாரை நடத்தினர்.

ஆனால் லார்ட் ஹார்டிஞ்சினுடைய காலத்தில் ஐந்தாவது ஜார்ஜ் மன்னரும், மேரி ராணியாரும் டில்லியில் 1911-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 11-ம் தேதி யன்று முடி சூட்டிக்கொண்டனர். அவ் வைபவத்தைப் போல் இந்தியாவில் முன்பாவது, பின்பாவது எதுவும் நிகழ்ந்தது கிடையாது. சுதேச மன்னர்களும், மாகாண கவர்னர்களும், சில முக்கியத் தலைவர்களும் டில்லியில் நடந்த தர்பாருக்குச் சென்றனர்.

3. கொண்டாட்டங்கள் :

அரசர்களின் சம்பந்தமாக நடந்த சில கொண்டாட்டங்களும், இங்குக் குறிக்கத் தகுந்தவை யாகும். லார்ட் லிட்டனுடைய காலத்தில் கி. பி. 1887-ல் ஜனவரி மாதம் 1-ம் தேதி யன்று விக்டோரியா மஹாராணியார், இந்தியச் சக்கரவர்த்தினி என்ற பட்டத்தை வகித்ததைப் பெருந் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. லார்ட் டப்ரினுடைய காலத்திலோ

அந்த ராணியாரின் போன் விழாக் கோண்டாட்டம் நம் நாடெங்கும் அதிவிமரிசையாய் கொண்டாடப்பட்டது. 1935-ல் ஐந்தாம் ஜார்ஜின் வெள்ளி விழா மிகுந்த உற்சாகத் துடன் கொண்டாடப்பட்டது.

வினுக்கள்

1. நம் நாட்டினரிடம் அன்பு பாராட்டி வந்த இரண்டு அரச வம்சத் தினரைக் குறிப்பிடுக.
2. 1911-ல் டில்லியில் நடந்த தர்பாரை வருணிக்க.

IV. துரைத்தனச் சீர்திருத்தங்கள்

லார்ட் கானிங்: கி. பி. 1858-ல் புதிய இந்திய ராஜாங்கச் சட்டம் ஏற்பட்டு, லார்ட் கானிங் முதல் வைஸ்ராய் பட்டம் பெற்ருர். ஸிவில், கிரிமினல் விஷயமாக வழக்குகளை விசாரிக் கச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் ஹைகோர்ட்டுகள் நிருமிக்கப் பட்டன.

லார்ட் கர்ஸன்: வங்காளம் பெரிய இராஜதானியாய் இருந்தது. ஆகவே அதைச் சரிவர ஆட்சி புரிய லார்ட் கர் ஸன் அதை இருபிரிவுகளாகப் பிரித்தார். இதற்குச் சுரேந்தர் நாத் பானர்ஜீ என்பவரின் கீழ் வங்காளத்தில் ஒரு பெரிய எதிர்ப்பு உண்டாகியது. மற்ற இடங்களிலும் அதற்கு அனுதா பம் காட்டப்பட்டது. லார்ட் கர்ஸன் பின்னுமோர் சீர் திருத் தம் செய்தார். அதாவது போலீஸ் இலாகாவைப் பலப்படுத் தியதுடன் அதைச் சீர்திருத்தினுர்.

லார்ட் மிண்டோ: லார்ட் கர்ஸனுக்குப் பின் லார்ட் மிண்டோ வைஸிராயாக வந்தார். வங்காளப் பிரிவினைக்காக உண்டான எதிர்ப்பு வலுக்க ஆரம்பித்தது. அப்பொழுது

பத்திரிகைகள் ஸர்க்காரைத் தாக்கி எழுதின வென அவர் அச்சுச் சட்டம் ஒன்றை இயற்றினர். லாலா லஜபதிராயைப் போன்ற சில இந்தியத் தலைவர்களையும் தேசப் பிரஷ்டம் செய்தார்.

லார்ட் ஹார்டிஞ்: லார்ட் ஹார்டிஞ்சினுடைய காலத்தில் டில்லியில் நடந்த தர்பாரின் பொழுது, அரசர் ஒரு அறிக்கையின் மூலம் கர்ஸன் காலத்தும், மிண்டோ காலத்தும் செய்யப்பட்ட சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன வென அறிக்கை விடுத்தார். ஜனங்களின் விசுவாசம் மீண்டும் பெருகத் தலைப்பட்டது.

வினாக்கள்

1. லார்ட் கர்ஸனின் வங்காளச் சீர் திருத்தம் ஏன் கஷ்டத்தை விளைவித்தது?
2. வங்காளப் பிரிவினை எப்பொழுது ஒழிந்தது? ஏன்?

V. ஜன சமூக முன்னேற்றச் சீர் திருத்தங்கள்

லார்ட் மேயோ: லார்ட் மேயோ ஏற்றுமதிச் சரக்கு வரியையும், உள் நாட்டு வரியையும் குறைத்தார். ஆனால் ராஜாங்கச் செலவிற்குப் போதிய பணத்தை அடையவேண்டி, உப்பு வரியையும், வருமான வரியையும் சற்று உயர்த்தினர். லார்ட் மேயோ தான் புதிதாக விவசாய இலாகா என்பதை ஏற்படுத்தினர்.

லார்ட் ரிப்பன்: லார்ட் ரிப்பனுடைய காலத்தில் கல்வி அபிவிருத்தி யடைந்தது. இந்தியப் பத்திரிகைகள் மீது இடப்பட் டிருந்த நிபந்தனைகள் விலக்கப்பட்டன.

லார்ட் கர்ஸன்: லார்ட் கர்ஸன் உப்பு வரியைக் குறைத்தார். சர்வகலாசாலைகள் சம்பந்தமான சில திட்டங்களைச் செய்தார். விவசாய இலாகாவில் சில நன்மையைப் புரிந்தார். புதிய நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டன.

லார்ட் ஹார்டிஞ்ச்: லார்ட் ஹார்டிஞ்ச் பிரபுவின் காலத்தில் பிரதம கல்விக்காக அதிகப் பணம் செலவு செய்யப் பட்டது. அச் சமயம் இந்திய ஊழியச் சங்கத் தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே என்னும் தேச பக்தர் இலவசக் கட்டாயப் பிரதம கல்வியை நாட்டில் பரப்ப வேண்டுமெனச் சர்க்காருடன் மன்றாடினார். அவர் முயன்றது அச் சமயம் வீணே முடிந்ததாயினும், பின்னால் அதற்குப் பலன் ஏற் படாமல் போகவில்லை. கோகலேக்குப் பிறகு, கனம் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் மேற்கூறப்பட்டுள்ள சங்கத்திற்குத் தலைமை வகித்தார்.

லார்ட் இர்வின்: இர்வின் ஏழைகளின் நண்பர் எனக் கூறலாம். அவருக்கு விவசாயத்தினிடத்தும், விவசாயிகளிடத் தும் மிக்க பிரேமையுண்டு. நம் நாட்டின்கண் விவசாயத்தை மேம்படச் செய்யச் சில நூதன முறைகளைக் கையாண்டார்.

லார்ட் லின்லித்கோ: இர்வினைப் போலவே லின்லித் கோவும் பொருளாதார நிலையைப் பண்படுத்துவதில் ஊக்கம் கொண்டவர். இர்வின் விவசாய முறையைச் சீர் திருத்தி னார் என்றால், லின்லித்கோ பிரபு கால்நடைகளின் வாழ்க் கையையும், உபயோகத்தைப் பெரிதும் உயர்த்தினார். இவரே தற்காலத்தில் வைஸிராயாக நம் நாட்டில் ஆண்டு வருகிறார்.

வினாக்கள்

1. குறிப்பு தருக: கோபாலகிருஷ்ண கோகலே.
2. வைஸிராய்களில் யார் யார் விவசாயத்தை ஆதரித்தார்கள்?

VI. தேச முன்னேற்றத்திற்கான சீர்திருத்தங்கள்

நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக முனைந்து பாடுபடும் முயற்சிகள்; வைஸிராய்களின் ஆட்சியில் ஆரம்பமானதால், அக்காலம் மிகவும் முக்கியமானது. 1858-ல் இருந்து, இது வரையிலும் நம் நாட்டில் நம் மக்கள்பால் காணப் பெறும் தேசீய உணர்ச்சி, பல சீர்திருத்தங்களை உண்டாக்கி யுள்ளது. அவற்றைப் பற்றிய கோர்வையான சரித்திரத்தை இங்கு அறிவோம்.

லார்ட் கானிங்: லாட்கானிங்கினுடைய காலத்தில், முதலில் வைஸிராயினுடைய ஆலோசனை சபைக்கு உத்தி யோகஸ்தர்கள் அல்லாத பெரிய தனவந்தர்கள் அங்கத்தினர் களாக நியமிக்கப்பட்டனர். அதனால் நம் நாட்டினர், ஆங்கி லேயரின் மனத்தில் நமது நாடாளும் திறமையை புகுத்த ஏதுவா யிருந்தது.

லார்ட் ரிப்பன்: இவர் காலத்தில் ஸ்தல சுய ஆட்சி என்ற புதிய சட்டம் ஒன்று 1872-ல் அளிக்கப்பட்டது. அதனால் பெரிய நகரங்களிலும், பட்டணங்களிலும் நிர்வாக சபைகள் ஏற்பட்டன. ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டு கள், கிராம பஞ்சாயத்துகள் முதலியவை ஸ்தல சுய ஆட் சிக்கு அடிப்படைகளா யிருந்தன. இவ்வுரிமை இந்தியர் களிடத்து ஆட்சி புரியும் சக்தியை வளர்த்தது.

லார்டு டப்ரின்:

லார்டு டப்ரினுடைய காலத்தில்தான் (1885-ல்) இந்திய தேசீய காங்கிரஸ் மஹா சபை தோன்றலாயிற்று. அச் சபையைக் கூட்டியதின் நிமித்தம் நம் நாட்டின் ரத்தினங் களில் பலர் அச்சபையின் அங்கத்தினராயினர். அதுமுதல் இந்நாட்டில் தேசபக்தி பெருகிச் சுதந்திர தாகம் வளர்ந்து கொண்டே வருகிறது.

லார்டு லான்ஸ்டௌன்.

1892-ல் லான்ஸ் டௌன் பிரபு வைசிராயாக இருக்கும்பொழுது, புதிய கௌன்ஸில் ஆக்ட் என்ற சட்டம் உண்டாயிற்று. அதன் பிரகாரம் சட்ட சபைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் (ஓட்டு) உரிமை பெருகிற்று. சட்ட சபை அங்கத்தினர்கள் தமது வாதத்தை யெடுத்துக் கூறவும், ஆங்கில அதிகாரிகளைச் சபையில் கேள்விகள் கேட்கவும் சுதந்திரம் தரப்பட்டது.

லார்டு மிண்டோ:

லார்டு மிண்டோவின் காலத்தில் இந்தியர்களது வற்புறுத்துதலும், அரசாளும் திறமையும் ஆங்கிலேயரைப் பின்னும் சில உரிமைகளை நம் நாட்டினருக்கு வழங்கச் செய்தன. அதற்குக் காரணம் அக்காலத்து இந்தியா மந்திரியான மார்லியும், வைசிராயான மிண்டோவும் சேர்ந்து இந்தியர்களுக்குச் சில புதிய உரிமைகளை அளிக்கவேண்டுமென்று விரும்பியதே யாகும். அவர்களது முயற்சியின் காரணமாக சட்டசபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. கவர்னர்களுடையவும், வைசிராய்களுடையவும், மந்திராலோசனை சபையில் இந்திய அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்பட்டது. கடைசியாக இங்கிலாந்தில் இந்திய அலுவல்களைக் கவனித்துவரும் இந்தியா சபைக்கும், இரண்டு இந்திய அங்கத்தினர்கள் தேர்ந்து எடுக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானமாயிற்று.

லார்டு ஹார்டிஞ்சு:

லார்டு ஹார்டிஞ்சு பிரபுவின் காலத்தில் ஐரோப்பிய நாடுகள் எல்லாம் லோகக்ஷேமத்தின்பொருட்டு கூட்டிய சர்வதேச சங்கத்திற்கும் இந்தியப் பிரதிநிதியை அனுப்புவது

என்ற உரிமை யளிக்கப்பட்டது. ஸின்ஹா என்ற இந்தியா கவர்னரும் இவர் காலத்தில் தான் நியமிக்கப்பட்டார்.

லார்டு செம்ஸ்போர்டு;

சுதந்திரத்தை யடையப் பின்னும் தீவிரமாகத் துயர்ந்த தின் நிமித்தமாகவும், அப்பொழுதுதான் நடந்து முடிந்த ஐரோப்பிய யுத்தத்தில் திறமையுடனும், ராஜ பக்தியுடனும் இந்தியர்கள் ஆங்கிலேயரின் கட்சியிலிருந்து போர் புரிந்து உதவியதாலும், ஆங்கில அரசாங்கத்தார் இந்தியர்பால் பிரே மைகொண்டு, சில புது உரிமைகளை வழங்கினர். அவை களின் பலனாக இரட்டை யாட்சி யென்பது மாகாணங்களில் ஸ்தாபிதமாயிற்று. இந்தியருக்கு நாட்டை ஆளுவதில் சுதந் திரமும், பயிற்சியும் அளிக்கப்பட்டன. ஆயினும் தேசப் பாதுகாப்பு, ராணுவம், போக்கிஷம், ராஜீய ஏற்பாடுகள் போன்ற அரசியலின் முக்கிய அம்சங்களை ஆங்கிலேயரே வைத்துக் கொண்டிருந்ததால், சுதந்திரத்தைப் பின்னும் பெருக்கவேண்டுமென விரும்பிய இந்தியர்கள், காந்தி மஹா னைத் தலைவராகக் கொண்டு ஒத்துழையா இயக்கத்தை நடத்த ஆரம்பித்தனர்.

லார்டு ரீடிங் :

மேற்கூறப்பட்ட ஒத்துழையா இயக்கம் மீண்டும் பர வியது. அதனால் மஹாத்மா காந்தி சிறையானார். ஆனால் 1924-ல் தேக அசௌக்கியத்தால் லார்டு ரீடிங்கால் விடு விக்கப் பட்டார். அதற்குப்பின் தனியே நின்று வாதித்து வந்தால் பிரயோசனமில்லையெனத் தீர்மானித்து, சட்டசபை களில் அங்கத்தினராகித் துயர்ந்து வந்தால்தான் ஆங்கிலேய ரின் உள்ளத்தை உருக்கலாம் என எண்ணிச் சுயராஜ்யக் கட்சி என்னும் ஓர் கட்சியைச் சட்டசபைகளில் ஏற்படுத்தி ஸி

ஆர். தாஸ், மோதிலால் நேரு போன்றவர்கள் நம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பின்னும் போராடினார்கள்.



மஹாத்மா காந்தி

லார்டு இர்வின் :

ரீடிங் பிரபுவிற்குப்பின் இர்வின் பிரபு வைசிராயாக நியமிக்கப்பட்டு 1926-ல் இந்தியாவிற்கு வந்தார். அப்பொழுதும் சுதந்திரப் போர் நின்றபாடில்லை. அது பின்னும் வளர்ந்து கொண்டே வந்தது. அதைக்கண்ட ஆங்கில கவர்ன்மெண்டார் ஸர் ஜான் ஸைமன் என்ற சட்ட நிபுணரை இந்தியாவிற்கு அனுப்பி, இந்தியருக்குப் பின்னும் எவ்வளவு சுதந்திரம் அளிக்கலாம் என்பதை பரிசீலனை செய்துவர அனுப்பினர். அவர் தலைமை வகித்துவந்த கமிஷனில் இந்தியப் பிரதிநிதிகளே இல்லையாதலால், இந்தியர்கள் பின்னும் கிளர்ச்சி

செய்தனர். அச்சமயம் இங்கிலாந்தில் தொழிலாளர் கக்ஷித் தலைவராயிருந்த ராம்ஸே மாக்டோனல்ட் என்பவர் இந்தியா



செம்ஸ்போர்ட் பிரபு

இர்வின் பிரபு

விற்கு குடியேற்ற நாட்டின் அந்தஸ்தை அளிக்கவேண்டு மெனப் பார்லிமெண்டில் விவாதித்தார்.

இவையெல்லாம் ஒன்று சேர, 1930-ல் முதல் வட்ட மேஜை மகாநாடு லண்டனில் கூட்டப்பட்டது. காங்கிரஸ் வாதிகள் அதில் ஒரு பிரயோஜனமுமில்லை யென்று, கலந்து கொள்ள மறுத்துவிட்டனர். அதைக்கண்ட வைசிராய் மஹாத்மா காந்தியுடன் காந்தி இர்வின் ஒப்பந்தம் எனப்படும் ஓர் ராஜீய ஒப்பந்தத்தைச் செய்து முடித்தார். அடுத்தாற் போல் இரண்டாவது வட்டமேஜை மஹாநாடும் இங்கிலாந் தில் கூட்டப் பட்டது. அதற்குக் காந்தியடிகளே காங்கிரஸ் தரப்பில் தனிப் பிரதிநிதியாகச் சென்றார்.

லார்டு வில்லிங்டன் :

லார்டு வில்லிங்டன் என்பவர் 1931-ல் ராஜப்பிரதிநிதி யாகத் தேர்ந்து எடுக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தார். அவ

ருடைய காலத்திலும் ராஜீயக் கிளர்ச்சி வலுத்தது. ஆகவே 1935-ல் இந்தியத் துரைத்தனச் சட்டம் ஏற்பட்டது. அதன் மூலம் பிரிட்டிஷ் இந்தியாவும், இந்தியச் சிற்றரசர்களும் கூடி, மத்திய சர்க்காரில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதென்றும் மாகாணங்களுக்கு சுயஆட்சியைப் அளிப்பதென்றும் திட்டம் செய்யப்பட்டது.

லார்டு லின்லித்கோ (1936—):

மேற்கூறப்பட்டுள்ள சட்டம் தற்பொழுது வைசிராய் பதவி வகித்திருக்கும் லின்லித்கோ பிரபு காலத்தில்தான் (1937ஆம் ஏப்ரல்மீ 1உயில்) அமுலுக்கு வந்தது. பெரும்

வில்லிங்டன் பிரபு



லின்லித்கோ பிரபு

பான்மைக் கட்சியினரான காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தற்காலத்தில் 8-மாகாணங்களில் மாகாண சுயஆட்சியை ஏற்று நடத்தி வருகின்றனர். இவர்களுடைய ஆற்றலைக் கண்டு காருண்ய கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரத்தில் நம் நாட்டினருக்குப் பூரண சுதந்திரம் அளிப்பார்களென எதிர்பார்க்கப் படுகிறது.

வினுக்கள்

1. குறிப்பு எழுதுக: ஸ்தல சுய ஆட்சி, வட்டமேஜை மஹாநாடுகள், இரட்டை ஆட்சி.
2. மாகாண சுய ஆட்சி எச் சட்டத்தால் நம் நாட்டிற்களிக்கப் பட்டது ?
3. நம் நாட்டின் தலைவர்களில் யாராவதொருவரைப்பற்றி 6 வரிகள் எழுதுக.

25. ஆங்கிலச் சர்க்காரும் சிற்றரசர்களும்.

1. பிரிட்டிஷ் இந்தியாவும், சுதேச ராஜ்யங்களும்:

பிரிட்டிஷ் இந்தியாவையும், சுதேச ராஜ்யங்களையும் விஸ்தீரணத்திலும், ஜனத் தொகையிலும் ஒப்பிடுங்கால் சுதேச ராஜ்யங்கள் ஏறக்குறைய $\frac{1}{3}$ பங்கு நில பாகத்தையும், ஜனத் தொகையையும் கொண்டிருக்கிறது. சுதேச ராஜ்யங்களின் மொத்தத் தொகை 692. அவற்றில் பெரியவைகளும், சிறியவைகளும் அடங்கி இருக்கின்றன. இந்நாடுகளின் ஜனத் தொகை 770 லக்ஷம் என்று மதிக்கப்படுகிறது. இந்த ராஜ்யங்களிற் சில ஹிந்துக்களுக்கும், சில மகம்மதியர்களுக்கும் சொந்தமானவை.

2. சுதேச ராஜ்யங்களின் தொகுதிகள் :

சுதேச ராஜ்யங்கள் பரிபாலன சௌகரியத்திற்காக 3 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சிற்றரசு நாடுகளில் பெரிய ராஜ்யங்கள் நேராக வைசிராய்க்குக் கட்டுப்பட்டனவாகும். இரண்டாவது தொகுதியிற் சேர்ந்த நாடுகள் வைசிராயால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகளால் தனியேயும், தொகுக்கப்பட்டும் ஆளப்படுகின்றன. மூன்றாவது தரமான சிறிய நாடுகள் மாகாணக் கவர்னர்களால் கண்காணிக்கப் பட்டு வருகின்றன.

அரசியல் திட்டம் :

சுதேச நாடுகளில் காணப்படும் அரசியல் திட்டமானது பிரிட்டிஷ் இந்தியாவிற்கும், சுதேச ராஜ்யங்களுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தத்தைப் பொருத்ததாகும். ஒவ்வொரு சிற்றரசரும் தம் நாட்டைச் சுதந்திரத்துடன் ஆளலாம். ஆனால் அண்டை அயல் நாடுகளுடன் உடன்படிக்கையாவது, யுத்தமாவது, வேறு எவ்வித பொது ஏற்பாடாவது செய்து முடிக்கக் கூடாது. ஒவ்வொரு சிற்றரசரும் தமது நாட்டில் ஒரு ஆங்கில ஸ்தானிகரை ஏற்க வேண்டும். அவர், ஆட்சி முறையைக் கண்காணித்து வருவதுடன், தேவையான சமயங்களில் யோசனையும் கூறுவார். சுதேச மன்னர்களின் ஆட்சி ஒழுங்கு பொருந்தி யிருக்கும் வரை, ஆங்கில அதிகாரிகள் அவருடைய ராஜீய விஷயங்களில் தலையிடமாட்டார்கள். அவ்வாறு இல்லாமல், கடுமையான ஆட்சியாலோ, ஏறிய கடனாலோ அல்லது வார்சுப் போராலோ ஒரு சுதேச நாட்டு ஜனங்கள் கஷ்டத்திற்குள்ளானால் ஆங்கில அரசாங்கத்தார், அந்நாட்டு விஷயங்களை நேராக்கும் வரை, ராஜ்ய பாரத்தை ஏற்றுப் பின்பு சீர்மை ஏற்பட்டவுடன், திரும்பித் தந்துவிடுவார்கள். அகில இந்தியாவிற்குப் பொதுவான இருப்புப்பாதை, தந்தி, தபால் முதலிய இலாகாக்கள் மட்டிலும் ஆங்கிலத் துரைத்தனத்தார் வசமே யிருக்கும்.

3. இரு ராஜாங்கத்தினருடைய பரஸ்பரக் கடமைகள் :

சுதேச மன்னர்கள் ஆங்கில அரசாங்கத்தாருக்கு யுத்த காலங்களில் சேனையைக்கொண்டும், பணத்தைக்கொண்டும், உதவவேண்டுமென்பது ஓர் முக்கிய நிபந்தனையாகும். ஆங்கில ஸ்தானிகர்களுக்கும், அவர்களுடைய படைகளுக்கும் சுதேச மன்னர்களே சம்பளம் கொடுக்கவேண்டும். இதற்குப் பிரதியாக ஆங்கில அரசாங்கத்தார் பின்வரும் ஏற்பாடுகளை

ஏற்று இருக்கிறார்கள். (1) பிரிட்டிஷ் இந்தியா கவர்ன்மெண்டார் உள்நாட்டிலாவது, வெளி நாடுகளினின்றாவது சுதேச மன்னர்களுக்கு தோன்றும் எதிர்ப்புக்களைப்போக்கி அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். (2) சுதேசமன்னர்களின் மக்கள் கல்வி பயிலுவதற்காகக் கலாசாலைகள் ஏற்படுத்தவேண்டும். அப்படிப்பட்ட ஸ்தாபனங்களை இன்று நாம் ஆஜ்மீர், ராஜ்கோட், இந்தூர், லாகூர் முதலான இடங்களில் காணலாம் (3) சுதேச மன்னர்களின் வார்சுகளுக்கு யுத்தமுறையை பயிற்றுவிக்க ஓர் கலாசாலை நிருமிக்கப்படவேண்டும். அது தற்பொழுது டேராடேன் என்ற இடத்திலிருக்கிறது (4) இவை நீங்க, நரேந்திர மண்டலம் என்று கூறப்படும் (The Chamber of Princes) சிற்றரசு மஹாசபை ஒன்று தனியாக அமைக்கப்படடவேண்டும். அச் சபையில் சிற்றரசர்களாகிய அங்கத்தினர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்கான வழிகளை ஆராயலாம்.

4. சில முக்கிய சுதேச நாடுகள்:

வைசிராயின் நேர் பார்வையில் உள்பட்ட நாடுகள்	ஏஜென்ஸி நாடுகளில் முக்கியமானவை	மாகாண கவர்னர்களுக் குட்பட்டவை
காஷ்மீர் (வட இந்தியா)	குவாலியர், இந்தூர் (மத்திய இந்தியா)	பாடியாலா, ராம்பூர் கூச்பீஹார் (வட இந்தியா)
பரோடா (வட இந்தியா)	பிகானீர், ஜெய்பூர் (ராஜ புதனம்)	கோலாப்பூர் (தக்ஷிணம்
ஹைதராபாத், மைசூர் (தக்ஷிணம்)		
திருவாங்கூர் (தென்னிந்தியா)	கிலட் (பெலுஜிஸ்தானம்)	கொச்சி, புதுக்கோட்டை (தென்னிந்தியா)

வினுக்கள்

1. ஆங்கில அரசாங்கத்தாரும், சுதேச மன்னரும் ஒருவருக்கொருவர் எவ்வண்ணம் உதவிக் கொள்ளவேண்டும்?
2. சுதேச ராஜ்யங்கள் எவ்வெவ்வித பாகுபாடுகளைக் கொண்டுள்ளன?
3. சுதேச நாடுகளில் அரசியல் திட்டத்தை விளக்குக.

26. தற்கால இந்திய அரசாங்க முறை

தற்காலத்திய இந்திய அரசியல் முறை மூன்று முக்கிய பாகுபாடுகளைக் கொண்டுள்ளது. அவைகளாவன: (1) இங்கிலீஷ் பார்லிமேண்டும், இந்தியா சபையும், (2) இந்திய சாம்ராஜ்ய ஸர்க்கார் (3) மாகாண சுய ஆட்சி. இவைகளில் ஒவ்வொன்றையும் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

1. **ஆங்கிலப் பார்லிமேண்ட்:**

a. இந்திய அரசியலுக்கு இங்கிலீஷ் பார்லிமேண்ட் தான் அடிப்படையானது. இங்கிலீஷ் பார்லிமெண்டிற்குத் தலைவர் இங்கிலாந்தின் பிரதம மந்திரி ஆவர். அவருக்கு ஆலோசனை கூறக் **காபினெட்** என்ற சிறு மந்திரி சபையுமுண்டு. அங்கு நடக்கும் தீர்மானங்கள் பிரதம மந்திரியின் மூலம் அரசருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவருடைய ஆமோதிப்பை அடையும்.

(b) இந்திய ராஜ்யபாரம் செவ்வனே நடைபெறுவதற்காக மேற்பார்வைச் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தியா சபை எனப் பெயர். அதற்குக் காரியதரிசியான இந்தியா மந்திரி என்பவரும், அதன் அங்கத்தினர்களும் இங்கிலாந்தின் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் அரசரால் நியமிக்கப்படுவார்கள். ஆனால் அவ் வங்கத்

தினர்களில் ஒவ்வொருவரும் குறைந்தது 10 வருஷம் இந்திய அரசியலில் அனுபவம் பெற்றவர்களா யிருக்க வேண்டும். அச் சபைக்கு மூன்று இந்தியப் பிரதிநிதிகள் தேர்ந் தெடுக்கப் படுகிறார்கள். இந்தியாவில் நடக்கும் முக்கிய சம்பவங்களுக் கும், அரசியல் திட்டங்களுக்கும் இந்தியா மந்திரியே ஜவாப் தாரி ஆவர். அவர் பார்லிமெண்டில் அவ் வப்பொழுது விஷ யங்களை எடுத்து விளக்குவது மல்லாமல் ஒவ்வொரு வருஷக் கடைசியிலும் இந்திய அரசியல் நிர்வாக அறிக்கை ஒன்றை யும் வெளியிட வேண்டும். இச் சபையோருக்கு இங்கிலீஷ் பொக்கிஷத்தி லிருந்து சம்பளம் வழங்கப்படும்.

(c) இந்தியா ஹைகமிஷனர்: இந்திய ஹைகமிஷனர் என்போர் இந்தியா மந்திரிக்கு உதவி புரியும் முக்கிய உத்தி யோகஸ்தர் ஆவர். கடன் வாங்குதல், வெளி நாடுகளுடனும், இந்தியாவுடனும் வியாபார ஒப்பந்தங்கள் முடித்தல், இந்திய மேலதிகாரிகளுக்கு உபகாரச் சம்பளம் அளித்தல், வெளி நாடுகளுக்குக் கல்விக்காகச் செல்லும் இந்திய மாணவர் களுக்கு உபகாரம் முதலிய வேலைகள் மேற் கூறப்பட் டுள்ள உத்தியோகஸ்தரால் மேற் பார்வையிடப்படும். அவருக்கும், அவருடைய சிப்பந்திகளுக்கும் சம்பளம் இந்தியப் பொக்கி ஷத்தி லிருந்து தரப்படும்.

2. இந்திய சாம்ராஜ்ய சர்க்கார்:

இங்கிலாந்தி லிருக்கும் இந்தியா மந்திரிக்குக் கட்டுப்பட் டவரும், அவருக்குத் தக்க யோசனை கூறுபவரும் இந்தியா வில் ஏற்படுத்தப்பட் டிருக்கும் ராஜப் பிரதிநிதி அல்லது வைஸ்ராய் என்பவர் ஆவர். அவருக்கு ஆலோசனை கூற 7 அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு சபை உண்டு. அவர்களில் மூன்று பேர் இந்தியர்கள். எஞ்சியவர்களில் மூன்று பேர்

ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்தவர்களும், ஒருவர் பாரிஸ்டரும் ஆவர். வைஸிராய் உள்பட இந்த எட்டுப் பேர்களும் அரச ரால் நியமிக்கப்படுவார்கள். அவர்களுக்குச் சம்பளம் இந்தி யப் பொக்கிஷத்தி லிருந்தே வழங்கப்படுகிறது.

ராஜாங்க சபையும், மத்திய சட்டசபையும் :

பிரிட்டிஷ் இந்தியாவிற்குப் பொது சபைகளாயிருக்கும் மத்திய சட்டசபையும் (Central legislature) ராஜாங்க சபையும் (Council of state) ஆலோசனை செய்து இந்தி யாவின் நலத்திற்காக நிறைவேற்றும் சட்டங்களை வைசிராய் ஏற்கவோ நிராகரிக்கவோ அதிகாரம் உண்டு. மத்திய சட்ட சபையில் 144 அங்கத்தினர்கள் உண்டு. அவர்களில் நிய மிக்கப்பட்டவர்கள் 40 பேர்கள் ஆவர். அவர்களில் உத்தி யோகஸ்தர்கள் 29 பேர்களுக்குமேல் இருக்கக்கூடாது. ராஜாங்க சபைக்கு மொத்த மெம்பர்கள் 60. அவர்களில் உத் தியோகஸ்தர் 20 பேர்கள்தான் இருக்கலாம். இச்சபைகளுக் குச் சாதாரணமாக மூன்று வருஷகாலம் அதிகாரமுண்டு. ஆனால் இச்சபைகளை வைசிராய் அவசியமிருந்தால் நீடிக்கச் செய்யலாம்.

3. **மாகாண ஆட்சி:**

a. **இரட்டையாட்சி:**

வைசிராய்க்கு ராஜாங்க விஷயங்களில் ஒவ்வொரு மாகா ணத்திலும் உதவிபுரிய கவர்னர் உண்டு. மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்களினால் அவருக்கு 4 பேர் அடங்கிய நிர்வாக சபை ஒன்று இருந்தது. அதில் இரண்டு பேர் இந் தியர்கள். இவர்கள் நீங்க ராஜ்ய காரியங்களை நடத்திவர சில மாற்றப்பட்ட இலாகாக்களுக்கு மூன்று மந்திரிகள் இருந் தார்கள். அவர்கள் சட்டசபைகளில் ஜனப்பிரதிநிதிகளுக்கு

தங்கள் இலாகாக்களைப் பொருத்தமட்டிலும் விஷயங்களை யெடுத்துக் கூறிவந்தனர். ஆனால் அரசியலின் முக்கிய அம் சங்கள் கவர்னர்களின் கையிலேயே இருந்து வந்ததால் இரட்டையாட்சி சரிவர நடக்கவில்லை. ஜனநாயக விருப்பத் திற்கேற்றதாகவுமில்லை. ஆனதுபற்றி 1937-ல் மாகாண சுயஆட்சி அமுலுக்கு வந்தது. ஆனால் இது 1935-ம் வரு ஷத்திலேயே பார்லிமெண்டில் இயற்றப்பட்டது.

b. மாகாண சுயஆட்சி:

இம்மாகாண சுயஆட்சியையும் கண்காணிக்க கவர்னர் விசேஷ அதிகாரத்தைப் பெறலானர்.

அப்புதிய திட்டத்தின்படி மாகாண சுயஆட்சி ஒவ் வொரு மாகாணத்திலும் கவர்னரால் நியமிக்கப்படும் பிர தம மந்திரியிடம் ஒப்புவிக்கப்படும். அப்பிரதம மந்திரி பெரும்பான்மைக் கட்சியிலிருந்தே நியமிக்கப்படுவார். பிர தம மந்திரிக்கே மற்ற மந்திரிகளை ஏற்படுத்திக்கொள்ள அதி காரமுண்டு.

மாகாண சட்ட சபைகள் :

இவ்வாட்சி செவ்வனே நடைபெறுவதற்கு அவசியமான புதிய சட்டங்களை ஏற்படுத்துவதற்கும், பழைய திட்டங் களை மாற்றுவதற்கும், கீழ் சபை, மேல் சபை என இரண்டு சபைகள் உண்டு. சென்னை மாகாணத்தில் ஜனநாயகப் பிரதி நிதிகளடங்கிய கீழ் சபையில் 215 ஸ்தானங்களும், தன வான்கள் நிறைந்த மேல் சபையில் 56 ஸ்தானங்களும் உண்டு.

காங்கிரஸ் கட்சியின் ஆட்சி :

1937-ல் மாகாண சுயஆட்சி அமுலுக்கு வரவே, இந் தியா முழுவதிலும் 8 மாகாணங்களில் சட்டசபைகளில்

பெரும்பான்மை ஸ்தானங்களை வகிக்கும் காங்கிரஸ் கட்சியினர், ராஜ்யபாரத்தை ஏற்று நடத்திவருகிறார்கள். அவர்கள் அரசியல் வகித்திருக்கும் மாகாணங்கள் பின்வருபவனவாகும். மதராஸ், பம்பாய், ஒரிஸா, மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், பீஹார், எல்லைப்புற மாகாணம், அஸ்ஸாம்.

நம் மாகாண ஆட்சி.

நம் மாகாணப் பிரதம மந்திரி கனம் ஸி. ராஜகோபாலாசாரியார் ஆவர். அவர் நீங்கப் பல இலாகாக்களைக் கவனித்துவரத் தனி மந்திரிகளுமுண்டு. ஆனால் கனம் பிரதம மந்திரியும், அவரது சகாக்களும் இரண்டு வருஷத்திற்குள்ளாகவே அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அவைகளில் முக்கியமானவை. மதுவிலக்கு, விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க இயற்றிய சட்டம், குடிசை கைத்தொழில் அபிவிருத்தி, கிராம புனருத்தாரணம், ஹரிஜன முன்னேற்றம் முதலியனவாகும்.

பிள்ளைகளே, நம் மாகாணம் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஒவ்வொரு ஜில்லாவும் பல தாலூகாக்களைக் கொண்டிருக்கிறதென்றும், ஒவ்வொரு தாலூகாவும் பல கிராமங்களைக் கொண்டுள்ளதென்றும் நீங்கள் அறிவீர்கள். மேலும் ஒவ்வொரு தொகுதியும் எந்த உத்தியோகஸ்தர்களால் எவ்வண்ணம் ஆளப்பட்டு வருகிறதென்றும் உங்களுக்குத் தெரியும். கூடிய சீக்கிரத்தில், சோழர்களின் காலத்தில் சிறந்து விளங்கியதுபோல் கிராமங்கள் செழிப்புற்றுப் புதுமாதிரியான கிராமப் பஞ்சாயத்துக்களை பெற்று, நம் நாட்டின் சுபிக்ஷத்தைப் பெருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வினக்கள்

1. மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களின் பயனுக ஏற்பட்ட இரட்டை ஆட்சி ஏன் பயன்தரக்கூடியதாயில்லை ?
2. மாகாண ஆட்சி எவ்வண்ணம் நடைபெறுகிறது ?
3. இந்திய சபை என்பது யாது? எவ்விதம் அது முக்கியமானது ?
4. குறிப்புகள் தேவை: இந்தியா ஹை கமிஷனர், ராஜாங்க சபை.

27. தற்காலத்துப் பிரிட்டிஷ் இந்தியாவும், அதை முன்னேறச் செய்ய நமது கடமைகளும்.

தற்காலத்தில் அமுலிலிருந்துவரும் 1937-ஆம் ஆண்டு இந்தியச் சட்டம் சமஷ்டி ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்துவது என்பதை முக்கிய லக்ஷியமாகக் கொண்டது. ஆனால் மாகாணச் சுயஆட்சியில் இந்திய மக்கள் தங்களது மேன்மை பொருந்திய திறனைக் கிரியாம்சையில் தெரிவித்துள்ளதின் நிமித்தம் ஆங்கிலச் சர்க்கார் இந்தியாவிற்குக் கூடிய சீக்கிரத்தில் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் கொடுக்க யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நம் நாடு அடையும் பொழுது நம் நாட்டு மக்கள் அதையும் நிர்வகிக்கச் சக்தி வாய்ந்தவர்களென அறிவுறுத்துவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

2. ஜன சமூகப்பொது நிலை :

ஸ்தல சுய ஆட்சி நமது பிரதிநிதிகளால் செவ்வனே ஆளப்பட்டு வருகிறது. அதன் நிமித்தம் ஜன ஸமூகப் பொது நிலை பல துறைகளிலும் மேம்பாடு அடைந்திருக்கிறது. ஆயினும் பொது மக்கள் தம் பிரதிநிதிகளுடன் பின்

னும் ஒத்துழைத்தால் இன்னும் நாம் அதிக சௌகரியங்களை அடையலாம்.

இங்கு நமக்கு தற்பொழுது என்னென்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கிற தென்பதைச் சுருக்கமாக அறிவோம்.

a. அமைதி :

இந்தியச் சரித்திரத்தை ஆதியோடந்தமாய்க் கற்றவர்கள் நம் நாடு எத்தனை தடவை அந்நிய நாட்டினரால் தாக்கப்பட்டுக் கஷ்டத்திற்குள்ளாயிற் றென்பதை அறிவார்கள். அதற்குக் காரணம் எல்லைப்புறங்கள் சரியாகப் பாதுகாக்க முடியாமலிருந்ததே யாகும். அந்த நுட்பத்தை அறிந்த ஆங்கில அரசாங்கத்தார் பெரும் பணச் செலவின் பேரிலும், போர் வீரர்களின் உதவியின் பேரிலும் எல்லைப் புறத்தை வெகு பத்திரமாகக் காத்து வருகின்றார்கள். அதனாலேயே நாம் தற்பொழுது அயல் நாட்டார்களின் எதிர்ப்பினின்றும் காக்கப்பட்டு வருகிறோம்.

உள் நாட்டில், பிண்டாரிகள், தக்கர்கள், மலைநாட்டினர், குற்ற பரம்பரை ஜாதியார், காபூலிகள் போன்ற கொள்ளைக் கூட்டத்தாரின் அட்டூழியங்கள் வேருடன் களையப் பட்டு தேச மக்களுக்கு அமைதியும், க்ஷேமமும் நிறுவப்பட்டிருக்கின்றன. இப் பெரும் முயற்சி பெரும் படையைக் கொண்டும், தகுந்த போலீஸ் ஏற்பாட்டைக் கொண்டும் செய்யப்படலாயிற்று.

இவை நீங்க, அநியாய வரிகளைப் போக்குதல், நியாய வரி வசூல், நியாய விசாரணை, பாரபட்சமற்ற ஆட்சி முதலியவைகளும் மக்களின் கொடுமைகளைப் போக்கி, நலனைப் பெருக்கி, அமைதியை நிலவி இருக்கின்றன. மேற்கூறிய துறைகளில் சர்க்கார் குடிகளுக்குப் பின்னும் சௌகரியங்களைப் பெருக்க முயன்று வருகிறார்கள்.

b. கல்வி :

18-ஆம் நூற்றுண்டுடன் தற்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நம் நாட்டில் கல்வி அபிவிருத்தி அடைந்திருக்கிறதென்றே கூற வேண்டும். சர்வ கலாசாலைகள், மாகாண கலாசாலைகள், தனிக் கலாசாலைகள், உயர்தரப் பள்ளிக்கூடங்கள் முதலியவை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்காகவும், பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் அதை இலவசக் கட்டாய ஆரம்பக் கல்வியாக மாற்றுவதே நமது லக்ஷியமாக இருத்தல் வேண்டும். அத்துடன் முதியோர் கல்வி யென்பதும் கல்வித்துறையில் முன்னேற்ற மடையாத நம் நாட்டிற்கு மிக்க அவசியமும், அவசரமுமாகும். அதற்குச் சர்க்கார் போதிய அளவு ஆதரவு அளிக்க வேண்டும்.

c. பொது சுகாதாரம் :

கல்வியின் முன்னேற்றம் எப்படி நம் நாட்டில் முக்கியமான அரசியல் அவசரத் திட்டமோ, அதே மாதிரி சுகாதார நிலையும் நம் நாட்டில் பெரிதும் சீராக்கப்பட வேண்டிய விஷயமாகும். அதைப் பயன் படுத்தப் பொதுமக்கள் ஒத்துழைத்தாலன்றி அது இயலாத காரியமாய் முடியும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் கோட்பாடு ஒவ்வொருவருடைய ஞாபகத்திலும் பதிந்திருக்க வேண்டும். ஒவ்வொருவரும், கூடிய வரையில் தம்மாலும் பிறருக்கு எடுத்துக் கூறியும், சுகாதார நிலையைப் பண்படுத்த வேண்டும். 1938ஞ் சென்னை மாகாணக் கவர்ன்மெண்டார் இயற்றியப் பொது சுகாதாரச் சட்டத்தின் திட்டங்களை ஒவ்வொருவரும் நன்கு அறிவதுடன், தினசரி வாழ்க்கையிலும் பின் பற்ற வேண்டும்.

ராஜதானிகளிலும், ஜில்லா தலைநகரங்களிலும், பல முக்கியப் பட்டணங்களிலும், சில கிராமங்களிலும் போது ஆஸ்பத்திரிகளும், கால்நடை ஆஸ்பத்திரிகளும் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமே ஆயினும், கிராமங்களில் வைத்திய சாலைகள் பின்னும் நிர்மாணிக்கப் படவேண்டும். ஆங்கில முறை, ஆயுர்வேத முறை, சித்தர் முறை, யூனனி முறை முதலியவைகள் அனைத்துமே சிகிச்சை செய்வதில் அனுஷ்டிக்கப் படவேண்டும்.

தற்பொழுது பைத்தியம், குஷ்டம், க்ஷயம், தோத்து வியாதிகள் முதலியவைகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தனி ஆஸ்பத்திரிகளும் அதிகமாக்கப்படவேண்டும்.

d. போக்குவரவு சாதனங்கள் :

தாது வருஷப் பஞ்சத்திற்கும், ஒரிஸா பஞ்சத்திற்கும் பின்பே இந்திய சர்க்கார் கூடுமானவரை போக்குவரவு சாதனங்களைப் பெருக்கியும், திருத்தியுமிருக்கிறார்கள். எல்லாக் கிராமங்களிலும் தகுதியான ரஸ்தாக்கள் அமைக்கத் திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. இச்சீர்திருத்தம் நம் உள்நாட்டு வியாபாரத்தைப் பெரிதும் பெருக்குவதுடன், பிரயாணம் செய்வதற்கும் சௌகரியம் அளிக்கிறது. இது நிற்க, ரயில், மோட்டார், ஆகாயவிமானம், முதலியவைகளின் உதவியால், போக்குவரவு துரிதமாக நடைபெற்று வருகிறது. தந்தி, தபால், டெலிபோன், ரேடியோ (ஒலி பரப்பும் கருவி) முதலியவைகளின்மூலம் சமாசாரங்கள் வெகு விரைவில் பரவச் சாத்தியமாயிருக்கிறது. உள்நாட்டு வியாபாரத்திற்குச் சில அகலமான கால்வாய்களும் வெட்டப்பட்டிருக்கின்றன.

3. பொருளாதார நிலை.

உலகமெங்குமே, தற்காலத்தில் பொருளாதார நிலை சீர் கேடுற்றிருக்கிறது. ஆகவே நாம் நாட்டின் நிலையும் தாழ்ந்து இருக்கிறதென்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆயினும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காகச் சர்க்கார் சில சட்டதிட்டங் களைச் செய்யாமலிருக்க முடியாது. விவசாயம், கால்நடை முதலியவைகளின் நிலைமை மிகவும் உயர்த்தப்படல்வேண்டும். பண்டைக் காலத்தில் நம் நாட்டின் செல்வத்தையும் சுகத்தை யும் பெருக்கிவந்த கைத்தொழில்கள் மீண்டும் ஆதரவு பெற வேண்டும். தற்கால நிலைமையில், குடிசை கைத்தொழிலுக் குப் போதுமான ஆதரவு ஏற்படவேண்டும்.

விவசாயிகளுக்குப் போதிய பொருள் கிடைக்கவும், கைத்தொழிற் சங்கங்களுக்குப் போதிய பணம் கிட்டவும், கூட்டுறவுச் சங்கங்களை நம் நாட்டில் அதிகப்படுத்தவேண்டும்.

நம் தேசம் பொருளாதாரத் துறையில் முன்னேற்ற மடைய வேண்டுமானல், கூட்டுறவு சங்கங்களின் விருத்தி யும், அதற்கான சாதனைகளும் இன்றியமையாதவை என் பது மறக்கற்பாலதன்று.

இவை நிற்க நமது நாட்டில் விவாகங்களிலும், மற்ற சடங்குகளிலும், ஜனங்கள் செலவழிக்கும் தொகை குறைக் கப்படுவதுடன் பணத்தை சேமிப்பதற்கான முறைகளையும் ஜனங்கள் கைக்கொள்ளவேண்டும்.

4. மதநிலை.

நம் நாட்டில், தற்காலத்திய மதநிலை ஒரு பெரிய கொந் தளிப்பினிடையே சிக்குண்டிருக்கிறது. தொன்றுதொட்டு தென்னிந்தியாவிலும், இதர இடங்களிலும் வர்ணாச்ரம தர் மம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதால் அம்முறையே அம்மதத்

தின் வலிமைக்கும், நாட்டின் க்ஷேமத்திற்கும் ஏற்றதென அபிப்பிராயப்படுகிறார்கள். பின்னுமொரு தொகுதியினர் தீண்டாதாரையும், தாழ்த்தப்பட்டோரையும், இன்னும் ஒதுக்கி வைத்தல் ஹிந்து மதத்தின் வன்மையைக் குறைப்பதோடு, அதன் கொள்கைக்கும் தீங்கிழைத்ததாகும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இதைக்குறித்த அபிப்பிராயங்கள் எப்படியிருந்தபோதிலும், யுகதர்மத்தை யநுசரித்தும், கால தேச வர்த்தமானத்தை ஒட்டியும், உயர்ஜாதி ஹிந்துக்கள் கூடுமானவரையிலும் எல்லா ஹிந்துக்களையும் தம்முடன் இணைத்துக்கொள்வதே ஏற்றதாகுமென அறிஞர் அறைகின்றனர்.

குறிப்பு :—ஒற்றுமையைப் பரப்புங்கள் :

முக்கியமாக ஒரு உணர்ச்சி நம் உள்ளத்தில் பதியவேண்டியது அவசியம். ஹிந்துக்கள், மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய ஜாதியார்கள் நிறைந்துள்ள நம் நாட்டில் எல்லா மதத்தினரும், எல்லா ஜாதியினரும் ஒன்றுகூடி, நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது நம் முக்கிய கடமையாகும். நாடு செழித்தாலன்றோ அனைவருக்கும் சுகம்.

வினாக்கள்

1. நம் நாட்டில் அமைதி எவ்வண்ணம் நிலவப்பட்டிருக்கிறது?
2. பொது சுகாதார நிலையை உயர்த்த நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய பிரயாசை என்ன ?
3. நம் நாட்டில் காணப்பெறும் போக்குவரவு சாதனங்கள் யாவை ?
4. நம் நாட்டின் பொருளாதார நிலையை மேன்மைபடுத்த நாம் செய்யத் தக்கது யாது ?

Printed at the T. V. C. Press, Madras,—30-11-'39.